பக்கங்கள் 24

உதயன்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 353 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 28, வெள்ளி 14.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான காலநிலைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக அனைத்து பிரதேசங்களிலும் மாலையிலும் இரவிலும் சீரான அத்துடன் குளிரான காலநிலை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக்கூடியது 31 செல்சியஸ் பாகையாகவும்

## வெள்ளாங்குளத்தில் முன்னாள் போராளியின்

# கொலைக்கு பயன்படுத்திய ரி-56 துப்பாக்கி மீட்பு



### 4 பேரிடம் தீவிர விசாரணையாம் பொலிஸார் தெரிவிப்பு

“இந்தச் சூட்டுச் சம்பவத்துக்கு தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு 4 விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*பொலிஸ் திணைக்கள பதில் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குணசேகர.*

யாழ்ப்பாணம், நவ.14

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றிய - முன்னாள் போராளியான, கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் மீது சூடு நடத்தப் பயன்படுத்தப்பட்ட ரி-56 ரகத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் 4 பேரிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொலைக்குப் பயன்படுத்திய ரி-56 ரகத் துப்பாக்கி, சூடு நடத்தப்பட்ட இடத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் - வேலியோரமாக வீசப்பட்டிருந்த நிலையில், பொலிஸ் மோப்பநாய் அதனைக் கண்டுபிடித்தது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம், வெள்ளாங்குளம் கணேசபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இரவு 8.30 மணியளவில் நகுலேஸ்வரன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது தலைப் பகுதியில் குறிபார்த்துச் சுடப்பட்டிருந்தது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரி

❖22 ஆம் பக்கம் பார்க்க



நகுலேஸ்வரன்



படுகொலை செய்யப்பட்டவரின் மனைவி மற்றும் இரு குழந்தைகள்.

“இரவு 7 மணியளவில் இந்திய வீட்டுத் திட்ட வீட்டுக்காக உறவினர்கள் சிலருடன் கல் அரிந்து கொண்டிருந்தார். அப்போது வீட்டைச் சுற்றிலும் மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. 8.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் ஒன்று கேட்டது. நான் அதைப் பற்றிப் பெரிதாகச் சிந்திக்கவில்லை. அப்போது எனது சகோதரன் கத்திச் சத்தமிட்டு என்னைக் கூப்பிட்டார். நான் அங்கு ஓடிச் சென்ற போது எனது கணவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவரது தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. எனது அழுகைச் சத்தம் கேட்டு அயலவர்கள் திரண்டனர். பொலிஸார் வந்தபோது எனது கணவர் இறந்திருந்தார். கிராம மக்களின் நலனுக்கும், கிராமத்துக்காகவும் அவர் பல்வேறு முயற்சிகளைச் செய்திருந்தார். எனது கணவருக்கு எதிரிகள் யாரும் இல்லை.”

*சுட்டுக் கொல்லப்பட்ட நகுலேஸ்வரனின் மனைவி.*

## 6 நியதி சட்டங்கள் தயார்

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு 6 நியதிச் சட்டங்கள் வரையில் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், அவை விரைவில் மாகாண சபைக் கூட்டத்தின் போது சமர்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவுள்ளன என்றும் தெரிய வருகின்றது.

வடக்கு மாகாணசபையால் இதுவரையில் இரண்டு நியதிச் சட்டங்களே நிறைவேற்றப்பட்டுள்ளன. நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பனவே நிறைவேற்றப்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## கால்நடைகளை காப்பாற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 14

கடந்த வறட்சியான காலநிலை காரணமாக யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 22 கால் நடைகள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து கால்நடைகளுக்கான குடிதண்ணீர்த் தொட்டி அமைக்கும் நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த மே மாதத்திலிருந்து ஓகஸ்ட் மாதம் வரையிலான காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. நீர்நிலைகள் மாத்திரமின்றி வீடுகளிலுள்ள கிண

❖22 ஆம் பக்கம் பார்க்க

## காசநோயாளருக்கு எயிட்ஸ் சோதனை அவசியம்

யாழ்ப்பாணம், நவ.14

காசநோயின் தாக்கத்தை கண்டறிந்துள்ள நோயாளர்கள் எயிட்ஸ் நோய்க்கான மருத்துவப்பரிசோதனைகளை மேற்கொள்வதன் ஊடாக தங்களது ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

காசநோய்த்தாக்கம் உள்ளவர்கள் முக்கியமாக எயிட்ஸ் நோய்க்கான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். வைத்தி சாலைகளில் காச நோய்க்காகச் சிகிச்சை பெற்றுக் கொள்பவர்களின் தொடர் ஆரோக்கியத்துக்கான சிகிச்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## கட்டைக்காட்டில் முறியடிக்கப்பட்டது காணி அளக்கும் முயற்சி

### மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து பின்வாங்கினர் அதிகாரிகள்

நெல்லியடி, நவ.14

இராணுவத்தினரின் தேவைகளுக்காக வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு மற்றும் முள்ளியான் பகுதிகளில் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு முன்னேற்பாடாக, அவற்றை அளவிட வந்த நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து, தமது முயற்சிகளைக் கைவிட்டுப் பின்வாங்கியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டில் - ஜே/433 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 பேர்ச் காணிகள் இராணுவத்தினரின் தேவைகளுக்காகச் சுவீ

❖22 ஆம் பக்கம் பார்க்க



## வடக்கின் வாக்காளர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு மாகாணத்தின் வாக்காளர் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 24 ஆயிரம் பேரால் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டம் என்பவற்றில் ஒரே அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ளடங்கும், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு 4 லட்சத்து 41 ஆயிரத்து 509 பேராக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 8 ஆயிரத்து 623 பேரால் அதிகரித்து 4 லட்சத்து 50 ஆயிரத்து 132 பேராக மாறியுள்ளது. கிளி

❖22 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தர் கொலை: இருவருக்குத் தூக்குத் தண்டனை

### யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று விதித்தது



யாழ்ப்பாணம், நவ. 14

குடும்பஸ்தர் ஒருவரைக் கொலை செய்து, உடலைக் கிணற்றுக்குள் வீசினர் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து, குறித்த குடும்பஸ்தரின் மனைவிக்கும், வேறொருவருக்கும் யாழ். மேல்நீதிமன்று நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி நெடுங்குளம் பிள்ளையார் கோயில் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு சிவராசா

❖22 ஆம் பக்கம் பார்க்க

"ஒரு மரம் பட்டுப் போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நடுங்கள்".

-கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப் பட்டியலாளர்)

# ஐ.தே.கவுடன் பேச்சு எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை

## சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.14

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது குறித்தோ அல்லது எதிர்க்கட்சிகளின் பொது அணியில் சேர்வது பற்றியோ எந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தவில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பது தொடர்பான தீர்மானத்தை ஜாதிக ஹெல உறுமய எடுக்கவில்லை. எனினும் இதுவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சில் சிறந்த முன்னேற்றத்தை காணமுடிந்துள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மட்டுமே பேச்சு நடத்தப்பட்டது. தூய்மையான நாளை அமைப்பே ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தியிருந்தது. அந்த அமைப்பு ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு வெளியே உள்ள அமைப்பு.

அரசில் இருந்து விலகுவது பற்றி இதுவரை தீர்மானிக்கவில்லை. எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கட்சி எடுக்கும் முடிவு நாட்டுக்கு அறிவிக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



# இந்திய மீனவர் தூக்கு தொடர்பில் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை

## ஜனாதிபதியின் பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.14

இந்திய மீனவர்களை விடுதலை செய்வது குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் ஐந்து தமிழக மீனவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. இந்த மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று பிரதி அமைச்சர் பிரபா கணேசன் அண்மையில் இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தூதரகம் தண்டனை தொடர்பில் மேன்முறையீடு செய்யாமல் இருந்தால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கத் தயார் என ஜனாதிபதி தம்மிடம் குறிப்பிட்டார் என்று அவர் தெரிவித்திருந்தார்.

மேன்முறையீடு செய்தால் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆறு மாத காலம் வரையில் செல்லும் எனவும், அதனால் விடுவிப்பதற்கு கால தாமதமாகும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார் என்றும் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி அவ்வாறான ஓர் தீர்மானத்தை இதுவரையில் எடுக்கவில்லை என அவரது பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார். தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்த ஆதரவு கூட்டத்தை புறக்கணித்தது பல சேனா?

கொழும்பு, நவ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்தில் பொதுபல சேனா இயக்கம் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென்று கோரி எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்குப் பதிலடி கொடுக்கும் நோக்கில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைப்புக்கள் கொழும்பு சுகததாச அரங்கில் கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்திலேயே பொதுபல சேனா இயக்கம் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுபல சேனா இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் கிரம விமலஜோதி தேரர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். எனினும், அவர் தமது அமைப்பைப் பிரதிநிதித்துவம் செய்து கூட்டத்தில் பங்கேற்கவில்லை என பொதுபல சேனா இயக்கம் தெரிவித்துள்ளது. மாறாக பௌத்த கலாச்சார மையத்தின் ஸ்தாபகர் என்ற ரீதியில் இந்தக் கூட்டத்தில் கிரம விமலஜோதி தேரர் பங்கேற்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் தேசிய அமைப்புக்களால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுபல சேனா இயக்கம் ஆதரவளித்துள்ளது என்று சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. எனினும், இந்த தகவல்களில் உண்மையில்லை என பொதுபல சேனா இயக்கம் அறிவித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை எனவும் பொதுபல சேனா தெரிவித்துள்ளது. (ற)

# பௌதீக விஞ்ஞானத்தை மெருகூட்டி விஞ்ஞானிகளை உருவாக்க முடியும்

## பிரிட்டன் விஞ்ஞானி வின்சன் சிமித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.14

தற்கால இளைய சமுதாயத்தினர் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் பௌதீக விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்குகின்றனர். பௌதீக விஞ்ஞானத்தில் இவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை மேலும் மெருகூட்டுவதன் மூலமும் இவர்களுக்கு தேவையான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் எதிர்கால விஞ்ஞானிகளாக அவர்களை உருவாக்க முடியும். இந்த உருவாக்கம் பாடசாலைகளில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் அணு தொடர்பான ஆய்வை மேற்கொண்டு வரும் பிரிட்டன் விஞ்ஞானி வின்சன் சிமித்.

யாழ். பல்கலைக் கழக பௌதீகவியல் மன்றத்தால் அனைத்து பாடசாலைகளையும் சேர்ந்த உயர்தர மாணவர்களுக்கு புனித பரியோவான் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற பௌதிகவியலில் ஐன்ஸ்ரினின் புரட்சிகரமான சிந்தனைகள் என்ற கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விஞ்ஞானத்தின் எதிர்கால தேவை பற்றிய தெளிவை மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்த அவர் அணு மற்றும் துணிக்கைகள் தொடர்பான போதிய அறிவை மாணவர்கள் கொண்டிருக்கவும் அவை தொடர்பான ஆய்வுகளை மாணவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கும்படியும் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் வாழ்க்கை வரலாறு மற்றும் அணு தொடர்பான அவரது கண்டுபிடிப்புக்களையும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.



இந்த நிகழ்வில் பல பாடசாலைகளையும் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்களும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

விஞ்ஞானி வின்சன் சிமித் தனது முதுமாணி பட்டத்தினை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் கலாநிதி பட்டத்தினை பிறிஸ்ரல் பல்கலைக்கழகத்திலும் பெற்றவராவார். இவர் ஐரோப்பாவின் பிரபல்யமிக்கதும், பிரமாண்டமானதுமான அணு ஆய்வு மையத்தின் சிரேஷ்ட விஞ்ஞானிகளில் ஒருவராக விளங்குகிறார். (ற)

# உயர்நீதிமன்றின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளாது ஜே.வி.பி

## தேர்தலைத் தடுக்க 18இல் கொழும்பில் பேரணி; அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

கொழும்பு, நவ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமென்று உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள சட்ட வியாக்கியானத்தை ஏற்க முடியாதென திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது ஜே.வி.பி.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு மஹிந்த முன்னெடுக்கும் நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதற்கு ஜே.வி.பி. நடவடிக்கை எடுக்கும் என்றும், அதன் அங்கமாக எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் மாபெரும் எதிர்ப்புப் பேரணியை தமது கட்சி நடத்தும் என்றும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், உயர் நீதிமன்றின் சட்ட வியாக்கியானம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தான் மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏதேனும் சட்டச் சிக்கல் உள்ளதா என்றும் நான்கு வருடங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியுமா என்றும் உயர் நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கம் கேட்டிருந்தார்.

இது தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள சட்ட விளக்கத்தை ஜே.வி.பி. ஏற்காது. ஒருதலைபட்சமான முறையிலேயே விசாரணைகள் இடம்பெற்றன. அதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறை யாகவும் போட்டியிடுவதற்கு உள்ள சட்டச்சிக்கல்களைத் தெளிவுபடுத் துவதற்கு எதிர்த்தரப்பினருக்கு உரிய காலஅவகாசம் வழங்கப்படவில்லை. நன்கு திட்டமிட்ட அடிப்படையிலேயே இது விடயத்தில் ஜனாதிபதி காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளார்.

தனக்கேற்றாற்போல் ஒரு முடிவை பெறுவதற்கு அரசியல் விளையாட்டை பயன்படுத்தியுள்ளார். எனவே, மாற்றுத் தரப்புகளுக்கு உரிய கால அவகாசம் வழங்கப்படாது அவசரமாக வழங்கப்பட்டுள்ள இந்த விளக்கத்தை ஏற்கமுடியாது. நான் நீதிமன்றத்தை விமர்சிக்கவில்லை. எனினும், நீதித்துறையின் கட்டமைப்பு மஹிந்தவின் ஆட்சிக்குக் கீழேயே இருக்கின்றது.

முன்னாள் பிரதம நீதியரசரை நீக்கிவிட்டு தனக்குரியவர்களை அவர் நியமித்து தனக்குத் தேவையான தீர்ப்புகளை நீதிமன்றத்தின் ஊடாக பெற முயற்சிக்கின்றார். அந்த வகையில் ஜனாதிபதி மஹிந்த மூன்றாவது முறையாக போட்டியிட்டால் அது சட்டவி ரோதத் தேர்தலாகவே அமையும். அத்தோடு, நான்கு வருடங்களில் தேர்தல் நடத்தப்பட்டால் அதுவும் சட்ட விரோதமாகவே அமையும். எனவே, சட்டவிரோதமான தேர்தலைத் தடுத்து நிறுத்துவதற்கு ஜே.வி.பி. சகல நட வடிக்கைகளிலும் இறங்கும்.



இதன் ஓர் அங்கமாக கொழும்பில் எதிர்வரும் 18ஆம் திகதி மாபெரும்எதிர்ப்புப் பேரணியை நடத்தவுள்ளோம். அதேவேளை, சட்டவிரோத ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து ஜே.வி.பி. ஆழமாக சிந்திப்பதால் பொது வேட்பாளர் விவகாரம் குறித்து தற்போது எம்மால் கருத்துக் கூறமுடியாது. சட்டவிரோதத் தேர்தலை நடத்துவதைத் தடுப்பதற்கு அனைத்து மக்களும் ஒன்றுசேரவேண்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 28 வெள்ளி (14.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 353

# போராளியின் கொலைக்கு இராணுவத்தினரே பொறுப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், நவம்பர் 14

**மன்னார் வெள்ளாங்குளத்தில் முன்னாள் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரே பதில் சொல்ல வேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினர் மாத்திரம் தான் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் அவர்களே பொறுப்புக் கூறவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

'தற்போதைய சூழலில் இராணுவத்தினர் மாத்திரம்தான் ஆயுதம் வைத்துள்ளனர். அத்துடன் சம்பவம் இடம்பெற்றதும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம். எனவே அவர்கள்தான் இந்தக் கொலைக்குப் பதில் சொல்லவேண்டும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளம் பிரதேசத்தில், கணேசபுரம் பகுதியில் கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது-40) என்ற முன்னாள் போராளி நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பில் கேட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நெடுங்கேணியில் கடந்த ஏப்ரல் மாதம் இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தி மூன்று முன்னாள் போராளிகளைச் சுட்டுக் கொன்றனர். அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை மீள ஒருங்கிணைக்கின்றார்கள் என்று குற்றம் சாட்டியே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் தற்போது வெள்ளாங்குளத்தில் முன்னாள் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குறித்த பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம். அத்துடன் தற்போது இராணுவத்தினர் - முப்படையினர் தவிர்ந்த ஏனையோரிடம் ஆயுதங்கள் இல்லை. எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் தான் பதில் சொல்லவேண்டும்.

இராணுவத்தினர் வடபகுதியிலிருந்து வெளியேறுவதன் மூலமே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க

(22ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு யார் கையில் ?

செல்வம் எம்.பி கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 14

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இந்த நாட்டில் என்ன பாதுகாப்பு இருக்கின்றது என்று நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி யெழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வீடமைப்பு, பொறியியல் நிர்மாணத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

வரவு - செலவுத் திட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக நல்ல முறையில் வாழ்வதற்கான முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நேற்று (நேற்று முன்தினம்) கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் என்ற 2 பிள்ளைகளின் தந்தை துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர் 2012ஆம் ஆண்டு புனர்வாழ்வு பெற்று வந்தவராவார். இவர் சிறு துப்பாக்கியால் சுடப்படவில்லை. தூரத்திலிருந்து தான் சுடப்பட்டிருக்கிறார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட எமது போராளிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? அவர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுச் சத்தம் கேட்டதும் கீழே விழுந்தார் நகுலேஸ்

### கொலையுண்டவரின் மைத்துனர் சாட்சியம்

மன்னார், நவ. 14

சத்தம் கேட்டதும் அவர் விழுந்து விட்டார். நான் அருகில் சென்று பார்த்தபோது அவரது தலையிலிருந்து இரத்தம் வழிந்தது. மூளையும் வெளியேறிக் கொண்டிருந்தது என்று மன்னாரில் குடும்பஸ்தர் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவருடன் நின்றிருந்த அவரது மைத்துனரான வாகீசன் உயிரிழந்தவருடைய மனைவியின் தம்பி) தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் காவல்துறை அதிகாரியாக இருந்து பின்னர் புனர்வாழ்வு பெற்று விடுதலையான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் அவரது மைத்துனரான வாகீசன் தெரிவித்துள்ளதாவது:-

அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவரது வீட்டின் அருகே நானும் அத்தானும் (நகுலேஸ்வரனும்) இன்னொருவருமாக 3 பேர் கல் அரிந்துகொண்டிருந்தோம். இரவு நேரம் என்பதனால் மின்சார ஒளியில் வேலை இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இதன்போதே சூட்டுச் சத்தம் கேட்டது. உடனே அத்தான் கீழே விழுந்துவிட்டார். எழும்பவில்லை. அருகே சென்று பார்த்தபோது அவரது தலையிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவரில் எந்த அசைவும் காணப்படவில்லை. மூளையும் வெளியேறிக் கொண்டிருந்தது. அவர் கீழே விழுந்ததை அவரது இரண்டு மகள்களும் கண்டுள்ளனர் - என்றார். (த-4)

## இந்த வருடம் காச நோயால் 12 பேர் சாவு

யாழ்ப்பாணம்.நவ.14

யாழ்.மாவட்டத்தில் காச நோயின் தாக்கம் குறைவடைந்துள்ள போதும் இந்த வருடம் காசநோயினால் 12 பேர் இறந்துள்ளனர் என்று பண்ணைமார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் தகவல் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு 256 பேர் காச நோய்க்குச் சிகிச்சை

(22ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் மன்னிப்பு மீனவருக்கு வேண்டாம்

கொழும்பு, நவ. 14

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் சார்பாகவும் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டை இந்திய அரசு விலக்கிக் கொண்டால், மீனவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவார் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்திருந்த நிலையில், மேன்முறையீட்டை ஒருபோதும் விலக்கிக் கொள்ளப்போவதில்லை என்று இந்திய அதிகாரிகள் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கும், வடக்கு மீனவர்கள் மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தமிழக மீனவர்கள் சார்பில் கடந்த 11 ஆம் திகதி மேன்முறையீடு செய்யப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், மேன்முறையீட்டை விலக்கிக் கொண்டால், மீனவர்களை பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அவர் இந்தியத் தூதரகத்துக்கும் தெரியப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் பி.ரி.ஐ செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை

(22ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் கொலை; சந்தேக நபர் ஒருவர் கைது

### இருவருக்கு வலை வீச்சு

வடமராட்சி, நவ. 14

வடமராட்சியில் கடந்த சில வாரங்களுக்கு முன் குடும்பப் பெண் ஒருவர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட நிலையில் முள்ளிப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் இருவரை வலை வீசித் தேடி வருவதாகவும் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:-

வடமராட்சி முள்ளி வெளியில் பற்றைக் காடொன்றுக்குள் இருந்து கடந்த ஒக்ரோபர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் விவசாயம் வறட்சியால் பின்னடைவு

### அரச அதிபர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் விவசாயத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பில் அரச அதிபரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் நெற்பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது. வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளும் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளன. இதனைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருப்பதுடன், முன் ஆயத்த வேலைகளைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

சந்தை வாய்ப்பு மற்றும் நியாயமான விலையைப் பெற்றுத் தருமாறு உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் கோரிக்கை ஒன்றை முன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## 2 கோயில்களில் ஆயுதங்கள்; கைதானவர்கள் நிரபராதிகள்

### நால்வரை விடுவித்தது யாழ். மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோயில் மற்றும் அங்குள்ள பிள்ளையார் கோயில் என்பவற்றில் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட நான்கு பேருக்கு மான வழக்கில் அவர்கள் குற்றமற்றவர்கள் என இனங்கண்ட யாழ்.மேல்நீதிமன்று நால்வரையும் நேற்று விடுதலை செய்தது.


யாழ்.மேல் நீதிமன்றில்

(22ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 ★ 06 ★ 1982



மறைவு
14 ★ 11 ★ 2010

### அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்
(றீகன்)

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றாய்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
நான்கு ஆண்டுகள் சென்ற பின்னும்
என்றும் அழியா நினைவுகளுடன்

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (54072)(3.6.4)

குடும்பத்தினர்.

### ஊர்காவற்றுறை மீன் சந்தையை புனரமைக்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை பிரதேச சபை மீன் சந்தைக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கென பிரதேச சபை தனது சொந்த நிதியில் இருந்து ரூபா 25 லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. விரைவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-7)

### செயலமர்வு

'வண்ணத்துப் பூச்சிகளின் இறைக்கைகளைப் பலப்படுத்துவோம்' என்ற தொனிப் பொருளில் வவுனியாவில் அமைந்துள்ள சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிறு வவுனியா பிரதேச செயலகத்தின் கேட் போர் கூடத்தில் பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. செயலமர்வில் வளவாளராக உளநல மருத்துவர் எஸ். சிவதாஸ் கலந்துகொள்வார் என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார். (வ-402)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் செ.சசிகுமார் அவர்களின்
பாசமிகு தந்தை
**ஆறுப்பிள்ளை செல்வரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி. (54047)(6.3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### பொன்னையா திருச்செல்வம்
(ஓய்வுபெற்ற தபாலதிபரும்,
பருத்தித்துறை பிரதேச சபை
உறுப்பினரும்)



தோற்றம்
24.09.1947

மறைவு
07.11.2012

தந்தையாய், நல்ஆசானாய் எங்களை வாழவைத்த
தெய்வமாய் நல்லூக்கம் தரும் பரம்பொருளாய் வழிநடத்தி
எங்களைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் இரண்டானாலும்
தங்கள் மதிமுகம் எம்முன் நிழலாடுகின்றது
உங்கள் சமூகப்பணி எம்மக்கள் எல்லோர்
நெஞ்சங்களைவிட்டு அகலாது
என்றும் உங்கள் நினைவலைகளில் வாழும்.

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர். (52004)(7.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
10 · 01 · 1947

மறைவு
14 · 10 · 2014

கடந்த 14.10.2014 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் கந்தையா நயினார்
(அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்)

அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.05. 5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (54074)(4.6.3)

குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
19 · 09 · 1985



உதிர்வு
01 · 10 · 2014

### அமரர் சிவராசா நிசாந்த்
(14.11.2014)

ஏங்களோடென்றும் பிரியத்தோடு பேசிடும் எம் இனிய மகனே!
சென்று வருவேன் எனச் சொல்லிச் சென்றாயடா!
இன்று நீ எங்கேயென்று பகலிரவாய் தேடுகின்றோம் பாரின் மீது!
ஆரது கண்பட்டு அந்தர வழி சென்றாயடா!
உன் கணக்கை முடித்தெம்மை
கண்ணீரில் மிதக்க விட்ட - அந்தக் கொடியவன் யாரடா?
விடை தெரியா வினாத் தொடுத்து நிற்கின்றோம்
உன் ஆத்ம அமைதிக்காக இறைஞ்சுகிறோம் இறைவனிடம்.

01.10.2014 அன்று இறைபதமடைந்த எமது சிரேஷ்ட புத்திரன் அமரர் சிவராசா நிசாந்த் அவர்களின் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். 16.11.2014 அன்று அவரின் நினைவாக சொர்ணாம்பிகை மண்டபத்தில் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

அன்னாரின் இறப்புச்செய்தி கேட்டு நேரில் கலந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும், மலரஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள், வங்கி அலுவலர்கள், உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். (54004)(7.3)

49/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவராசா குடும்பத்தினர்.

## நீரிழிவு நோயாளர்களுக்கான வழிகாட்டல் கைநூல் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.14
சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு "நீரிழிவு நோயாளிகளுக்கான வழிகாட்டல்" என்ற கைநூல் ஒன்றை யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் வெளியிடுகிறது. இந்தவெளியீடு இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவன அலுவலக முன்றிலில் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் திருமதி ஜெ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் றோட்டேரியன் சி.அனுராஜ் கலந்து கொள்வார். யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பொருளாளர் மருத்துவர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் கைநூலை வெளியிட பிரதம விருந்தினர் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.
நிகழ்வில் சிறப்புரைகளை ஜெய்ப்பூர் ஆலோசனைக் குழு உறுப்பினர் மருத்துவர் இ.கணேசமூர்த்தி, றோட்டேரியன் ம.அருள்குமரன் ஆகியோர் ஆற்றுவர். பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன் நயப்புரையையும் திருமதி அ.ஆ.அலோசியஸ் நன்றியுரையும் நிகழ்த்துவர். (ஓ)

## முதியோர் இல்லங்களை நாடுவோர் எண்ணிக்கை தற்போது அதிகரிப்பு

### பெற்றோரைப் பராமரிக்கத் தயங்கும் பிள்ளைகள்

யாழ்ப்பாணம், நவ.14
தற்போது முதியவர்கள் போதிய பராமரிப்பு இன்றி கைவிடப்படும் நிலைமைகள் அதிகரித்துச் செல்கின்றன. இந்த நிலையைத் தொடரவிட முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன்.
முதியோர்களின் எதிர்காலம், அவர்களின் பாதுகாப்பு தொடர்பான மனித உரிமைக்கான விழிப்புணர்வு செயலமர்வொன்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்று வருகின்றது.
அரச முதியோர் இல்லத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த விழிப்புணர்வுச் செயலமர்வில் முதியோர்களின் உரிமை பாதுகாப்பு, அவர்களின் எதிர்காலம் என்பவை குறித்து விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன.
இதற்கென அமைப்பு ஒன்றை ஆரம்பித்து வைத்து அதனூடாக முதியோர்களின் நலனில் அதிக கவனம் செலுத்துவதற்கு இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் முடிவெடுக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு செயலமர்வின் போதே இல்ல அத்தியட்சகர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:
பெற்றோர்களைப் பிள்ளைகள் தான் பராமரிக்க வேண்டும். ஆனால் பிள்ளைகள் தமது பெற்றோர்களை கைவிட்டு அநாதரவாக்கப்படும் நிலை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக முதியோர் பராமரிப்பு நிலையங்களை நாடிச் செல்லும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
இந்த நிலையில் தற்போது முதியோர்களின் நலன் தொடர்பான மனித உரிமை தொடர்பாக விழிப்புணர்வு மூலம் உரியதீர்வை அந்த முதியோர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதற்கென அவர்களுக்கு தனியான அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன்மூலம் உரிய. தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்"- என்று மேலும் கூறினார்.
இந்த விழிப்புணர்வு செயலமர்வில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர், 'இதம்' நிறுவனத்தினர், சமூக ஆர்வலர்கள், நலன்புரிசங்க பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டனர். (வ-17)

## சொற்பொழிவு

தென்மராட்சி, நவ.14
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் க.க. ஈஸ்வரன் 'தெய்வீக புலமை" என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்ம கர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## கிளைக்குழு தேர்தல்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தேர்தல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
இந்தத் தேர்தல் மூலம் கிளைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதால் அந்தந்தக் கிளைகளைச் சேர்ந்த உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (வ-173)

## வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்தும் சிறுவர் விழா

### ஞாயிறு ஆதி விநாயகர் ஆலய மண்டபத்தில்

வவுனியா சிறுவர் இல்லங்களின் "செந்தமிழ்ச் செல்வங்கள் சிறகடித்தல்" என்னும் மகுடத்தில், வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் சிறுவர் விழா நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மங்கல விளக்கை ந.நல்லநாதன் - சிவராணி தம்பதியர் ஏற்றிவைப்பர். தமிழ் வாழ்த்தை வவுனியா, இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய இசையாசிரியை திருமதி கணேசநாதன் தாட்சாயணி பாட தொடக்கவுரையை சங்கச் செயலாளர், தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்துவார்.
"செல்வங்கள் சிறகடித்தல்" என்னும் தலைப்பில் வயலின் இசையை வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர்கள் வழங்குவார்கள். நடன நிகழ்ச்சிகளை, வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன, புது வாழ்வுப் பூங்கா பாடசாலை மாணவர்களும் வவுனியா சமூக, பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர்களின் வலுவூட்டல் வளாக மாணவர்களும் வழங்குவர். "நீர்வளம் காப்போம்" எனும் பொருளில் வில்லிசையை, வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பக சிறுவர்கள் நிகழ்த்துவர். சங்கத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் விழாவில் நிறைவுரையாற்றுவார். (ஓ-421)

## விழிப்புணர்வு செயலமர்வு

பருத்தித்துறை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமூக விழிப்புணர்வுச் செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.
பருத்தித்துறை மறைக்கோட்ட பொது நிலையினர் பிரதிநிதிகள் பங்கு கொள்ளும் இந்தச் செயலமர்வில் பல்வேறு சமகால சமூக விழிப்புணர்வு விடயங்கள், சிறுவர் உரிமைகள், பாதுகாப்பு, இளையோர் வேலை வாய்ப்பு, உயர்கல்வி, ஒழுக்கம், மது ஒழிப்பு சட்டம்- ஒழுங்கு, சுகாதார மேம்பாடு, சேமிப்பு முறை போன்ற விடயங்கள் விசேடமாக ஆராயப்படவுள்ளதாக மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்தந்தை யோ.மவுலிஸ் அடிகளார் தெரிவித்துள்ளார். (வ-135)

## வாராந்த ஆன்மிக நிகழ்வு

வடமராட்சி, நவ.14
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கண்ணனின் லீலைகள் என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். இந்தச் சொற்பொழிவை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் இரா. சண்முகசுந்தரம் நிகழ்த்துவார். (வ-173)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, நவ.14
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. (வ-173)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தின்
தலைவரும், நெடுந்தீவு
பிரதேசசபையின் முன்னாள்
தலைவருமான
கலாபூஷணம் புலவர்
**அ.வெ.அரியநாயகம்**
அவர்கள் 2014ஆம் ஆண்டு
இலக்கியத்துக்கான வடமாகாண
முதலமைச்சர் விருது
பெற்றுக்கொண்டமைக்காக
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்.




(C/54073)(5.3)

## வருடாந்த தியான ஞான ஒடுக்கம்

கொழும்புத்துறை, நவ.14
யாழ். மறை மாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியான ஞான ஒடுக்கம் பண்டத்தரிப்பு தியான இல்ல மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. தியான உரைகளை இயேசு சபையைச் சேர்ந்த அருட் தந்தை ஸ்ரீபன் பெரேரா அடிகள் வழங்குவார். இந்த மாத முதல் வாரத்தில் ஒரு தொகுதி குருக்களுக்கு இந்த ஞான ஒடுக்கம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
10.11.2014 நடைபெற்ற
30ஆவது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணிப் பட்டம் பெற்ற

**கஜேந்திரன் நிவாஷினி**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

கெருடாவில் வடக்கு,
சாவகச்சேரி.

Best Wishes
வாழ்த்துவோர்:
மாமி குடும்பம்
(சோபன்)

(47334)(7.6.3)

**80ஆவது பிறந்ததின வாழ்த்து**

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் தேர்த்திருவிழா உபயகாரர் ஸ்ரீமான் தம்பு சிவபாதசுந்தரம் அவர்களின் 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை (15.11.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனையும், அன்னதானமும் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் சகல அடியார்களும் கலந்துகொண்டு அம்பாளின் ஆசிவேண்டி பிரார்த்திப்பதுடன், அன்னதான நிகழ்விலும் கலந்து கொண்டு வாழ்த்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
சிவஸ்ரீ ந.உமாபதீஸ்வரக் குருக்கள்.
பிரதம குருக்களும் ஆதீனகர்த்தாவும்,
புனருத்தாரண சபையினரும், கீரிமலை வாழ் மக்களும்.

(54062)(5.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




10.11.2014 நடைபெற்ற யாழ்.பல்கலைக்
கழக முப்பதாவது பொதுப் பட்டமளிப்பு
விழாவில் வணிக முகாமைத்துவ நிர்வாக
இளமாணிப்பட்டம் பெற்ற
செல்வி **சயானி கணேசன்** (B.B.A)
(Bachelor of Business
Administration Special in
Financial
Management) மேலும் பல்வேறு
பட்டங்கள் பெற்று சிறப்புடன்
பல்லாண்டு காலம் வாழ
இறையருள் வேண்டிப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா,
அக்கா, அத்தான் (பிரான்ஸ்)
அண்ணா (பிரான்ஸ்)

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(54070)(3.6.4)

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்
### 2015ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல் திருத்தம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 12.11.2014ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

| தொ. இல. | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01. | சுன்னாகம் பொதுச் சந்தை (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகனதரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8569000.00 |

தி.பிரகாஷ்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(சி/17598)
(7.6.3)




கடந்த ஞாயிற்றுக்கிழமை 09.11.2014 அச்சுவேலி இராஜமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற நன்றி செலுத்தும் வெற்றித்தமிழ் விழாவில் நாம் இந்த நிலைக்கு உயர்வதற்கு கல்வி அறிவூட்டிய ஆசிரியர்களைப் பாராட்டி கௌரவித்தோம், தரம் 5 புலமைப்பரிசில் தகைமையைப் பெற்ற மாணவச் செல்வங்களைப் பாராட்டி கௌரவித்தோம். இந்தப் பெருவிழாவில் பிரதம விருந்தினரரக, சிறப்பு விருந்தினராக, கௌரவ விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும், விழாவில் கலை நிகழ்வுகளை வழங்கிய பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் விழாவில் கலந்து சிறப்பித்த பொதுமக்கள் அனைத்துத் தரப்பினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்காலத்தில் ஆண்டுதோறும் எனது அண்ணன் S.M.T.அவர்களின் பிறந்த தினத்தில் முத்தமிழ் விழா எடுத்து மகிழ்வதோடு வருடாந்தம்

* அச்சுவேலியில் இருந்து பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கு தலா ஒருலட்சம் ரூபா புலமைப்பரிசில்
* தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் கூடிய புள்ளிபெறும் அச்சுவேலி மாணவர்களுக்கு தலா ஒருலட்சம் ரூபா புலமைப்பரிசில்
* தரம் 5 புலமைப்பரிசில் தகைமை பெறும் மாணவர்களைப் பாராட்டி கௌரவித்தல், அவர்களுக்கான கல்விச்சுற்றுலா வசதிகள் செய்தல் முதலிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணிக்கம் சிவமூர்த்தி குடும்பத்தினர்,
வீடியோ கலாமினி
இராஜமாணிக்கம் கல்யாணமண்டபம்,
அச்சுவேலி - 077 305 3080

Best Wishes

(சி17600)(12.3.6)


# சுகாதார வைத்திய பணிமனைகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ.14

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் கடந்த 2012, 2013 ஆகிய காலப்பகுதியில் நாட்டில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் நடத்திய தாய் சேய் நலம் தொடர்பான செயற்பாடுகளை மேற் கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார். கடந்த வருடங்களில் மேற் கொள்ளப்பட்ட தாய் சேய் நல செயற்றிட்டங்களை ஆய்வு செய்த குழுவினர் வடமாகா ணத்தில் கோப்பாய், பருத்தித் துறை , சாவகச்சேரி, முருங் கன் ஆகிய நான்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைத்து மாவட்ட தாய் சேய் சுகாதார அதிகாரிகள், மாவட்ட தொற்று நோயியலாளர்கள் மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் சமூக சேவைகள் அலுவலர், திட்ட மிடல் நிகழ்ச்சித்திட்ட உதவி யாளர், அபிவிருத்தி உத்தி யோகத்தர்களும் தெரிவு செய் யப்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இருந்து சுகாதார மருத்துவ அதிகாரி யும் ஏனைய 7 உத்தி யோகத் தர்களையும் கலந்து கொள்ளு மாறு குடும்ப சுகாதாரப் பணி யகச் செயலாளர் அறிவித் துள்ளார். (த-9)

# 2 ஆம் கட்ட மானிய உரம் சாவகச்சேரியில் விநியோகம்

வரணி, நவ.14

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தால் 2ஆம் கட்ட மானிய உரம் வழங்கும் திகதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதன் பிரகாரம் உரிய திகதிகள் வருமாறு:-

இன்று 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிருசுவில் வடக்கு மற்றும் குடமியன் பிரிவுகள், நாளை சனிக்கிழமை மாசேரி பிரிவு 17ஆம் திகதி சரசாலை தெற்கு மற்றும் சாவகச்சேரி நகரம், 18 ஆம் திகதி சரசாலை வடக்கு, 19ஆம் திகதி கரம்பைக் குறிச்சி மற் றும் எழுதுமட்டுவாழ் தெற்கு, 20 ஆம் திகதி வரணி வடக்கு மற்றும் மீசாலை வடக்கு, 21 ஆம் திகதி நுணாவில் மத்தி மற்றும் மண்டுவில் பிரதேசம், 22 ஆம் திகதி வரணி இயற்றாலை, 24ஆம் திகதி கச்சாய் மற்றும் மீசாலை மேற்கு, 25 ஆம் திகதி எழுதுமட்டு வாழ் வடக்கு. (த-122)

# பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.14

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி யின் பரிசில் நாள் நிகழ்வு இன்று பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மண்டபத் தில் இடம்பெறும்.

விழாவுக்கு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பழைய மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ள னர். நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவர் தி.கும ணன், ஓய்வு நிலை உதவி இரசாயன பகுப்பாய்வாளர் சி.சுந்தரலிங்கம் ஆகி யோர் கலந்துகொள்வர். (வ-9)


## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வரையுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 'வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்' இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08ஆம் திகதி 1596/17 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்**

| இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் | காலம் | நேரம் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | புலோலி தெற்கு | திரு.இ.புவன்ராஜ் | 16.11.2014 | மு.ப.10.00மணி | புலோலி மெ.மி.த.க.பாடசாலை |
| 2 | 2 | புலோலி மேற்கு | திரு.சு.சுவர்ணன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | மேலைப்புலோலி அ.த.க.பாடசாலை |
| 3 | 3 | தம்பசிட்டி | திரு.க.சசிகரன் | 16.11.2014 | மு.ப.10.00மணி | தம்பசிட்டிஅ.த.க.பாடசாலை |
| 4 | 5 | குரும்பகட்டி | திரு.செ.செல்வக்குமரன் | 16.11.2014 | மு.ப.10.00மணி | குரும்பகட்டி சனசமூகநிலையம் |
| 5 | 6 | பெரியதேவன் | திரு.க.பாலகிருஸ்ணன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | பெரியதேவனத்தாய் சனசமூகநிலையம் |
| 6 | 7 | புலோலி வடக்கு | திரு.வே.பிரதீஸ்குமரன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | புலோலி வடக்கு கிளைக்கட்டடம் |
| 7 | 8 | வியாபாரிமூலை | திரு.ஸ்ரீ.குகதீப் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | வியாபாரிமூலைகிளைக்கட்டடம் |
| 8 | 9 | வல்லிபுரக்குறிச்சி | திரு.ந.குமணதாசன் | 16.11.2014 | மு.ப.10.00மணி | வல்லிபுரக்குறிச்சி பொதுமண்டபம் |
| 9 | 10 | அல்வாய் வடக்கு | திரு.பொ.கோகுலன் | 16.11.2014 | மு.ப.10.00மணி | அல்வாய் வடக்கு பொதுமண்டபம் |
| 10 | 11 | புலோலிகிழக்குமத்தி | திரு.பா.ஸ்ரீகுமார் | 16.11.2014 | மு.ப.10.00மணி | புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை |
| 11 | 12 | கற்கோவளம் | திரு.சி.சிறீதரன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | கற்கோவளம் கிளைக்கட்டடமண்டபம் |
| 12 | 13 | புலோலிதென்மேற்கு | திரு.இ.தயாகரன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | புலோலி தென்மேற்குகிளைக்கட்டடம் |
| 13 | 23 | புற்றளை | திரு.வை.கைலைநாதன் | 16.11.2014 | மு.ப.10.00 மணி | புற்றளை மகாவித்தியாலயம் |

தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தினருக்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக் குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
14.11.2014

வி.கே.அருந்தவநாதன்,
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

(C/17599)(5.6.3)



## இடமாற்றம்

**டயானா பிளாஸ்ரிக்**

108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)

* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்

(C/17542)(7.6.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

## வாடகைக்கு

இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் அலுவலக இடமும் களஞ்சியசாலையும் வாடகைக்குண்டு. கீழ் தளத்தில் LAVA பல் வைத்தியசாலை இயங்குமிடம். Nov .13,14 ஆம் திகதிகளில் பார்வையிட முடியும்.

தொடர்பு: 077 776 9260

(53978)(45.6.3)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


# ஜோசவ் வாஸ் அடிகளாருக்கு செப வழிபாடு

கொழும்புத்துறைநவ.14

இலங்கையின் புனிதராக திருத் தந்தைபிரான் சிஸால் எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி பிரகட னப்படுத்தப்படவுள்ள அருளாளர் ஜோசவ் வாஸ் அடிகளார் பேரில் ஆன்மிக ஆயத்தங் களை மேற்கொள் ளும் முகமாக இன்றி லிருந்து ஜனவரி 14 ஆம் திகதி வரை செப நாள்களாக கடைப் பிடிக்குமாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை மக்களை கேட்டுள் ளார்.

அன்றைய தினங்க ளில் காலையில் திருப் பலியும், மாலையில் நற்கருணை ' ஆசீ ரும் இடம்பெறுவ தோடு நாள் முழுவ தும் ஜோசவ் வாஸ் அடிகளாரின் வாழ் வும் பணியும் தொடர் பான கருத்துரைகள், வீடியோ, படக் காட்சி கள், கவிதை, கட் டுரைப் போட்டிகள், நாடகங்கள், செப வழிபாடுகள் என்பன நடத்தப்பட்டு மக்களுக்கு விழிப்பு ணர்வை ஊட்ட நட வடிக்கை எடுக்கு மாறு பங்குத் தந்தை யர்களுக்கு ஆயர் அறிவுறுத்தியுள்ளார். (த-135)

# சாவகச்சேரி மருத்துவமனையில் நோயாளருக்கு தியானப் பயிற்சி

## மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக

தென்மராட்சி, நவ.14
வடமாகாணத்தில் முதன்முறையாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நோயாளர்களுக்கான தியானப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
நாளை சனிக்கிழமை தொடக்கம் தினமும் மாலை வேளையில் மருத்துவமனை மண்டபத்தில் தியானப் பயிற்சிகள் இடம்பெறவுள்ளதாக மருத்துவமனைச் செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.
தியானப் பயிற்சி மூலம் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்பது சித்தர்களின் அடிப்படைக் கொள்கையாகும். தற்போதைய காலத்தில் மருத்துவமனை விடுதிகளில் தங்கியுள்ளோரில் குறைந்தது 60 தொடக்கம் 70 வீதமான நோயாளர்கள் மனத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.
தியானப்பயிற்சி மூலம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த முடியும் என ஆய்வுகளில் கண்டறியப்பட்டதையடுத்து சாவகச்சேரி மருத்துவ மனையில் தியானப் பயிற்சி வகுப்புக்கள் தினமும் நடத்தப்படவுள்ளது.
மருத்துவமனையில் சிகிச்சை பெறும் குருந்தம் நிலையம் சிகிச்சை பெறுவோர், உளநல மருத்துவ சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோர் உட்பட விடுதிகளில் தங்கியுள்ள மனத் தாக்கத்துக்கு உள்ளாகிய நோயாளர்களுக்குத் தியானப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும், தியானப் பயிற்சிகளில் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# காணாமற்போன மாடு பொலிஸாரால் மீட்பு

வடமராட்சி, நவ.14
கரணவாய் கிழக்கில் உள்ள வீடொன்றில் இருந்து காணாமற்போன மாடு ஒன்று கரணவாய் மேற்கில் உள்ள வீடொன்றில் கட்டியிருக்க நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
தமது வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை முதல் காணாமல் போய்விட்டதாகக் கூறி குறித்த வீட்டு உரிமையாளர் மாட்டைத் தேடிக்கொண்டிருந்தார். இந்த நிலையில் சம்பவ தினம் காலைவேளை ஒருவர் மாடு ஒன்றைக் கூட்டிச் சென்றதாகப் பிரதேச மக்கள் தகவல் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து கரணவர்ய் மேற்குப்பகுதியில் உள்ள வீடொன்றில் காணாமல் போன மாடு கட்டியிருந்ததைக் கண்டு மாட்டைப் பொலிஸார் மீட்டனர்.
நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசாரணையின்போது மாட்டை உரிமையாளரிடம் கையளித்தனர். மாட்டைக் களவாடிச் சென்று வீட்டில் கட்டி வைத்திருந்தவர் முறைப்பாட்டுக்காரின் வேண்டுகோளுக்கு அமைய எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (த-173)

# பச்சிலைப்பள்ளி மேற்குக்கு ஞாயிறன்று மின் விநியோகம்

பளை, நவ.14
பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தின் கச்சார்வெளி, செல்வபுரம், வேம்பொடுகேணி, இத்தாவில் ஆகிய கிராமங்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.
செல்வபுரம் சந்தி, இத்தாவில் சந்தி ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் மாற்றிகளின் மூலம் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது. கச்சார்வெளி, செல்வபுரம் கிராமங்களுக்கான மின் விநியோகத்தை கச்சார்வெளி பிள்ளையார் ஆலயத்துக்கும் வேம்பொடுகேணி, இத்தாவில் கிராமங்களுக்கான மின் விநியோகத்தினை வேம்பொடுகேணி சி.சீ.த.க. பாடசாலைக்கும் மின் ஆழிகளை அழுத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இந்த நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி, இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள் வடக்கின் வசந்தம் மின் விநியோகத்திட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# உருளைக் கிழங்குச் செய்கையில் அதிகளவு ஆர்வம் காட்டவேண்டும்

## விவசாயிகளிடம் அரச அதிபர் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.14
யாழ். குடாநாட்டில் உருளைக் கிழங்குச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இந்த முறை 80 ஹக்ரேயர் நிலப்பரப்பிலேயே இந்தச் செய்கை மேற்கொள்ளவுள்ளதாக விவசாயத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. இந்த ஹெக்ரேயர் விஸ்தீரணம் போதாது. விவசாயிகள் கூடுதலான நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கைக்குத் தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்று யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட உருளைக் கிழங்குச் செய்கையாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தால் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-
குடாநாட்டில் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கையை மேலும் அதிகரிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கேட்டுள்ளது. இந்தச் செய்கையை ஊக்குவிப்பதற்கு விவசாயிகளுக்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டைப் போல இந்த் ஆண்டும் மானியத்துக்கு விதை உருளைக்கிழங்கை விநியோகிப்பதற்கு அரசு ஆராய்ந்து வருகின்றது.
குடாநாட்டில் இந்தச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். விளைச்சலைப் பொறுத்து அதை சந்தைப் படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் இம்முறை மேற்கொள்ளப்படும். எமது பிரதேசத்தில் மண் வளத்தைப் பொறுத்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிக ஆர்வம் காட்டவேண்டும்.
விவசாய நடவடிக்கையை ஊக்குவிக்க அரசு ஏற்ற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது-என்றார்.
நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதி விவசாயப் பணிப்பாளர் கே. ஸ்ரீபாலசுந்தரம் கூறுகையில்; எமது பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப் படுகின்றன.
உருளைக் கிழங்கு செய்கைக்குரிய சகல வழிமுறைகளையும் அதற்குரிய பயிற்சிகளையும் திணைக்களம் மேற்கொள்ளும். விவ சாயிகள் எதுவித தயக்கமும் இன்றிச் செய்கைக்குத் தம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும்- என்றார். (த-17)

## அநாதரவான மூதாட்டி முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம், நவ.14
வீதியில் அநாதரவாக நடமாடிய வயோதிபப் பெண் ஒருவர் யாழ். நீதிவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.
புலோலி கிழக்கு, பருத்தித் துறையைச் சேர்ந்த 62 வயதான வைரமுத்து பொன்னம்மா என்பவர் எவரது துணையும் இன்றி வீதியில் நடமாடித் திரிந்தார்.
இந்த வயோதிப் பெண்ணைச் சிறுவர் மகளிர் பிரிவுப் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள். அவரைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லாத சமயத்தில் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இவரது உறவினர்கள் யாரும் இருந்தால் அரச முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார். (த-17)

# ரயில் கடவையை மோதும் சாரதிகள் மீது நடவடிக்கை

## வவுனியா பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா, நவ.14
ரயில் கடவையை மோதித் தள்ளி விட்டுச் செல்லும் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா ஸ்ரேசன் வீதியில் உள்ள ரயில் கடவையின் பாதுகாப்புக் கடவையை மோதித் தள்ளியவாறு ரயில் முன் பாய்ந்த ஓட்டோச் சாரதி ஒருவர் மயிரிழையில் உயர்தப்பினார்.
இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் கேட்டபோதே வவுனியா பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.
வவுனியாவில் பல்வேறு ரயில் கடவைகள் காணப்படுகின்றன. இந்த ரயில் கடவைகளில் கடந்த காலங்களில் ரயில் வரும்வேளை சமிக்ஞையை மீறிச் சென்ற நால்வர் உயிரிழந்துள்ளனர். இத்தகைய உயிராபத்தின் பின்பும் விழிப்புணர்வற்று மிகுந்த அவசர அவசரமாக ரயில் கடவையின் பாதுகாப்பு கடவையை மோதித் தள்ளிச் செல்லும் சாரதிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (த-402)

## பிணக்குகள் விசாரணை நாளை

வடமராட்சி, நவ.14
கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையினால் எதிர்வரும் 16ஆம்திக்தி ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த பிணக்குகளுக்கான விசாரணைகள் ஒருநாள் முன்னதாக நாளை சனிக்கிழமை இடம்பெறும் என சபைத் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியுடனான சந்திப்பு இருப்பதனாலேயே விசாரணைக்கான தினம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (த-173)

# நெல்லியடிப் பொதுச் சந்தையில் வசதிகளை ஏற்படுத்த தீர்மானம்

வடமராட்சி, நவ.14
நெல்லியடி பொதுச் சந்தையில் மழை காலத்தில் ஏற்படும் வெள்ளத்தில் மக்கள் நடமாட முடியாத நிலையில் மரக்கறிச் சந்தைக்கும், மீன் சந்தைக்கும் இடையில் வீதி ஒன்றை அமைப்பதெனவும், நெல்லியடி நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஓட்டோக்களுக்குச் சுழற்சி முறையிலான தனியான தரிப்பிடங்களை ஏற்படுத்துவதெனவும் கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபையின் உப தவிசாளர் எஸ்.சாந்த சொரூபன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.
கூட்டத்தில் சபையின் எதிரணி உறுப்பினர் சி.கணபதிப்பிள்ளை நெல்லியடி பொதுச் சந்தையில் மழை காலத்தில் ஏற்படும் வெள்ளத்தினால் சந்தைக்கு வரும் மக்களின் அவலத்தையும் நெல்லியடி நகரத்தில் புதிய பஸ்நிலையம் அமைக்கப்பட்டு வரும் வேளையில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்.
ஆளும் தரப்பு உறுப்பினர் க.பரஞ்சோதி கருத்துத் தெரிவிக்கையில்,
சபையின் நிதியில் இருந்து உடனடியாகச் சந்தை வளாகத்தில் மரக்கறிச் சந்தைக்கும் மீன்சந்தைக்கும் இடையில் பாதை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.
இந்தக் கோரிக்கைகளுக்கு சபைக்குத் தலைமை வகித்த உப தவிசாளர் எஸ்.சாந்த சொரூபன் பதிலளிக்கையில்;
பொதுச் சந்தை வ்ளாகத்தில் வெள்ளத்தினால் ஏற்படும் அவலங்களைப் போக்க மரக்கறிச் சந்தைக்கும் மீன் சந்தைக்கும் இடையில் உடனடியாக சபை நிதியில் இருந்து வீதி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்படுகின்றது.
நெல்லியடி நகர போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருடன் கலந்துரையாடியுள்ளேன். தற்போது பஸ் தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் ஓட்டோக்கள் யாவும் மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள பழைய இலங்கை வங்கிக் கிளை முன்பாக நிறுத்தப்படும். ஒரு சில ஓட்டோக்கள் நெல்லியடி பழைய சந்தைப் பகுதியிலும், கொடிகாமம் வீதியில் பழைய லக்சுமி தியேட்டர் முன்பாகவும் நிறுத்தி வைக்கப்பட்டுச் சேவைகளை மேற்கொள்ளும். ஓட்டோக்கள் செல்லச் செல்ல பழைய இலங்கை வங்கிக் கிளை முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிக்கும் ஓட்டோக்கள் சுழற்சி முறையில் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து தரித்து நின்று சேவைகளை மேற்கொள்ள முடியும். எனினும் இது குறித்து ஓட்டோ சங்கத்துடன் பொலிஸார் நேரடியாகப் பேசி ஒரு சுமுகமான முடிவினை எமக்குத் தெரிவிப்பார். அதுவரையும் பொறுமையாக இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-173)

# கிளிநொச்சியில் வெள்ள இடரை எதிர்கொள்வது குறித்து ஆராய்வு



கிளிநொச்சி, நவ 14

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள இடரினை எதிர்கொள்வது குறித்து ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பான கூட்டம் கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரச அதிபர், இந்தக் காலப் பகுதியில் அதாவது நவம்பர் டிசம்பர் மாதங்களில் பருவகால மழையை எதிர்நோக்கி வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய இடர்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் முன்னேற்பாடுகளை மேற்கொள்வது வழக்கம். ஆனால் இவ்வாண்டு அவ்வாறான கூட்டத்தை நடத்துவதற்கு விருப்பமில்லை. ஆனாலும் ஒரு இடர் வருகின்றபோது அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதன் காரணமாக இன்று கூடியிருக்கின்றோம். அதிகளவு மழையைப் பெறுகின்றபோது வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்படுவார்களானால் மக்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய முன் ஆயத்தங்களை மேற்கொள்ளக் கூடிய விதத்திலே ஏற்பாடுகளைமேற்கொண்டுள்ளோம் -என்றார்.

கிளிநொச்சி இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் மழை காலத்தில் வெள்ள இடரினை எதிர்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தார். வெள்ள அபாயம் ஒன்று ஏற்படும்போது பாதிக்கப்பட்ட மக்களைப் பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் தங்கவைத்தல், உணவு விநியோகம், மருத்துவ வசதிகள், வெள்ளத்தில் சிக்குண்ட மக்களை மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்படும்போது 7470 குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்திலுள்ள கிராமங்களில் இடர் முகாமைத்துவக் குழுக்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை எனவும், எதிர்காலத்தில் கிராமங்கள் தோறும் இடர் முகாமைத்துவக் குழுக்கள் சிறப்பாக இயங்க வைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், மருத்துவர் மா.ஜெயராசா, பிரதேச செயலாளர்கள், உதவி அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், இடர் முகாமைத்துவப் பிரிவின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (து-18)

## நொச்சிமோட்டைப் பாலம் பழுதடைந்ததால் ஆபத்து

வவுனியா, நவ.14

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் உள்ள பாலம் பழுதடைந்துள்ளமையால் பயணிகள் தமது பயணத்தின்போது அச்சம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நொச்சிமோட்டையில் ஏ -9 வீதியில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. அன்றாடம் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் இந்தப் பாலம் ஊடாகப் பயணிக்கின்றன. இந்த நிலையில் குறித்த பாலம் ஏற்கனவே மூன்று தடவைகள் பழுதடைந்து திருத்தியமைக்கப்பட்ட நிலையில் மீண்டும் பழுதடைந்துள்ளது. பாலத்தில் வெடிப்பு உள்ளமையால் எப்பொழுதும் அது உடைந்து விழலாம் என்ற அச்சம் உள்ளது.

இதனைக் கவனத்தில் கொண்டு பயணிகளும் சாரதிகளும் அவ்விடத்தில் வாகனத்தைச் சற்று வேகம் குறைத்துச் செல்லுமாறு வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விரைவில் இந்தப் பாலம் புனரமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது . (து-402)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி

### ஒரு ஏக்கருக்கு 2ஆயிரத்து 800 ரூபா

வவுனியா, நவ 14

வறட்சியால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 2ஆயிரத்து 800 ரூபா வழங்குவதற்கு வவுனியா அரச அதிபர் உறுதியளித்துள்ளார்

வவுனியா மாவட்ட அரச அதிபருக்கும் வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் இடையில் மாவட்ட செயலக மண்டபத்தில் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு இடம்பெற்றது. இதன்போது உரையாற்று கையிலேயே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியாக இயற்கை இடர்களினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாண்டு சிறுபோகப் பயிர்ச்செய்கை வறட்சியால் பாதிக்கப்பட்டது. இப்போது கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட அதே விவசாயிகள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விதை நெல் வழங்குவதற்குப் பதிலாக விவசாய நடவடிக்கையில் வழமையாக ஈடுபடும் வவுனியா மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2ஆயிரத்து 800 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தொகை கமநல சேவ ஆணையாளர் ஊடாக வழங்கப்படும்-என்றார்.

இந்தச் சந்திப்பில் 60 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (து-402)

# பூந்தோட்டம் மகா வித்தியாலய மாணவரின் சத்துணவில் மோசடி

### அரச அதிபரிடம் முறைப்பாடு

வவுனியா, நவ 14

வவுனியா, பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உலக உணவுத் திட்ட உணவில் மோசடி இடம்பெற்றுள்ளதாக வடமாகாண பிராந்திய உலக உணவுத் திட்டத்தின் அதிகாரி க.றொய்ஸ் வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 20ஆம் திகதி வடமாகாண பிராந்திய உலக உணவுத் திட்டத்துக்குக் கிடைத்த தொலைபேசி முறைபாட்டுக்கு அமைவாக உலக உணவுத் திட்ட அதிகாரிகளும், வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் இணைந்து 21ஆம் திகதி வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டிருந்தனர். இதன்போது மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சத்துணவுகள் உரிய அளவில் வழங்கப்படாமல் பொருள்கள் பாடசாலைக்கு வெளியில் வாகனத்தில ஏற்றிச் செல்லப்பட்டு விற்பனை செய்யப் பட்டமை தொடர்பில் முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றிருந் தன.

இதேவேளை இந்தப் பாடசாலையில் முன்னர் பணியாற்றிய அதிபர் தற்போது பணியாற்றும் அதிபரிடம் வழங்கிய கையிருப்புக்கும் பதிவேட்டுக்கும் பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து உலக உணவுத் திட்டத்தின் அதிகாரிகள் வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜாவிடம் 21ஆம் திகதியே முறையிட்டிருந்தனர். இதன் பின்னர் குறிப் பிட்ட அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலம் வவுனியா மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன், வவுனியா தெற்கு கல்வி பணிப்பாளர் திருமதி.செ.அன்ரன் சோமராஜா, வட மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வட மாகாண சபை உறுப்பினரும் வட மாகாண கல்வி அமைச்சின் வவுனியா மாவட்டத்திற்கு பொறுப்பான உறுப்பினருமான இ.இந்திரராஜாவுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளரிடம் கேட்டபோது, உலக உணவுத்திட்ட அதிகாரிகளால் வவுனியா அரச அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரதி தனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதேவேளை, உலக உணவுத் திட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்ட பூந்தோட்டம் பாடசாலையின் முன்னாள் அதிபர் தற்போது வவுனியாவின் பிரபல பாடசாலையொன்றுக்கு அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## பாப்பரசரின் திருப்பலியில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு

கொழும்புத்துறை. நவ.14

பாப்பரசரின் இலங்கைப் பயணத்தின்போது எதிர் வரும் ஜனவரி 14 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள திருப்பலியில் கலந்து கொள்ளவிரும்பும் யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் யாழ். மறைமாவட்ட திருச்சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக விசேட ரயில் சேவை மற்றும் தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஏற்பாடுகளை மேற்கொள்ள அருட்தந்தையர்களான சாள்ஸ் கொலின்ஸ், ஜோண் மவுலிஸ், எயின்சிலி றொசான் ஆகியோர் யாழ். ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயணத்தில் இணைந்து கொள்ள விரும்புவோர் விவரங்களைத் தத்தமது பங்குத் தந்தையர்களூடாக புனித வளன் கத்தோலிக்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (து-135)

## இலவச மருத்துவ முகாம் இன்று

பண்ணை மார்பு நோய் சிகிச்சைப்பிரிவின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

காசநோய் , சலரோகம் உட்பட ஏனைய நோய்களுக்கான சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பிரதேச மக்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (து-14)

## சிறுவர் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி, நவ 14

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் பொறுப்பு, கடமை தொடர்பாக விழிப்புணர்வு வழங்கும் செயலமர்வை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊறுப்புலம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தியது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இராஜரட்ணம் துஸ்யந்தன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் மகேசன் உமாசங்கர் தலைமை தாங்கினார். இப்பாடசாலையில் உள்ள 100 மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர். சிறுவர் பெண்கள் விவகார அமைச்சு இந்த வேலைத் திட்டத்திற்கான நிதியை வழங்கி உள்ளது. (து)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா பஸ் நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் நிலையத்துக்கு வருகை தந்த நபரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவரது கையில் இருந்த பணப்பையைச் சோதனையிட்டனர். இதன்போது அவர் வைத்திருந்த கருவாட்டுப் பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த 650 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்துக் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் குருநாகல் பிரதேசத்தில் வசிப்பவர் என்றும், யாழ்ப்பாணத்தில் இருந்து குருநாகலுக்குக் கஞ்சாவை கொண்டு செல்வதற்காகவே பஸ் நிலையத்தில் இறங்கியிருந்தார் எனவும் விசாரணையின்போது தெரியவந்ததாவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-402)

14 NOV 2014

# கட்டளையிட்டோர் மீதே போர்க்குற்ற விசாரணை

## இலங்கைக்கு அதிர்ச்சி கொடுக்கும் கருத்தை வெளியிட்டார் அமெரிக்க நிபுணர்

கொழும்பு, நவ.14

போர்க் குற்றங்கள் குறித்த தற்கால விசாரணைகளின் போது அந்தப் போர்க் குற்றங் களை இழைத்த படைப்பிரிவு களின் முக்கிய தளபதிகள் மற் றும் அதற்கான கட்டளை களை வழங்கியோர் குறித்தே அதிக முக்கியத்துவம் வழங் கப்படுகின்றது என்று இலங்கை யின் அரசியல் மற்றும் இரா ணுவத் தலைவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கக்கூடிய கருத்தை அமெரிக்க நிபுணர் ஒருவர் ஐக்கிய நாடுகள் குழு வொன்றுக்கு தெரிவித்துள் ளார்.

அமெரிக்க நீதித் திணைக்களத் தின் விசேட விசாரணை அலு வலகத்தின் முன்னாள் அதி காரியான பட்ரிக் ஜே.டிரீனெரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐ.நா. தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றின்போது கருத்து வெளி யிட்ட அவர்,

"சர்வதேச அளவில் முன்னெ டுக்கப்படும் இரண்டாம் உல கப் போர்க் காலத்துக்குப் பிந் திய போர்க் குற்ற விசா ரணைகளின்போது, அந்தக் குற்றங்களுக்கு யார் முக்கிய காரணம் என்பது குறித்தே அதிக கவனம் செலுத்தப்படு கின்றது.

அதாவது, கட்டளையிடும் தரத்திலிருந்த அதிகாரிகள் குறித்தே அதிக கவனம் செலுத் தப்படுகின்றது. அந்த உத்த ரவை நிறைவேற்றியவர்கள் குறித்து அல்ல"- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போன்ற சில நாடுகள் சர்வதேச விசாரணை யாளர்களுக்கு அனுமதி மறுக் கும் சூழ்நிலையில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்தும் அவர் அங்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

"இலங்கை போன்ற, குற்றங் கள் இடம்பெற்ற நாடுகள் குறித்து விசாரணைசெய்யும் போது குறிப்பிட்ட நாட்டின் உயர் அதிகாரிகளின் சட்டரீதி யான பொறுப்பு என்ன என்பது குறித்த தகவல்களைத் திரட்ட வேண்டும். குறிப்பாக ஆயுதப் படைகள் மீது அவர்கள் எவ்வாறான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர். படையி னர் மத்தியில் கட்டுப்பாட்டை யும், சட்டங்களையும் பின்பற் றச் செய்வதில் அவர்களுடைய பங்களிப்பு என்னவென்பது குறித்த விவரங்களைத் திரட்டப் பட வேண்டும்"- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இவ்வாறான தகவல்களை நூலகங்களை ஆய்வு செய்வ திலும், உள்ளூர் ஊடகங் களில் வெளியான தகவல் களைத் திரட்டுவதன் மூலமாக வும் பெற்றுக்கொள்ள முடி யும்"- என்று தெரிவித்துள்ள அவர், "இது அந்த விசார ணைகளின் ஒரு பகுதியே, இதில் இன்னொரு விடயமும் உள்ளது. அதனை வெளிநாடு களிலும் செய்யலாம்"- என் றும் தெரிவித்துள்ளார்.

"இந்த உயர்மட்டக் குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதை நிரூபிப்பது மாத்திரமே எமது கடமையல்ல - அது மிகவும் சுலபமானது. அதேவேளை, ஆட்சியின் உயர்மட்டத்தி லுள்ளவர்களுக்கும் இந்தக் குற்றங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பையும் நிரூபிப் பது அவசியமானது"- என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

# தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் தீர்வு விடயங்கள்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

நவம்பர் 19 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் படலாம் என்று தெரிவித்துள்ள அரசு, தமிழர் மற்றும் தேசியப் பிரச்சினைகள் தொடர்பான தீர்வுத்திட்டங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக் கப்படும் என்றும் உறுதியளித் துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நண்பகல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே, சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவால் இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

"சர்வதேச நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தவே எதி ரணியினர் நிறைவேற்று அதி காரமுடைய ஜனாதிபதி முறை ஒழிப்புக் கோஷத்தைக் கை யில் எடுத்துள்ளனர்"- என்றும் அவர் அங்கு குற்றஞ் சுமத்தி யுள்ளார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கும்போது,

"நிறைவேற்று அதிகாரப் பலம் கொண்ட ஜனாதிபதி முறைமை நாட்டில் இருந்ததாலேயே 30 வருடகாலமாக இருந்த தீவி ரவாதம் ஒழிக்கப்பட்டு நாடு பாதுகாப்பாக இருக்கின்றது. ஆனால், எதிரணியினரோ இந்த முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். இவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது கோபமே தவிர, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை மீதல்ல. ஏனெனில், இதனை 1978 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தியதே ஐக்கிய தேசியக் கட்சி என்பது புதிய செய்தியல்ல. இத்தனை காலமும் அமைதி யாக இருந்து விட்டு, தற்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஒரு போதும் வெல்ல முடியாது என்ற காரணத்தாலேயே நிறை வேற்று அதிகாரமுடைய ஜனா திபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென கோஷமிடு கின்றனர். சர்வதேசமானது நாட்டை எப்படியாவது குழப்ப வேண்டும் என்றும் எண்ணி யுள்ளது. அவர்களின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத் தவே எதிரணியினர் நிறை வேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை ஒழிப் புக் கோஷத்தை கையில் எடுத்துள்ளனர்."- என தெரி வித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாப னத்தில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்பட்டால் மஹிந்தவுக்கு ஆதரவு வழங் குவது தொடர்பில் பரிசீலிக்கப் படும் என நாடாளுமன்றில் தெரிவித்துள்ள கருத்து தொடர் பில் அமைச்சரிடம் ஊடகவிய லாளர் ஒருவர் வினவிய போது,

"எமது தேர்தல் விஞ்ஞாபனத் தில் தமிழர்- தேசியப் பிரச் சினைகளுக்கு தீர்வுத் திட் டங்கள் உள்ளடக்கப்படும்" எனப் பதிலளித்தார். (ற-சி)

## பல்கலைகளில் போதைப் பொருள் பாவனை

*-அமைச்சர் திஸாநாயக்க*

கொழும்பு, நவ.14

30 சதவீதமான பல்கலைக் கழக மாணவர்கள் போதைப் பொருள்களை பயன்படுத்தி வருகின்றனர் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

"பல்கலைக்கழக மாணவர் களில் 7 சதவீதத்துக்கும் குறை வான மாணவர்களே விளை யாட்டுசார்ந்த விடயங்களில் அவ தானம் செலுத்துகின்றனர்.

ஆனால் 30 சதவீதமானவர் கள் கஞ்சா போதைப் பொருள் களை பயன்படுத்துகின்றனர்.

அண்மையில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அலுவலகத்தில் இருந்து கஞ்சா போதைப் பொருள்கள் மீட்கப் பட்டதுடன், சிலர் கைது செய் யப்பட்டனர்"- என்றும் தெரிவித் துள்ளார். (ற)

# மஹிந்த தோற்கடிக்கப்படுவார்

## அத்துரலிய ரத்ன தேரர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.14

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து நாடாளு மன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் 19ஆவது அரச மைப்புத் திருத்தச் சட்டத்தைச் செயற்படுத்தாது போனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை தோற்கடிக்கும் தீர் மானத்தை மாற்றப் போவ தில்லை என்று தெரிவித்துள் ளார் ஜாதிக ஹெல உறு மயவின் நாடாளுமன்ற உறுப் பினர் அத்துரலியே ரத்ன தேரர்.



கொழும்பு முத்தையா மைதா னத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக் கூட் டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிக் கப்பட்ட பின்னர் அரசில் இருக் கும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் சிலர் எதிர்க்கட்சிக்கு வரு வார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதி காரத்தை ஒழிக்காது தேர் தலை நடத்தினால் அவரை தோற்கடிக்க அனைத்து நட வடிக்கைகளும் எடுக்கப்படும்"- என்று அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ற)

# 13ஐ நீக்கினால் ஆதரவு

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

கொழும்பு, நவ.14

அரசமைப்புச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து வரும் எதி ரணி, 13ஆவது அரச மைப்பு சீர்திருத்தத்தை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளு மானால் அதற்குத் தாம் இணைந்து ஆதரவளிக்கத் தயார் என தேசிய சுதந்திர முன் னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட் டுள்ளார். நாட்டைப் பின்நோக்கித் தள்ளும் செயற்பாட்டை தோற் கடிப்போம் என்ற தொனிப் பொருளில் தேசிய அமைப்பு கள் இணைந்து ஏற்பாடு செய் திருந்த கூட்டம் நேற்றுமுன் தினம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற் றது. அதில் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் விமல் வீரவன்ஸ, பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ற)

# அமைச்சராகப் பதவியேற்பேன்

## இப்படிக் கூறுகின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, நவ.14

அமைச்சுப் பதவியொன்றை ஏற்று அமைச்சராக இருப்பேன் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மங்கள சமரவீர, ஆயினும் எதிர்காலத்தில் ஆட் சியமைக்க இருக்கின்ற ஐக் கிய தேசியக் கட்சி தலைமை யிலான அரசிலேயே அமைச் சராக இருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.



மங்கள சமரவீர ஆளும்தரப்பு டன் விரைவில் இணைய வுள்ளார் என்றும், அதற்கான பேச்சு நடைபெற்று வருகின் றது என்று அண்மைக்கால மாகத் தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன. அது குறித்துக் கருத்துத் தெரிவிக் கும்போதே மங்கள மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"எந்த காரணத்துக்காகவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசுடன் இணைய மாட்டேன். அமைச்சுப் பதவிக் காக பேச்சு நடைபெறுவதாக கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

இது தொடர்பில் எந்தவொரு அமைச்சரையும் நான் சந் திக்கவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசைத் தோற்கடித்து அமையவிருக் கும் புதிய அரசில் முக்கிய அமைச்சராகவே பதவி வகிக் கப் போகின்றேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)





# 'செல்பி'

## ஆளுமையற்றவர்களின் செயல்

பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்களில் தொடர்ந்து தங்களது செல்பி (தம்மைத் தாமே புகைப்படம் எடுத்துக்கொள்வது) படங்களைத் தரவேற்றம் செய்பவராக இருந்தால், அவர்களது மேல் அதிகாரியால், சந்தேகம் கொண்டவராய் பார்க்கப்படுவார்கள்- இவ்வாறு அமெரிக்கப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் 'செல்பி' எடுப்பவர்களின் நோக்கம் என்ன என்பது குறித்து ஆய்வை மேற்கொண்டனர்.

தன் உடல் மீது அதிக ஆர்வம் கொண்டவர்கள் 'செல்பி' மீது அதிக ஆர்வமாக இருக்கின்றனர். அவர்கள் தங்களது இயல்பைத் தாண்டி செயற்கையான அழகிய தோற்றத்தை இதன் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றனர்.

'செல்பிக்களை' அடிக்கடி பதிவேற்றும் மனிதர்கள் பலர், தங்களது ஆளுமையை வெளிப்படுத்துவதில் தோல்வியடைந்து வீடுவதாக ஆய்வின் இறுதி அறிக்கை கூறுகிறது.

மேலும், உங்களுக்கு வேலை வழங்குபவர் பல கோணங்களில் உங்களை ஆய்வு செய்வார்.

'செல்பிக்களை' அதிகம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பரப்புபவரை, ஆளுமை மீது நம்பிக்கை கொள்ளாத - வெளித் தோற்றத்தின் மூலம் மட்டும் அனைத்தையும் எதிர்க்கொள்பவராகப் பார்க்கப்படுவார்.

'செல்பி' மீது ஆர்வம் கொண்டவர்கள் இயல்பாகவே கூட்டு முயற்சியில் ஈடுபாடு இல்லாதவராகவும் சுய கட்டுப்பாடு அற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது..

# ரஜினிக்கு விருது



2014 ஆம் ஆண்டின் சிறந்த இந்திய திரையுலக பிரமுகராக ரஜினியை இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த விருது, இந்திய திரைப்பட நூற்றாண்டையொட்டி வழங்கப்படுகிறது.

கோவாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடங்கி 30 ஆம் திகதி வரை இந்திய சர்வதேச திரைப்பட விழா நடைபெறுகிறது. இதில் ரஜினிகாந்துக்கு விழா ஆரம்ப நாளிலேயே விருது வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழாவில், இந்தியா முழுவதிலும் இருந்து நடிகர்கள் மற்றும் நடிகைகள், இயக்குநர்கள் மற்றும் திரையுலகப் பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். 75 நாடுகளில் இருந்து 179 திரைப்படங்கள் இந்த விழாவில் திரையிடப்பட உள்ளன.

# தத்துவம்

உன் உள்ளத்தில் சந்தேகம் நெருங்கி வருகிறது என்றால் பாசம்... உன்னைவிட்டு வெகு தூரம் செல்கிறது என்பதை மறந்து விடாதே.

## ஆன்மிக சாதனை

நாம் நமது தவறுகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் மற்றவரது சிறிய குறைகளைக்கூட மிகப் பிரமாண்டமாக விவரிக்கின்றோம். இதனால் நம்மால் தெய்வீக நிலையை அடைய முடிவதில்லை. ஆகவே நாம் முதலில் நமது தவறுகளை மறைப்பதை நிறுத்த வேண்டும். அதுமட்டுமன்றி அடுத்தவரது தவறுகளை மிகைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறுகளைத் தேடுவது தவறு. அதற்குப் பதில், நம்மிடம் இருக்கும் சிறிய தவறுகளைக்கூட பெரிய தவறாக நினைத்து அதனைச் சரிப்படுத்த வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. நாம் நமது தவறுகளைக் கண்டுபிடித்து அவற்றைக் களைய முற்படுவதுதான் உண்மையான சாதனை. தீயவற்றை விலக்கி மேன்மையான பழக்கங்களைக் கைக்கொள்ளுவதுதான் அதற்கு ஒரே வழி. அதுவே உண்மையான ஆன்மிக சாதனை.

ஞானக்கதிர்

# ரிலாக்ஸா வாசியுங்க




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூறிய உவமைக் கதை.

மன்னன் ஒருவன் வேட்டையாடப் புறப்படுவதற்கு முன்பு தனது அமைச்சரை நோக்கி 'மழை வருமா?' என்று கேட்டான். அமைச்சர் 'வராது' என்று சொன்னவுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். செல்லுகின்ற வழியில் ஒரு குடியானவன் கழுதை மேல் ஏறி வந்து கொண்டிருந்தான். மன்னனைக் கண்டதும், "கொஞ்ச நேரத்தில் மழை வரும்", என்று அவன் எச்சரித்தான். அதைப் பொருட்படுத்தாமல் சென்ற மன்னன், வேட்டையாடிக் கொண்டிருந்தபோது பலத்த மழை பெய்து முழுவதுமாக நனைந்து விட்டான். திரும்பும் வழியில் அதே குடியானவனைச் சந்தித்த மன்னன் மழை வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டான். உடனே குடியானவன், "எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். மழை வருகிற சமயங்களில் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக்கொள்ளும். அதைக்கொண்டு நான் தெரிந்து கொள்ளுவேன்", என்றான். அரண்மனை திரும்பிய மன்னன் அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அந்தக் குடியானவனின் கழுதையை அமைச்சராக்கினான். கதையை முடித்த அமெரிக்க ஜனாதிபதி லிங்கன் 'அதில் தான் அந்த மன்னன் ஒரு தவறு செய்து விட்டான். ஏனெனில் அன்று முதற்கொண்டு எல்லாக்கழுதைகளும் தங்களுக்கு ஏதாவது பதவி வேண்டும் என்று அலைகின்றன'– என்றார்.

# பனிப் பாறைகள்

## ஒரு பார்வை





பிரம்மாண்டமாக உயர்ந்து நிற்கும் பனிப் பாறைகளைப் பார்க்கும்போது ஆச்சரியத்தின் உச்சத்துக்கே சென்றுவிடுவோம். மேற்கத்தேய நாடுகளிலும், சீனா, அந்தாட்டிக்கா பகுதிகளிலும் பனி நிகழ்த்தும் அதிசயங்கள் உலகப் பிரசித்தம்.

### ஆர்ஜென்ரீனாவிலுள்ள பெரிட்டோ மாரினோ கிளேசியர்

ஆர்ஜென்ரீனாவில் உள்ள பெரிட்டோ மாரினோ கிளேசியர் என்ற பனிப் பாறைகளைக் குளிர்காலத்தில் பார்ப்பது என்பது 'திரில்' அனுபவமாக இருக்கும். இந்தப் பாறை 5 கிலோமீற்றர் நீளமும், 170 மீற்றர் கனமும், சுமார் 73 மீற்றர் உயரமும் கொண்டது. ஆண்டெஸ் மலைத் தொடரிலிருந்து பனி உருகி, வழிந்து வந்து ஏரியில் கலப்பதால், ஆண்டுதோறும் இந்தப் பாறை வளர்ந்து கொண்டே இருக்கிறது.



### ஐஸ்லாந்து - ஐஸ் குகை

இங்கு காணப்படும் பிரமாண்ட பனிப் பாறைகளைக் குடைந்து, பல நூறு மீற்றர் தூரத்துக்கு வளைந்த உட்கூரைகள், வெடிப்புகள், பள்ளங்களை உருவாக்கி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறார்கள். இந்த உள் குகைகளில் சிலர் மலை ஏறுவது போல, ஏறி இறங்கி உற்சாகம் பெறுகிறார்கள். லாங்ஜோகுல் கிளேசியரில் இருக்கும் குகை தனித்துவமானது.



### ஜப்பான் - ஜாவோ அன்சென்

ஜப்பானில் கி.பி.110 இல் கண்டுபிடிக்கப்பட்ட பழைய வெந்நீரூற்று இன்றும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. ஜப்பானில், ஜாவோ அன்சென் ஸ்கை ரிசார்ட் அருகே சென்றால், பனியில் அச்சுறுத்தும் அதிசயங்களைக் காணலாம்.

தனித்தனியாக எழும்பி நிற்கும் பனிப்பாறைகள் உண்மையில் ஆமோர் பீர் மரங்கள்தான்! குளிர் காலத்தில் இவற்றின் மீது பனி கொட்டி, இவற்றை இப்படி ஆக்கி விடுகின்றன.

**எங்கள மதிக்காத பிகரும், எங்களுக்குப் பிடிக்காத பிகரும்**



உலக அழகியா இருந்தாலும், போடின்னு சொல்லிட்டு, போயிட்டே இருப்போம். hhaa

# சாதனை படைத்த பேஸ்புக் மெசெஞ்சர்

உலகில் அதிகளவான பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ள பிரபல சமூகவலைத்தளமான பேஸ்புக், சற்றிங் செய்வதற்கென தனியாக அறிமுகம் செய்த அப்பிளிக்கேஷனே Facebook Messenger ஆகும். இந்த அப்பிளிக்கேஷன் ஆனது தற்போது 500 மில்லியன் பயனர்களை எட்டி சாதனை படைத்துள்ளது. இதன்மூலம் குறுஞ்செய்திகளை விரைவாக அனுப்பக்கூடியதாக இருப்பதுடன், ஸ்ரிக்கர்கள், வீடியோக்களை நண்பர்களுக்கு அனுப்பும் வசதியும் காணப்படுகின்றது.

இதேவேளை - உலகெங்கிலும் 1.35 பில்லியன் பயனர்களை பேஸ்புக் கொண்டுள்ளதாகவும் இதில் மூன்றில் ஒரு பங்கினர் பேஸ்புக் மெசெஞ்சர் அப்பிளிக்கேஷனைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய வசதியுடன் இணைய உலாவி




உலகில் அதிகளவானவர்களால் பயன்படுத்தப்படும் இணைய உலாவிகளில் ஒன்றான Firefox உலாவியின் புதிய பதிப்பை Mozilla நிறுவனம் வெளியிட்டுள்ளது.

33.1 ஆவது பதிப்பாக வெளிவந்துள்ள இந்த உலாவியில் இணையத்தேடல்களைப் பாதுகாப்பானதாக மேற்கொள்ள முடிவதுடன் குக்கீஸ்களை (Cookies) ஒரே ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் நீக்குவதற்கு Forget எனும் பொத்தான் தரப்பட்டுள்ளது.

இதில் பயனர்களை கண்காணிக்க முடியாது இணையத் தேடல்களை வழங்கும் DuckDuck Go தேடுபொறியினூடாக (Search Engine) இணையத் தேடல்களை மேற்கொள்ளும் வசதியும் தரப்பட்டுள்ளது.

# விற்பனையில் ASUS ZENWATCH



Asus நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட Zenwatch எனும் ஸ்மார்ட் கைக்கடிகாரமானது விற்பனைக்கு வருகின்றது.

199 டொலர்கள் பெறுமதியான இந்தக் கடிகாரனமானது 1.63 அங்கு அளவு, 320 x 320 Pixel Resolutionஐ உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1.2GHz வேகத்தில் செயல்படக்கூடிய QuaddCore Snapdragon 400 Processor, பிரதான நினைவகமாக 512MB RAM, மற்றும் 4GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கைபேசியில் Bluetooth 4.0, Microphone வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் 2015ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2015.01.01 தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்காக வழங்கப்படுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 25.11.2014 பி.ப 1.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 26.11.2014 ந.ப 12.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி : 26.11.2014 பி.ப 2.00 மணிக்கு

1. கேள்விப் பத்திரங்கள் 3 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 2 பிரதிகளை "தவிசாளர் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்குஅரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சிதிணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது .படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. இறைச்சிக்கடைக்கு மாதாந்தவாடகை செலுத்தப்படவேண்டும்.
6. கேள்விப்படிவகட்டணம் ,கேள்வித்தொகை மாதவாடகை என்பவற்றுக்கு இரண்டு வீதம் (2%) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T) செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள் ,அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையில் 1/3 பங்கு பகுதியை 05.12.2014 ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த மொன்றினை செய்து கொள்ளவேண்டும்.
9. கேள்வி சம்பந்தமான மேலதிக விடயங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

## 2015ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| | சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| 1 | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| | 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1345025.00 | |
| | 2. மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10000.00 | 524150.00 | 400.00 |
| | 3. மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| | 4. மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 453750.00 | 400.00 |
| 2 | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| | 1. காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் இல்லாது) | 1000.00 | 5000.00 | 462195.00 | |
| | 2. நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 253173.00 | |
| | 3. சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 209935.00 | |
| | 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 109960.00 | 400.00 |
| | 5. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 36470.00 | 300.00 |
| | 6. நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 59956.00 | |
| | 7. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 309000.00 | |
| | 8. ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 60500.00 | |
| 3 | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | |
| | 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1369950.00 | |
| | 2. பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 1000.00 | 5000.00 | 108912.00 | |
| | 3. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 201476.00 | 1500.00 |
| | 4. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 133947.00 | 1500.00 |
| 4 | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| | 1. மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 161330.00 | |
| | 2. இளவாலை பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 159720.00 | |
| | 3. மாதகல் பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 120663.00 | |
| | 4. மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 61831.00 | 250.00 |
| | 5. மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 12100.00 | 250.00 |
| | 6. மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 56265.00 | 250.00 |
| | 7. இளவாலைபொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 156531.00 | |

திரு.சண்முகம் சிவகுமாரன்
தவிசாளர்,
வலிதென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
14.11.2014.

(C/17704)(10.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நீதி கிடைக்கட்டும்

தமக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் அவர்கள் எந்தப் பாரதூரமான குற்றத்தை இழைத்திருந்தாலும் அவர்களைக் காப்பாற்றிவிடுவதும், வேண்டப்படாதவர்கள் என்றால் அவர்கள் எவ்விதக் குற்றமிழைக்காதவர்களாக இருந்தாலும் அவர்கள் மேல் வீண்பழி சுமத்தி குற்றவாளிகளாக தண்டனை பெற்றுக்கொடுப்பதும் உலகில் உயர் ஜனநாயகத்தைக் கொண்டுள்ள நாடுகளில் கூட இடம் பெறுவதுண்டு. ஆனால், இவ்வாறான சம்பவங்கள் இலங்கையிலோ அரசுமயப்படுத்தப்பட்ட பொறிமுறை போன்று அடிக்கடி இடம்பெறும் விடயங்களாக மாறிவிட்டுள்ளமை மிகவும் வேதனைக்குரியது. சட்டத்தின் ஆட்சியில் ஏற்பட்டுள்ள பாரிய சீர்குலைவும், நீதித்துறையின் சுயாதீனத்தின் மீது செலுத்தப்பட்டுள்ள தாக்கங்களும் இதில் முக்கிய பங்களிப்புச் செய்துவருகின்றமையை எவராலும் மறுக்க முடியாது.

போதைவஸ்துக்கடத்தல் குற்றச்சாட்டில் கடந்த மாதம் 30ஆம் திகதி மரணதண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களும் நிரபராதிகள்; அவர்கள் எவ் விதக் குற்றமும் இழைக்கவில்லை என இந்தியத்தரப் பினர் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. அந்த ஐந்து மீனவர்களும் குற்றமற்றவர்கள் என்பது நூற்றுக்கு நூறுவீதம் உண்மையாகும் என இந்தியாவைச் சேர்ந்த முன்னணி செய்தியாளர்கள் அடித்துக்கூறுவதுடன் அதற்குச் சான்றுகளையும் ஆணித்தரமாக வெளிப்படுத்தி வருகின்றனர். கடற்படையினால் தெரிவிக்கப்பட்ட உண்மைக்குப் புறம்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட அரச தரப்பு வாதத்தை அப்படியே ஏற்று மரணதண்டனையை மேல்நீதிமன்றம் வழங்கியுள்ளதாக இந்திய ஊடகவியலாளர்கள் கூறுவதுடன், மீனவர்கள் சார்பான முக்கிய ஆதாரங்கள் கருத்திற்கொள்ளப்படவில்லை என அடித்துக்கூறுகின்றனர். குறிப்பாக மீனவர்கள் 2011ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்ட இடமாகக் கடற்படையினரால் குறிப்பிடப்பட்ட நெடுந்தீவுப் பகுதியைவிடவும் 13 கிலோமீற்றர் தூரத்திலேயே மீனவர்கள் இருந்துள்ளமையை அவர்களது ட்ரோலர் படகில் பொருத்தப்பட்டிருந்த ஜி.பி.எஸ். சாதனத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன என்று இந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பாவி இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள கதியை அடுத்து உண்மையை வெளிக்கொணர்வதற்காக அவர்கள் எடுத்துள்ள பிரயத்தனம் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியது. ஒரு விடயத்தில் ஒரே குரலில் பேசுகின்ற வழக்கமே வரலாறாகிப் போய் விட்டுள்ள இந்த நாட்டில் மீனவர்களை மன்னிப்பதற்கு தயார் என்றும் அப்படி முடிவு ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் முன்னுக்குப்பின் முரணான செய்திகள் வெளிவருகின்ற நிலையிலும் மீனவர் விடயத்தில் அரசுகள் கபட நாடகம் ஆடுவதான குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் மீனவர்கள் மீதான தண்டனைக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதற்கு உறுதியான சான்றுகள் இருக்கும் நிலையிலும், அவர்கள் சார்பில் வழக்கை முன்னெடுப்பதற்கு வலுவான சக்திகள் இருக்கின்ற நிலையிலும், மீனவர்களுக்கு என்றோ ஒருநாள் நிச்சயம் நீதிகிடைக்கும் என்ற நம்பிக்கை மேலெழுகிறது.

ஆனால், பொய்க்குற்றச்சாட்டின் அடிப்படையில் எத்தனை பேர் இன்று சிறைக்கூடங்களில் தமது வாழ்வின் உன்னதத் தருணங்களையெல்லாம் தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என எண்ணிப்பார்க்கும் போது ஏற்படும் வலிகளை இலகுவில் ஆற்றுப்படுத்தி விடமுடியாது. அதிலும் நலிவுற்ற நம்மினத்தவர்களே இதில் அதிகமாக பாதிக்கப்படுவது வலிகளின் கனதியை மேலும் அதிகப்படுத்துகின்றது. இவர்களது சார்பில் குரல்கொடுக்க சக்திமிக்க தரப்பினர் இல்லாமையால் எதிர்காலம் இருள்மயமாகவே காணப்படுகின்றது. தமது மீனவர்கள் அப்பாவிகள் என உணர்ந்து உரிமையோடு குரல் எழுப்பும் இந்தியத்தரப்பினர், செய்யாத குற்றங்களுக்காக தண்டனையை அனுபவித்துவருகின்ற எம் சகோதரர்களுக்கு நீதி கிடைக்க குரல்கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# தமிழகமே எமக்குப் பாதுகாப்பு இலங்கைக்கு திரும்பமாட்டோம்

## வடக்கு முதல்வரின் அழைப்பு நிராகரிப்பு

'தமிழகத்தில் நிம்மதியாக, பாதுகாப்பாக உள்ளோம்; இலங்கை சென்றால், எங்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இருக்காது; நாம் அங்கு செல்ல விரும்பவும் இல்லை; இந்தியக் குடியுரிமை கிடைத் தால் போதும்' என, தமிழகத்தில், அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர். இலங்கை வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் அழைப்பை, அவர்கள் நிராகரித்து விட்டனர்.

இலங்கையில், தமிழர் வசிக்கும் பகுதிகளை தனி நாடாக அங்கீகரிக்கக் கோரி, கடந்த 1983இல் விடுதலை புலிகளுக்கும், இலங்கை ராணுவத்துக்கும் இடையே மோதல் மூண்டது. இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு கோரி தமிழகம் செல்லத் தொடங்கினர். கடந்த 1983 முதல் 2010 வரை, நான்கு கட்டங்களாக இலங்கையில் இருந்து 3 லட்சம் தமிழர்கள், தமிழகம் சென்றனர். இவர்கள் அகதிகள் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் போர் முடிந்து, சுமுகமான சூழல் ஏற்பட்ட நிலையில், பல்வேறு கட்டங்களாக, 2. லட்சம் பேர், இலங்கைக்குத் திரும்பிச் சென்று விட்டனர். மீதமுள்ளோர், இலங்கை செல்லாமல், தமிழகத்திலேயே தங்கி விட்டனர்.

தற்போது, தமிழகத்தில், 99ஆயிரத்து 543 இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகின்றனர். இவர்களில், 65ஆயிரத்து 272 பேர் இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட, 112 முகாம்களிலும், முகாமுக்கு வெளியே சொந்த விருப் பத்தின் பேரில், 34ஆயிரத்து 271பேரும் உள்ளனர். இவர் களுக்கு, இந்தியக் குடியுரிமை மட்டுமே தரவில்லை. மறு வாழ்வுக்கான பல்வேறு உதவிகளையும், அரசு செய்து வருகிறது. பொது வாக, எல்லோருக்கும் கிடைக்க வேண்டிய அரசு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 25, 30 ஆண்டு களாக, தமிழகம் தான் தங்களின் நிரந்தர நாடு என்பதுபோல் அவர்கள் தங்கிவிட்டனர்.

இந்நிலையில், தமிழகம் வந்த இலங்கை வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், 'அகதிகளாக புலம்பெயர்ந்து, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்ப வேண்டும்; அவர்களது மறு வாழ்வுக்கான வசதிகளை இந்திய அரசு செய்து தர வேண்டும்' என அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை, அகதிகள் முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்கள் நிராகரித்துள்ளனர். 'தமிழகத்தில், இந்திய குடியுரிமை தவிர, ஏனைய அனைத்துச் சலுகைகளும் கிடைக்கின்றன. எங்கள் குழந்தைகள், இங்கேயே திருமணம் முடித்துள்ளனர். குழந்தைகள், பேரக்குழந்தைகள் என, நிம்மதியாக மகிழ்ச்சியாக பாதுகாப்பாக வாழ்கிறோம்; எங்களுக்குஇலங்கை திரும்பும் எண்ணம் இல்லை' என்று, அவர்கள் கூறுகின்றனர்.

### பாதுகாப்பு இல்லை

'அரசு வேலை தராவிட்டாலும், வெளி நிறுவனங்களில் வேலை செய்து, வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையில் இன்னமும் பாதுகாப்பான சூழல் இல்லை. அங்கு சென்றால், பாதுகாப்பாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை. எங்களுக்கு அழைப்பு விடுத்த முதல்வர் விக்னேஸ்வரனுக்கே அங்கு பாதுகாப்பு இல்லை' என, வெளிப்படையாக பேசுகின்றனர். 'அதற்காக, நாங்கள் தொடர்ந்து தமிழகத்தில் அகதிகளாக இருக்கவும் விரும்பவில்லை. பர்மா தமிழர்களுக்கு வழங்கியது போல், எங்களுக்கு இந்திய குடியுரிமை பெற்றுத்தர, தமிழக அரசு உதவ வேண்டும்' என இலங்கை தமிழர்கள் தெரிவித் துள்ளனர்.

இது குறித்து, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு திட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், 'அசையாச் சொத்துகள் ஏதும் வாங்கக் கூடாது என்பதுதான் அவர்களுக்கு நிபந்தனை. மற்றப்படி எந்த நெருக்கடியும் இல்லை. எல்லா சலுகைகளும் கிடைத்து, பாதுகாப்பாக இருப்பதால், தமிழகம் பிடித்துப்போய், குடியுரிமை கோருகின்றனர். இதுகுறித்து மத்திய அரசு தான் முடிவு செய்ய வேண்டும்' என்றார்.

### உயிருக்குப் பயந்தே வந்தோம்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் முகாம் தலைவர் தங்கையா கூறுகையில், எங்களுக்கு வாழ்வு கொடுத்தது இந்தியா. வாழ்ந்தாலும், செத்தாலும் இங்கே தான். இலங்கை வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கூறுவது, முற்றிலும் பொய். இவர்களுக்கே அங்கு பாதுகாப்பில்லை. எங்களால் எப்படி வாழ முடியும்?

சென்னை புழல் அருகே, காவாங்கரை முகாமில் வசிக்கும், திருகோணமலை, நகுலேஸ்வரன் கூறுகையில், இந்தியாவில், எங்களுக்கு கிடைக்கும் குறைந்தபட்ச வேலைவாய்ப்புக் கூட, இலங்கையில் கிடைப்பதில்லை. அங்கு விலைவாசியும் அதிகம். இந்தியா தலையிட்டு பிரச்சினை தீர்ந்து, தமிழர்கள் நிம்மதியாக வாழும் நிலை உருவானால், சந்தோஷம் தான். ஆனால், அதற்கான உத்தரவாதத்தை அளிக்க, யார் முன் வருவார்கள்? இங்கு இருப்பதையே பாதுகாப்பாக கருதுகிறோம். எங்களுக்கு இங்கு குடியுரிமை கொடுத்தால், உதவியாக இருக்கும். இலங்கைப் பிரச்சினைக்கு, முழு தீர்வு ஏற்பட்ட பின், அங்கு செல்வது பற்றிச் சிந்திக்கலாம்.

கோவை, பேரூர் அருகில் உள்ள பூலுவபட்டி முகாமில் வசிக்கும் சிவதர்சினி கூறுகையில், இன்னும், அங்கு நிலைமை சீராகவில்லை. அங்கு எங்கள் உறவினர்கள் பலர் உள்ளனர். அவர்கள் இன்னமும் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். எங்கள் உயிருக்கு அங்கு உத்தரவாதம் இல்லை. அதனால், இந்திய அரசு எங்களைத் திருப்பி அனுப்பக் கூடாது. போக எங்களுக்கும் விருப்பம் இல்லை-என்றார்.

விழுப்புரம் மாவட்டம், கீழ்புத்துப்பட்டு முகாமில் வசிக்கும் ராஜரத்தினம் கூறுகையில், இலங்கை, மன்னார் மாவட்டத்தில் இருந்து, 1990 இல் தமிழகம் வந்தோம். அப்போதிலிருந்து முதல் இங்கு வசித்து வருகிறோம். எனக்கு, நான்கு குழந்தைகள் உள்ளனர். அனைவருமே இந்த முகாமில் பிறந்தவர்கள். விக்னேஸ்வரன் அழைப்பை வரவேற்கிறோம். ஆனால், அங்கு அடிப்படை வசதி கிடையாது. தமிழகத்தில், நாங்கள் தினமும் கூலி வேலைக்குச் சென்று தான் பிழைக்கிறோம். ஆனால், நிம்மதியாக இருக்கிறோம்.

மானாமதுரை மூங்கில் ஊரணி முகாம் தலைவர் நடராஜ் கூறுகையில், தமிழகத்தில், 115 அகதிகள் முகாம்கள் உள்ளன. தமிழகம் வந்த வடக்கு மாகாண முதல்வர், ஒரு முகாமுக்குக் கூடச் செல்லவில்லை. அகதிகள் எப்படி இருக்கின்றனர் என்று கூடப் பார்க்கவில்லை. அவரது அழைப்பை ஏற்று, இலங்கைக்கு எந்த அடிப்படையில் செல்வது. பெரும்பாலான அகதிகளுக்கு, திருமணம் முடிந்து குழந்தைகள் உள்ளனர். குழந்தைகள் அனைவரும் பள்ளி, கல்லூரிகளில் படித்து வருகின்றனர். கல்வியைப் பாதியில் விட்டு விட்டு, எப்படி இலங்கை செல்வது. இலங்கையில் அவருக்கே பாதுகாப்பு இல்லை. இதில் எங்களை அழைப்பது வேடிக்கை-என்றார்.

கோவை, பேரூர் அருகில் உள்ள பூலுவபட்டி இலங்கை தமிழர் முகாமில் வசிக்கும் தியாகராஜன் கூறுகையில், நான் அங்கு இருந்தபோது, 14 முறை, என்னை ராணுவத்தினர் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று துன்புறுத்தினர். நாங்கள் அங்கு சென்றால் இதே நிலை தொடரும். அங்கு அமைதி திரும்பி விட்டது என்பதெல்லாம், பொய்யான தகவல்-என்றார்.

தேவகோட்டை முகாம் தலைவர் ஆர்.குமார் கூறுகையில், தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்குச் செல்ல எங்களுக்கு விருப்பமில்லை. இங்கு இந்திய குடியுரிமை கிடைக்காவிட்டாலும், அரசு எங்களை நல்ல முறையில் கவனித்துக் கொள்கிறது. தமிழர்கள் அண்ணன், தம்பிகளாகப் பழகுகின்றனர். இலங்கையில் ராணுவத்தினர் எங்களை கொன்றாலும் கேள்வி இல்லை. அங்கு போதிய மக்கள் இல்லை என்றால், விக்னேஸ்வரன் முதல்வராக ஆகியிருக்க முடியாது-என்றார்.

திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து அகதிகள் முகாமில் வசிக்கும், எஸ்.மஞ்சுளாதேவி கூறுகையில், இலங்கை வவுனியாவில் இருந்து, 1990இல் இங்கு வந்தோம். திருமணம், முகாமில் தான் நடந்தது. மகன், மகள் உள்ளனர். இங்கு அடிப்படை வசதிகள் நன்றாக உள்ளன. இலங்கை செல்ல விருப்பம் இல்லை. இந்திய அரசு, எங்களுக்கு குடியுரிமை தர வேண்டும். இலங்கை சென்றால், பிள்ளைகளின் படிப்பு கேள்விக் குறியாகி விடும்-என்றார்.

### தமிழக அரசின் சலுகைகள்

குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபா. உறுப்பினர்களுக்கு தலா, 750 ரூபா. 12 வயதுக்கு குறைவானோ ரில் ஒருவருக்கு, 400 ரூபா மாதாந்த உதவி வழங்கப்படுகிறது. ரேஷன் கார்ட் வழங்கி, 20 கிலோ இலவச அரிசி, மானிய விலையில் ஏனைய பொருள்கள் வழங்கப்படுகின்றன, 12ஆம் வகுப்பு வரை இலவச கல்வி. உயர் கல்விக்கு, படிப்பின் தன்மைக்கேற்ப, 850 ரூபா முதல், 4,700 ரூபா வரை உதவி. இதுதவிர, அரசு விடுதிகளில் தங்கிப் படிக்க வசதி, தையல் பயிற்சி, இலவச தையல் இயந்திரம், மகளிர் சுய தொழில் வழங்க கடன் உதவி, அரசின் எல்லா விதமான மாதாந்த உதவித் தொகைகள், குழந்தை பிறப்புக்கு 12 ஆயிரம் ரூபா உதவி; இறந்தோர் ஈமக் கிரிகைக்கு 5,000 ரூபா உதவி; விபத்தில் இறந்தால், 25 ஆயிரம் ரூபா நிவாரண உதவி, குடியுரிமை தவிர, தமிழக மக்களுக்குக் கிடைக்கும், அரசின் சகல சலுகைகளும், இவர்களுக்கும் கிடைக்கின்றன.

### முகாம்களுக்கு வெளியே?

தமிழகத்தில், இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட, 112 அகதிகள் முகாம்கள் உள்ளன.

1983 முதல், நான்கு கட்டங்களாக, தமிழகத்திற்கு, 3.04 லட்சம் பேர் வந்துள்ளனர்.

பல்வேறு நிலைகளில், 2.04 லட்சம் பேர் இலங்கை திரும்பி விட்டனர். 99,543 பேர் தமிழகத்தில் உள்ளனர்.

19,728 குடும்பங்களைச் சேர்ந்த, 65,272 பேர் முகாம்களிலும், அரசின் அனுமதியோடு, 13,271 குடும்பங்களைச் சேர்ந்த, 34,271 பேர், முகாம்களை விட்டு வெளியிலும் வசித்து வருகின்றனர்.

*நன்றி- தினமணி*

14 NOV 2014

# போராட்டக் களமாகியுள்ள வாழ்க்கை

ம.துவாரகா.

எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய அதிகமான சிந்தனை மனிதீனின் வாழ்க்கையை போராட்டக் களமாக மாற்றுகிறது. வாழ்க்கை கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடானதொரு பாதையாகும். மனிதன் நிகழ்கால வாழ்க்கையின் மகிழ்ச்சியையும், நிம்மதி யையும் தொலைத்து, இந்த வாழ்க்கையை ஒரு சுமையாகவே சுமக்கத் தொடங்கி விடுகிறான். மனிதனின் மனம் தெளிவாகவிருந்தால், மகிழ்வு முகத்தில் தோன்றும். மனம் நொந்து போயிருந்தால் முகம் வாடி வதங்கிக் காணப்படும். இது இயற்கை. எமது மனதைப் போராட்டம் சூழ்ந்து கொண்டால் மனம் அமைதியைத் தேடி, அலைகிறது. இந்த அமைதியைத் தியானம் அல்லது நல் ஆற்றுப் படுத்துகை தருகிறது. இது உடல் நலம், அமைதி, அச்சமின்மை போன்றவற்றை அளிக்கிறது. ஆற்றுப் படுத்துகைக்குச் செல்வதற்கு பலர் தயக்கம் காட்டி வருகிறார்கள். அதனைஒரு கௌரவக் குறைவாக எண்ணுகிறார்கள். இது ஒரு சாதாரண விடயம் என்பதைப் புரிந்துகொள்ளாமல் பலரும் ஆற்றுப் படுத்துகை பெறத் தவறும் போது மனநோயாளி களாக மாறுகிறார்கள். இறைவனை வணங்குவதும் ஓர் ஆற்றுப்படுத்துகையே. மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் ஆற்றுப்படுத்துகை அவசிய மாகும். எப்பொழுதும் மற்றவரின் செயலை மன தாரப் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்ற வரின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும். இது மற்றவர்களின் அன்பையும், பாசத்தையும் பெற்றுக் கொடுக்கிறது. மனிதன் முதலில் தேவையற்ற வீண் சச்சரவுகளை வளர்க்கும் நிகழ்வுகள் போன்றவற்றைத் தவிர்க்கப் பழக வேண்டும். நம்மை விடப் பிறர் அதிகமான கருத் துகள் தெரிந்தவராயிருந்தால், அவர் தம்மைவிட குறைந்த பதவியினராகவோ, அல்லது வயது குறைவானவராகவோ இருந்தாலும் கூட, அவரி டமிருந்து நாம் கற்றுக்கொள்ள முன் வர வேண்டும். இதுபோல எமக்குத் தெரிந்த கருத்துக்களை மற்றவர் களிடம் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும். காலத்தின தும், சூழலினதும் மாற்றங்களை மனிதன் மனப்பக் குவத்தோடு, மனம் திறந்து ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும். ஒரே மாதிரியான வாழ்க்கை யினால் மனிதன் அவ்வப்போது சலிப்படைகிறான். இதனால் மனிதன் அதற்கேற்ப மாற்றங்களை உரு வாக்கிக் கொள்வதுடன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் எந்த மாற்றங்களையும் வரவேற்கப் பழகிக் கொள்ள வேண்டும். எதனையும் மற்ற வர்களிடமிருந்து எதிர்பார்க்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும். எதிர்பார்ப்பற்ற வாழ்க்கை ஏமாற்றத்தைத் தவிர்க் கும். இருளும் வெளிச்ச மும் மாறி மாறி வரு கின்றன. இருள் எம்மைச் சூழ்ந்து கொள்ளும் போது அச்சம், பதற்றம், ஏற்படுகிறது. உடனே கடவுளை அழைக்கிறோம். சந்தோஷத் தையும், பணத்தையும் நாடும் இன்றைய மனிதன் அவற்றை அடைவதற்குப் பல வழிகளில் போராடுகிறான். இவ்வாறு போராடிக் கிடைக்கும் சந்தோஷம் தேவைதானா? என்ற கேள்வியும் கூடவே பிறக்கிறது. தினமும் போராட்டத்தையும், பதற்றத்தையும் வாழ்க்கையின் அங்கமாக கொண்டு இந்த உலகின் சுகபோகங்களை அனு பவிப்பதற்கு மனிதன் பெரிதும் கஷ்டப்படுகிறான். இத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு அன்றாட வாழ்க்கையை வாழ்வதே சிரமமாகி விடுகிறது. இதனால் மனிதன் வாழ்க்கையில் விரக்தியடைந்து வெறுப்பான வாழ்க்கையை வாழத் தொடங்குகிறான். காலம் காலமாக மனி தன் வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமலே நிலையற்ற சுகத்தை நாடு கிறான். உண்மையான பாதையை நாடும் போது எமக்குள்ளே பல கேள்விகள் பிறக்கின் றன. உண்மையான பாதை எம்மை தெளிவாகச் சிந்திக்க வைக்கிறது. வாழ்க்கை வாழ்வதற்கு காரணமான பணத்தின் மீதிருந்த ஆசையைக் குறைத்து, அமைதியான பதற்றமில்லாத வாழ்க் கையை வாழத் தொடங்கும்போது. எமக்கு மனநிம்மதியும், தன்னம்பிக்கையும் பிறக்கிறது. உண்மையான வாழ்க்கை தெம்பான சூழ்நிலை யையும், தெளிவான எண்ணங்களையும், கொடுக்கிறது. உண்மை என்றும் எப்போதும் நிலையான அமைதியைக் கொடுக்கிறது.

ஒவ்வொரு இரவுக்கும் பின்னால் எப்படி பகல் உருவாகிறதோ, அதுபோல ஒவ்வொரு போராட்டத்துக்குப் பின்னால் அமைதி நிலவுகிறது. நிச்சயமாக ஒவ்வொரு நியாயமான போராட்டத்தின் முடிவிலும் விடிவு ஒன்று காத்திருக்கும். இதுதான் உண்மை. இதுதான் வாழ்க்கை. பிறப்பும், இறப்பும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். இதனிடையே எத்தனையோ மாற்றங்கள் தோன்றுகின்றன. இந்த உலகத்தில் பிறந் தோம், வளர்ந்தோம், உழைத்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இராமல் மற்றவர்களுக்காக என்ன செய்தோம். இந்த நாட்டுக்கு என்ன செய்தோம் என உங்களை நீங்களே கேள்வி கேட்டு அதற்கான பதிலை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். இந்த மனித வாழ்க்கை ஒரு சக்கரம் போலச் சுழலுகிறது. ஆகவே வாழ்க்கைச் சக்கரத்தில் எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள். ஒரே பாதையில் ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க் கைச் சக்கரம் திடீரென்று மாற்றங்களைச் சந்திக்க நேரிடும் போது தடுமாறுகிறது. இந்தத் தடுமாற்றத்தை நீக்கி மனப் பக்குவத்தோடு மாற்றங்களை ஏற்றுக் கொண்டு திறமையாக வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டும் மனிதன். வாழ்க்கையைச் செம்மையாகப் புரிந்து கொண்டு வாழ்கிறான் என்று சொல்லலாம். எத்தனையோ காலங்கள் ஓடி விட்டன. இன் னமும் எத்தனையோ காலங்கள் ஓட வேண் டும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள காலத்தில் இந்த மனிதனின் வாழ்க்கை எத்தனை வகையில் மாறுபடுகின்றது. மனிதன் ஒவ்வொரு காலத்திலும் ஒவ் வொரு அனுபவத்தைப் பெறுகிறான். இந்த அனுபவம் அவனுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பாடமாக அமைந்து விடுகிறது. இந்த இரண்டு காலச் சக்க ரங்களுக்கிடையே மனிதன் செருக்கு, கோபம், போன்ற குணங்களுக்கு அடிமை யாகிறான். செருக்கு மனிதனின் சுய ரூபத்தை அழித்து அவனைத் தனிமை யாக்குகிறது. அகம்பாவத்தால் மனிதன் மகிழ்ச்சியைத் தொலைக்கிறான். வாழ்க் கையில் நிகழும் சம்பவங்களில் நல்லதாக வும், கெட்டதாகவும் நடக்கிறது. இரண்டை யும் மனிதன் ஒன்றாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையைச் சாதாரணமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை யில் எப்போதும் மகிழ்ச்சியான சம்பவங் கள் மட்டும் நிகழ்ந்து கொண்டிருந்தால் வாழ்க்கை அவ்வளவு சுவையாகத் தோன் றாது. அவ்வப்போது பிரச்சினைகளும் தோன்றினால்தான் வாழ்க்கையில் அதனை சமாளிக்கும் தைரியம் பிறக்கும். ஒவ்வொருவரும் தம்முடைய எதிர் காலத்தை ஆக்குவதோ; சிதைப்பதோ அவர்களின் வாழ்க்கையை நோக்கிய பார்வையில் தான் இருக்கிறது. இதற்கு பல காரணிகள் இருக்கலாம். அதிலே முக்கிய மாக அவர்களது இளம்பராயத்து வளர்ப்பு முறை பெரும் பங்கு வகிக்கிறது எனலாம். ஆனால் தமது செய்கைகளே தமது குணங்களுக்கு காரணமாக இருக்கிறது என்பதை புரியாமல் பலர் வாழ்கிறார் கள். இதை உணர்ந்து தமது குணங் களையும் கொள்கைகளையும் மாற்றுவ தன் மூலம் சமூகத்தில் உண்மையான மனிதர்களாக வாழப் பழகுவோம்.



### இது மரநடுகை மாதம்

## மர அழிப்பின் பாதக விளைவுகளை உணருவோமாக

சி.நற்குணலிங்கம், நெல்லியடி.

இயற்கை வளமாகக் கருதப்படும் காடுகள் ஆதிகாலம் முதல் இற்றைவரை அழிக்கப்பட்டு வருகின்றன. காட்டு நிலங்களின் பரப்பளவு பெரிதும் குறைந்துவிட்டது. பயிர்ச்செய்கைக் காக, வீதிகள், கட்டடங்கள், குடியேற்றங்கள், மின்சாரக் கம்பங்கள், வீட்டு உபயோகத்துக் கான பல்வேறு பொருள்களின் உற்பத்திக்காக, கடதாசி உற்பத்தி, விறகு எனப் பலதேவைகள் கருதியும் பெருமளவு மரங்கள் அழிக்கப்படு கின்றன.

காட்டு நிலத்தின் முக்கியத்துவம் அனைவரா லும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் இழந்து போன மரங்களுக்கு பதிலீடு செய்வதற்காக மரங்களை நட்டு வளர்ப்பதற்கு மரநடுகை மாதத்தில் அரச, அரசசார்பற்ற சகல அமைப் புக்களும், நிறுவனங்களும், அக்கறை காட்டி வருகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்படாத இடங்களில் காடுகளை வளர்த்து வரலாம். திட்டமிட்ட முறைப்படி காடு வளர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். வீட்டுத் தோட்டங்களிலும் மரங்களை வளர்க்க முயற் சிக்க வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளில் பல்வேறு வகையான மரங்கள் "மரப் பண் ணைகள்" என்ற திட்டத்தின் மூலம் வளர்க்கப் படுகின்றன. "இபில் இபில்" போன்ற மர வகைகள் இதற்கு மிகவும் பொருத்தமான மரங்களாகும். காடுகள் அழிக்கப்படுவதால் புவி வெப்பமடை தல் என்ற பாதக விளைவு ஏற்படுகின்றது. புவிக்கு பாதுகாப்பை வழங்குவதற்குப் பதிலாக அச் சுறுத்தலை வழங்குகின்றோம். மனித வாழ்க் கைக்கு மிகவும் ஏற்ற கோளான புவியை வெப்பமடையச் செய்வது புவியை நோயாளியாக்கும் ஒரு செயற்பாடா கும்.

புவியை சூடாக்குவதன் மூலம் வாழப் பிறந்த நாம் உயிரின அழிவுக்கான காலத்தை சுருக்கிக் கொள்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது.

எதை எப்போது செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று நாம் சிந்திக்கத் தொடங்கினாலே நமக்குள் எதையும் நியாயமாக நேர்மையுடன் ஒழுக்கத்துடன் செய்யவேண்டும் என்ற பக்குவம் ஏற்படும். இந்தப் பக்குவத்துடன் மரங்களை அழிக்காது வளர்ப்பதன் மூலம் இந்தக் கால மக்கள் மட்டுமன்றி வருங்கால தலைமுறையினரும் பயன் பெறலாம்.



# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



அதற்கு நன்றிக்கடனாக அவர் எப்பொழுது நல்லெண்ணப் போட்டியில் ஆட அழைத் தாலும் சச்சின் போக மறுப்பதில்லை. முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானைச் சந்தித்த சச்சின் சொதப்பி எடுத்தார். இருபத்துனான்கு பந்துகள் ஆடினாலும் எந்த திருப்தியும் ஏற் படவில்லை. பவுன்சர்கள் சர்வதேச கிரிக் கெட்டுக்கு அவரை வரவேற்றன. ரவி சாஸ்திரி, முதல் இருபது நிமிடங்கள் பொறுமையாக ஆடு என்று அறிவுரை சொல்ல அது அவருக்கு பெரிதும் உதவியது.

**கொட்டிய குருதி, கிட்டிய நான்குகள்:**

சியால்கோட்டில் நடந்த போட்டியில், வக்கார் யூனுஸ் வீசிய பந்தை சச்சின் தவறாக கணிக்க, அது நன்றாக மேலெழும்பி ஹெல்மெட்டில் பட்டு மூக்கைப் பதம் பார்க்க, குருதி சொட்டச் சொட்ட சச்சின் உள்ளே போனார், அப்போது குழந்தைகள் பால் மட்டும் குடித்தால் நல்லது என்று விளம்பரங்கள் காட்டப்பட்டன. திரும்பி வந்தார் சச்சின். அடுத்தடுத்து இரண்டு பந்துகள் நான்காகப் பறந்தன. அரைச் சதம் கடந்தார் அவர். காட்சிப் போட்டியாக நடந்த 20/20 போட்டியில் ஒரே ஓவரில் பந்து வீச்சாளர் காதரைப் போட்டுப் பின்னி எடுத்த சச்சின், நான்கு ஆறுகளை விளாசித் தள்ளியதை மறக்க முடியாது.

நியூஸிலாந்து அணியுடனான போட்டியில், இரண்டு நான்குகள் அடித்த பிறகு தவறாக கணித்து தூக்கி அடித்து வெளியேறினார். அவரின் பிடியை பிற்கால இந்தியப் பயிற்சி யாளர் ஜோன் ரைட் எடுக்க சச்சின் அழுதுகொண்டே முதல் சதத்தைத் தவறிவிட்டார். நீங்கள் அந்தப் பிடியை விட்டிருக்க வேண்டும் ஜோன் என்று பிற்காலத்தில் சச்சின் சொன்னார்.

முதல் சதத்தை எப்படிக் கொண்டாடுவது என்று தெரியாமல் நான் கூச்சப்பட்டேன் என்பதும் சச்சினின் வாக்குமூலம். சச்சினுக்கு அந்தப் போட்டியின் சதத்துக்காக வழங் கப்பட்ட ஷம்பெயின் போத்தலை பதினெட்டு வயது நிறையாததால் தொடாமல் வைத் திருந்து சாராவின் முதல் பிறந்தநாளின்போது திறந்திருக்கிறார். அந்தப் போட்டிக்குப் பின்னர் வீட்டிலிருந்து நாற்பது பேர் அவருடன் பேசுவதற்குக் காத்திருந்தனர்.

ஒரு போட்டியில் பந்தை ஒருமுறை தூக்கி பந்து வீச்சாளரிடம் கொடுக்கப்போனபோது அலன் போர்டர், பந்தை எங்களிடம் தூக்கி எறிந்தால் தொலைந்தாய் என்று எச்சரிக்கை இராகிவரை சச்சின் பின்பற்றினார்.



## சாதனைகளின் உச்சியில் மாற்றுத்திறனாளி

சென்னை, நவ. 14

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கென முதன்முறையாக அறிவிக்கப்பட்ட செஸ் போட்டியில், வெண்கலப் பதக்கத்தை ஜெனிதா பெற்றார். இப்போட்டியில் கலந்துகொண்ட முதல் பெண் என்கின்ற பெருமைக்கு இவர் சொந்தக்காரர் ஆகிறார். மூன்று வயதாயிருந்தபோது போலியோ நோயால் பாதிக்கப்பட்டதால் இரண்டு கால்கள் மற்றும் ஒரு கை செயலிழந்தாலும், துளியும் நம்பிக்கை இழக்காமல் சாதனைகளைத் தொட்டிருக்கிறார். இவர் பல போட்டிகளில் வெள்ளிக் கோப்பை, வெண்கலம் மற்றும் தங்கம் போன்றவற்றைப் பெற்றுள்ளார். இந்த ஆண்டு ஜூன் மாதம் ஸ்கொட்லாந்து, கொமன்வெல்த் போட்டியில் வெண்கலம், உலக உடல்ஊன முற்றோர் தனி நபர் போட்டியில் செப்டம்பரில் தங்கம் எனத் தொடர்ந்து பதக்கங்களைக் குவித்திருக்கிறார். (ரி)

## கேளிக்கை நகரம்

உலக அளவில் கேளிக்கைக்கு உகந்த நகரங்களில், டில்லி 25வது இடம் பெற்றுள்ளது. முதல் இடத்தை ஜேர்மனியின் தலைநகர் பெர்லின் தட்டிச்சென்றுள்ளது. இந்த ஆய்வுக்காக உலகின் 1,800 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில், பார்கள், மியூசியம், உள்ளிட்ட அனைத்து வசதிகளிலும் பெர்லின் நகரம் முதல் இடத்தைப் பிடித்தது. (ரி)

# உலகம் சுற்றுகிறார் மோடி

## அடுத்தடுத்து ஒப்பந்தங்களும் உத்தரவுகளும்

டில்லி நவ 14

பிரதமர் நரேந்திர மோடி மியன்மார், ஆஸ்திரேலியா, பிஜி ஆகிய நாடுகளில் 10 நாள் அரசு முறைச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்காக டில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார். பிரதமர் நரேந்திர மோடி ஆசியான் கூட்டமைப்பு மாநாடு மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10 நாள்கள் சுற்றுபயணமாக மியன்மார், ஆஸ்திரேலியா, பிஜி ஆகிய நாடுகளுக்கு புறப்பட்டார். மேலும் இந்தப் பயணத்தின்போது தனிப்பட்ட முறையில் சீன அதிபர் ஜீ ஜிங்பிங்கையும் சந்திக்கிறார். மேலும் பிரிஸ்பேர்னில் சீன அதிபருடனான சந்திப்பின் போது சீனாவிடம் இருந்து இந்தியாவுக்கு சுமார் 20 பில்லியன் டொலருக்கு முதலீடுகள் செய்வது தொடர்பாக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மியன்மாரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி. இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறு ஆசியான் நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிய அமைச்சரவையுடன் குறைவான அரசு, நிறைவான நிர்வாகம் என்ற தாரக மந்திரத்தோடு மோடி ஆட்சியமைத்தார். ஆட்சிக்கு வந்த 5 மாதத்துக்குள் அமைச்சரவை விரிவாக்கத்தின் மூலம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார். அமைச்சர்களுக்கான ப்ணிகள், இலக்குகள், வழிமுறைகள் அனைத்தும் பிரதமர் அலுவலகத்திலிருந்தே அறிவிக்கப்படுகின்றன. பிரதமரின் அலுவலகத்தில் இருக்கும் மூத்த அதிகாரிகள் அனைத்துத் துறைச் செயலர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு செயற்படுகின்றனர். மத்திய அமைச்சர்கள் விடுமுறை எடுப்பதை தவிர்க்க வேண்டும். பொது விடுமுறை நாள்களிலும் பணியாற்ற வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார். புதிய அமைச்சர்கள் பதவியேற்ற மறுநாள் அமைச்சர்கள் அனைவரும் பங்கேற்கும் கூட்டம் ஒன்றை, பிரதமர் நரேந்திர மோடி நடத்தினார். அந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

மத்திய அமைச்சர்கள் அடிக்கடி விடுமுறையில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். பொது விடுமுறை நாள்களிலும், அலுவலகம் வந்து பணியாற்ற வேண்டும். நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் நாள்களில், அமைச்சர்கள் வெளியூர் பயணம் செல்வதைத் தவிர்க்க வேண்டும். நாடாளுமன்றம் நடைபெறும் நாள்களில், பெரும்பாலும், சபையில் இருக்க வேண்டும். கேள்வி நேரத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முறையாகப் பதில் அளிக்க வேண்டும். நாடாளுமன்றம் நிலுவையில் உள்ள பிரேரணைகளையும், புதிய சட்டங்களையும் நிறைவேற்றுவதில், அமைச்சர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில்,



சில புதிய பிரேரணைகள் அறிமுகம் செய்யப்பட உள்ளதால், சபை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற உதவ வேண்டும். அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள், இணை அமைச்சர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். அவர்களுக்கு முறையாகப் பணிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். கோப்புக்கள் யாவும் அவர்கள் மூலமாக, அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சருக்கு வந்தால்தான், இணை அமைச்சர்கள் அரசின் கொள்கைகளைத் தெளிவாக அறிந்து கொள்வர். ஆகவே அவர்களை அரவணைத்து செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (ரி).

## பா.ஜ. க அரசு வெற்றி

சென்னை,நவ. 14

மகாராஷ்டிர சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பா.ஜ.க அரசு வெற்றி பெற்றது. இருப்பினும், குரல் வாக் கெடுப்பு மூலம் கிடைத்த இந்த வெற்றி மிகுந்த சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது.

அதேநேரத்தில், சட்டப்பேரவைத் தலைவராக பா.ஜ.க மூத்த தலைவர் ஹரிபாவ் பக்தே போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். (ரி)

## இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல்

இந்திய எல்லைப் பகுதியான ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களில் அமைந்துள்ள இந்திய பாதுகாப்பு நிலைகளை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. சம்பா மாவட்டம் ரம்கார் செக்டாரில் அமைந்துள்ள எல்லைப் பாதுகாப்புப் படை நிலைகளை நோக்கி பாகிஸ்தான் ரேஞ்சர் தாக்குதல் நடத்தியுள்ளது. (ரி)



பிரதமர் நரேந்திர மோடி ஒரு செயல்வீரர் என அமெரிக்க அதிபர் ஒபாமா பாராட்டியுள்ளார். மியன்மார் தலைநகர் நேபிடாவில் ஆசியான் மற்றும் தெற்கு ஆசிய மாநாட்டில் பங்கேற்ற உலக நாடுகளின் தலைவர்களுக்கு அந்நாட்டு அதிபர் பீம்சிங் விருது அளித்தார். அதில் மியன்மாரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்க அதிபர் ஒபாமா சந்தித்துப் பாராட்டிப் பேசினார். (ரி)

# இந்தியாவில் நிமோனியா நோய்

## ஆண்டுக்கு 3 லட்சம் குழந்தைகள் சாவு

சென்னை நவ 14

இந்தியாவில் நிமோனியா நோயினால் ஆண்டொன்றில் 3 லட்சத்து 70 ஆயிரம் குழந்தைகள் உயிரிழப்பதாக மருத்துவர்கள் அதிர்ச்சிச் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இந்திய குழந்தைகள் நல மருத்துவரொருவர் தெரிவிக்கையில்,

நிமோனியா என்பது நுரையீரலை நுண் கிருமிகள் தாக்குவதனால் ஏற்படும் நோய் ஆகும். பொதுவாக இந்த நோய் அதிகமாக 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைத் தான் அதிகமாகத் தாக்குகிறது. இந்த நோயால் தாக்கப்பட்ட குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல், நெஞ்சு வலி, சரியாகச் சாப்பிட முடியாமல் அவதிப்படுதல் போன்ற அறிகுறிகள் இருக்கும். மேலும், குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, காய்ச்சல் போன்றவை



3 நாள்களில் குணமடைய வேண்டும். அப்படி இல்லாமல் 3 நாள் களுக்கு மேலும் காய்ச்சல் அதிகமாக இருந்தால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவரை அணுக வேண்டும். சாதாரண நுண் கிருமிகளின் தொற்றினால் ஏற்படும் இந்த நோயினால் ஆண்டொன்றுக்கு இந்தியாவில் 4 கோடி குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். இதில் 3 லட்சத்து 70 ஆயிரம் குழந்தைகள் இறக்கின்றனர் - என்றார். (ரி)

# சூரிய ஒளி மின் கொள்கை

## ரூபா.20 ஆயிரம் கோடியில் புதிய திட்டங்கள்



டில்லி, நவ. 14

கர்நாடகத்தில் அதிகரித்துவரும் மின் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக சூரிய ஒளி மின் கொள்கையை அம்மாநில அரசு வகுத்துள்ளது. சூரிய ஒளி மின்சார உற்பத்தி, காற்றாலை மின் உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றல் உள்ளிட்ட மாற்றுவழி மின் உற்பத்தித் திட்டங்களை கர்நாடக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. கர்நாடகத்தில் நிலவும் மின்பற்றாக்குறையை தீர்க்க, அம்மாநில அரசு பல்வேறு மாற்று மின் உற்பத்தித் திட்டங்களை அறிமுகப் படுத்தி வருகிறது. மரபுசாரா மின் உற்பத்திக்காகக் கடந்த 10 மாதங்களில் 20 ஆயிரம் கோடி செலவில் புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

கர்நாடகத்தில் கடந்த 10 மாதங்களில் 20 ஆயிரம் கோடியில் சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தியின் மின் உற்பத்தி திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அடுத்த 15 மாதங்களில் 1,000 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். நாட்டில் முதல் முறையாக கர்நாடகத்தில் சூரிய ஒளி மின் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக கிராமப்புறங்களில் 50 ஏக்கர் அளவுள்ள விவசாய நிலத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்யப்படும். இதன் மூலம் 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். விவசாயம், தோட்டக்கலை, சிறுபான்மையினர் நலம், சமூக நலத் துறையின் கீழ் இயங்கும் அனைத்துக் கட்டடங்களுக்கும் சூரிய ஒளி மின் இணைப்பு வழங்கப்படும். கர்நாடக அரசின் சூரிய ஒளி மின உற்பத்தி திட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக மத்திய அரசு 3,200 கோடி மானியம் ஒதுக்கியுள்ளது. (ரி)

## காவிரியின் குறுக்கே புதிதாக இரண்டு அணைகள்

காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக 2 அணைகளைக் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாக கர்நாடக நீர்பாசனத்துறை அமைச் சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்தார்.

புதிய அணைகள் கட்டும் அரசின் முடிவை எந்தக் காரணத்துக்காகவும் மாநில அரசு கைவிடாது. இது தொடர்பாகத் தமிழக அரசு வழக்குத் தொடுத்தாலும், அதைச் சந்திக்க கர்நாடகம் தயாராக உள்ளது. கர்நாடகத்தின் எல்லையில் இந்த அணைகள் கட்டப்படும். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழகத்துக்கு காவிரி நீர் திறந்துவிடப்படுகிறது. புதிய அணைகள் கட்டுவது குறித்து கர்நாடக அரசுத் தரப்பில் வாதிடும் வழக்குரைஞருடன் ஆலோசனை செய்துள்ளோம். அணைகள் கட்டும் முயற்சிக்கு அவரும் ஆதரவு தெரிவித்துள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி)

# இந்தியப் பொருளாதாரத்தை காப்பதில் பெண்களின் பங்கு

டில்லி, நவ. 14

இந்தியப் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதில் பெண்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர்' என்று பத்திரிகையாளரும், பொருளாதார நிபுணருமான எஸ். குருமூர்த்தி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



சுதேசி ஜாக்ரன் மஞ்ச்' அமைப்பின் நிறுவுநரும், மறைந்த தேசியவாதியுமான தத்தோ பந்த் தேங்கடிஜியின் பிறந்ததின நிகழ்ச்சி டில்லியில் நடைபெற்றபோது அவர் கருத்துத் தெரிவிக்கையில்;


பல நூற்றாண்டுகளாக நாம் கடைப்பிடித்துவரும் வாழ்க்கை முறை, குடும்ப முறை, சேமிக்கும் வழக்கம் ஆகியவையே பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாகும்.

எமது குடும்ப முறை எம்மை ஒருங்கிணைக்கிறது. ஒழுக்க நெறிகள், குடும்ப அமைப்பு முறை, மதிப்பீட்டு முறைகள் ஆகியவை எம்மை ஒரு கட்டமைப்பில் வைத்திருக்கிறது. இதுபோன்ற உறவுமுறை வகை, அணுகுமுறைவகை இந்தியாவுக்கு வெளியே இல்லை. அமெரிக்காவில் இதுபோன்ற குடும்ப உறவு முறைகள் இல்லை. அங்கே உள்ள குடும்பங்களில் 51 சதவீத குடும்பங்கள் அரசின் ஆதரவையும், மற்ற வகை உதவிகளையும் சார்ந்து உள்ளன. ஆனால், நாம் சுதந்திரமானவர்களாக உள்ளோம்.

இந்தியப் பெண்கள்தான் நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றியவர்கள். கூர்மைத் தன்மை, குறைவான நுகர்வுத் தன்மை, இடர்பாடு இல்லாத சேமிப்பு மற்றும் முதலீடுகள், குடும்ப ஒற்றுமை, மக்கள் ஒற்றுமை என வியப்புறக் கூடிய ஒரு சமூகத்தை நாம் கொண்டுள்ளோம்.

பெண்களைப் போற்றும் இந்த மதிப்புமிக்க சமூகத்தையும் பொருளாதாரத்தையும் நாம் கட்டிக்காக்க வேண்டும் என்றார். (ரி)

# வால் நட்சத்திரத்தில் இறங்கியது 'பிலே'





பேர்ளின், நவ.14

சூரியக் குடும்ப அமைப்பின் ஊடாக சுமார் 10 ஆண்டுகள் பயணித்த பின்னர், ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின், விண்கலம் ரொசெட்டாவின் ஆய்வுக் கலமான 'பிலே கலம்' வால் நட்சத்திரத்தின் மீது இறங்கி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் இதுபோன்று வால் நட்சத்திரத்தின் மீது இறங்கிய முதலாவது விண்கலம் இதுதான்.

வால் நட்சத்திரங்களின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஆய்வு செய்ய ஐரோப்பிய யூனியன் கடந்த 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி 'ரோசெட்டா' விண்கலத்தை விண்ணில் ஏவியது. அதில் பிலே என்ற 100 கிலோ எடையுள்ள லேண்டர் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த இரண்டு கிலோ மீற்றர் அகலமுள்ள வால் நட்சத்திரத்தின் பனிக்கட்டிகள் படர்ந்த மேற்பரப்பின்மீது இந்த பிலே ஆய்வுக்கலம் பத்திரமாக நேற்று இறங்கியது என்ற சமிக்ஞையை விண் வெளி விஞ்ஞானிகள் அந்தக்கலத்திடமிருந்து பெற்றனர்.

இந்த விண்கலமும், வால் நட்சத்திரமும், மணிக்கு 66,000 கிலோ மீற்றர் வேகத்தில் விண்வெளியினூடாகப் பறந்து கொண்டிருக்கையில் இந்த நுட்பமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (வ)

## சீன ஜனாதிபதியின் மனைவிக்கு சால்வை அணிவித்தார் புடின்

### அதனால் எழுந்தது சர்ச்சை



பீஜிங், நவ.14

குளிரில் நடுங்கிய சீன ஜனாதிபதியின் மனைவி பெங் லியூயானுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது சால்வையை அணிவித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சீனத் தலைநகர் பீஜிங்கில் ஆசியா பசுபிக் மாநாடு நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, புடின் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியுடன் சீன ஜனாதிபதி பேசிக்கொண்டிருந்த சமயத்தில் அருகில் உட்கார்ந்திருந்த புடின் எழுந்து பெங்லியூயானுக்குச் சால்வை போர்த்தியமை விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

புடின் சால்வை போர்த்தியதை, புன்னகையுடன் தலையைக் குனிந்தபடி ஏற்றுக் கொண்டதோடு, சால்வையை வாங்கிய வேகத்தில் தனது இருக்கைக்குப் பின்புறம் எடுத்து வைத்து விட்டார் பெங். தற்போது புடின் சால்வை போட்டதை சீனாவில் பலர் விமர்சித்துள்ளனர். ஒருவருக்கு ஒருவர் சம்பந்தமில்லாத ஆணும், பெண்ணும் இப்படி பொது இடத்தில் தனிப்பட்ட முறையில் பொருள்களைப் பரிமாறிக் கொள்வது தவறு என்றும் பலர் விமர்சித்துள்ளனர். மேலும், சீன சமூக வலைத்தளங்களில் புடின் சால்வை போட்டதுதான் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. (வ)

## ஈரானில் 2 அணு உலைகள் அமைக்க ரஷ்யா ஒப்பந்தம்



மொஸ்கோ, நவ.14

ஈரான் நாட்டில் புதிதாக 2 அணு உலைகளை அமைப்பதற்கு ரஷ்யா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இரு நாட்டு உறவுகள் அதிகரிக்கும் என்று ரஷ்ய அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஈரானில் செயற்படும் அணு உலைகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. அதன்மூலம் உலக நாடுகளை பயமுறுத்த ஈரான் திட்டமிட்டிருக்கிறது என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அதைத் தொடர்ந்து, ஈரான் நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

ஈரானில் இயங்கும் அணு உலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் இந்த அணு உலைகள் மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தப் படுகின்றன. இதனை மேற்கத்திய நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஈரான் கோரிக்கை வைத்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையில், ஈரானில் புதிதாக 2 அணு உலைகள் அமைப்பது குறித்து ரஷ்யா பேச்சுமேற்கொண்டது. பேச்சின் முடிவில், ஈரானில் புஷ்ஷேகர் என்ற 2 புதிய அணு உலைகளை அமைக்க நேற்று முன்தினம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா சார்பாக ரோசாடாம் மாநில அணு உலை தலைவர் செர்ஜி கிரியன்கோவும் ஈரானின் அணுஉலை தலைவர் அலி அக்பர் சலேகியும் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாட்டின் உறவுகளும் வளர்ச்சி அடையும்.

ஈரானின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். இந்த அணு உலைகள் மின் உற்பத்தி மற்றும் மருந்துப் பொருள்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும். இதன் மூலம் ஈரானின் செல்வாக்கு மேலும் உயரும் என்று ஈரான் அணு உலைகளின் தலைவர் அலி அக்பர் சலேகி கூறினார்.

ஈரானில் அமைக்கப்படும் 8 அணு உலைகளும் சர்வதேச அணுசக்தி கழகத்தின் மேற்பார்வையில் அமைக்கப்படும். புஷ்ஷேகர் நகரில் ஏற்கனவே இயங்கும் அணுஉலைக்கு ரஷ்யா யுரேனியம் தாதுக்களை கடந்த ஆண்டு தொடக்கம் விநியோகம் செய்து வருகிறது. மேலும், தற்போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அங்கு புதிதாக நிர்மாணிக்கும் 8 அணு உலைகளுக்கும் ரஷ்யா யுரேனியம் விநியோகத்தை மேற்கொள்ளும் என்று ரஷ்யாவின் ரோசர்டாம் அணுசக்தி நிறுவனம் நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டது. (வ)



## பாடகியாக வலம் வரும் கன்னியாஸ்திரி

ரோம்,நவ.14

இத்தாலி நாட்டைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவர் பொப் பாடகியாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் கிறிஸ்டினா ஸ்குச்சியா (வயது 26), கன்னியாஸ்திரியான அவர் தனது முதல் பாடல் அல்பத்தை வெளியிட்டுள்ளார். அதில் பிரபல பாடகி மடோனாவின் லைக் எ வர் ஜின் என்ற புகழ்பெற்ற பாடலும் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச அளவில் புரட்சியை ஏற்படுத்தி வரும் கிறிஸ்டினாவின் பாடல்களை இலட்சக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர். விரைவில் சிஸ்டர் கிறிஸ்டினா என்ற பெயரில் அடுத்த அல் பத்தை வெளியிட உள்ள அவருக்கு, பழமைவாதிகள் சிலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

எனினும் பாடகியாக இருப்பது கன்னியாஸ்திரி வாழ்க்கையை எந்த விதத்திலும் பாதிக்காது என்று உறுதியுடன் கூறிவருகிறார் – கிறிஸ்டினா. (வ)

## 11500 வருட பழமையான சிசுக்களின் சடல எச்சங்கள்


### அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

அமெரிக்க அலாஸ்கா மாநிலத்தில் 11500 ஆண் டுகள் பழமையான 3 சிசுக்களின் சடல எச்சங்களை உள்ளடக்கிய பண்டைய கல்லறை ஒன்று அகழ்வாராய்ச்சி யாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிறிங்கியா என்று அழைக்கப்பட்ட சைபீரியாவிலிருந்து நிலப்பாலம் ஒன்றைக் கடந்து வந்த அமெரிக்காவின் ஆரம்ப கால குடிகளான பலியோ இந்திய வம்சத்தை சேர்ந்தவர்களால் இந்த சிசுக்கள் புதைக்கப்பட்டுள்ள தாக நம்பப்படுகிறது. மேற்படி சிசுக்களுக்கு அண்மையில் பண்டைய கால கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மத்திய அலாஸ்காவிலுள்ள தன்னா லோலான்ட் காட்டில் கண்டு பிடிக்கப்பட்ட இந்தச் சிசுக்களில் ஒன்று பிறந்த சிறிது நேரத்திலும் ஏனைய இரண்டு சிசுக்கள் பிறப்பதற்கு சிறிது முன்பும் இறந்த இரட்டையர்கள் என்று நம்பப்படுகிறது. (வ)



# கரை ஒதுங்கிய திமிங்கிலம் வெடித்து விடும் அபாயம்



பிரான்ஸில் கரை ஒதுங்கியுள்ள திமிங்கிலம் வெடிக்கும் நிலையில் இருப்பதால் அதிகாரிகள் செய்வதறியாமல் குழம்பிப் போயுள்ளனர்.

பிரான்ஸின் தெற்குக் கடற்கரையில் நவம்பர் மாதத் தொடக்கத்தில் இராட்சதத் திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

ஏற்கனவே அழுகிய நிலையில் இருந்த திமிங்கிலம், மேலும் அழுகி வருவதால் அதனை உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்றும் இல்லையெனில் வெடித்து விடும் அபாயம் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெப்பத்தின் தாக்கத்தால் அதன் உடலில் உட்புற வாயுக்கள் உருவாகும். இதனால் அதன் உடல் பெருத்துக் கொண்டே போகும். பின்னர் திடீரென்று எப்போது வேண்டுமானாலும் வெடிப்பு நிகழலாம் என்று தெரிகிறது.

எனவே இந்தத் திமிங்கிலத்தை அப்புறப்படுத்த நடைமுறைச் சாத்தியமான முறையிலும், ஆபத்துக் குறைவான அணுகு முறையோடும் செயற்படுத்தும் முறைகள் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

மேலும் அந்தத் திமிங்கிலத்தின் உடல் இருக்கும் இடத்துக்கு அருகே பொதுமக்கள் செல்லக்கூடாது என்பதற்காக அந்தப் பகுதியை மூடிவைத்துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 4 | | 3 | 5 | | 8 | |
| 3 | | | 6 | 7 | | | 5 | |
| 5 | | | | | 8 | | 3 | 9 |
| | | | | | | | 1 | |
| 4 | 5 | 2 | 1 | | 6 | 3 | 9 | 7 |
| | 8 | | | | | | | |
| 1 | 2 | | 8 | | | | | 5 |
| | 7 | | | 1 | 3 | | | 4 |
| | 4 | | 5 | 9 | | 1 | 2 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 4 | 5 | 8 | 3 | 1 | 7 | 2 |
| 2 | 5 | 3 | 4 | 1 | 7 | 9 | 6 | 8 |
| 8 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 | 3 | 5 |
| 3 | 1 | 5 | 7 | 9 | 2 | 8 | 4 | 6 |
| 7 | 4 | 8 | 6 | 3 | 5 | 2 | 9 | 1 |
| 9 | 6 | 2 | 8 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 1 | 8 | 6 | 9 | 7 | 4 | 5 | 2 | 3 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 6 | 7 | 8 | 4 |
| 4 | 2 | 7 | 3 | 5 | 8 | 6 | 1 | 9 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பருவங்கள்

இந்த உலகமே இருப்பு, இல்லாமை என்ற இரண்டினதும் கலப்பாகும். தத்துவங்களிலிருந்து நமது அன்றாட வாழ்க்கைக்கு வந்தால், வாழ்க்கையே இந்த இருப்பு, இல்லாமை என்ற இரண்டு முரண்பாடுகள் கலந்ததாக இருப்பதைக் காண்கிறோம். அறிவிலும் இந்த முரண்பாடு உண்டு. மனிதன் எதை அறிய விரும்பினாலும், அவனால் அதை அறிந்துகொள்ள முடியும் என்று தோன்றுகிறது. ஆனால் சில அடிகள் எடுத்து வைப்பதற்கு முன்பே, தனக்கு முன்னால், கடக்க முடியாதபடி ஒரு பெரிய சுவர் இருப்பதை அவன் காண்கிறான். அவன் ஒரு வட்டத்திற்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கிறான். அந்த வட்டத்திலிருந்து அவனால் வெளியேற முடிவதில்லை. மிகவும் நெருக்கமான, பிரியமான பிரச்சினைகளுக்குத் தீரவு காண அவன் இரவும் பகலும் உழைக்க வேண்டியிருக்கிறது. அறிவின் எல்லையைத் தாண்டி அவனால் போக முடியாததால், அந்தப் பிரச்சினைகளுக்கு அவனால் தீர்வு காண முடிவதில்லை. அறிவைக் கடந்து செல்ல வேண்டும் என்ற ஆசை மட்டும் மனிதனின் மனத்தில் உறுதியாகப் பதிந்திருக்கிறது. அதேவேளையில் அறிவைக் கட்டுப் படுத்துவதாலும் அடக்குவதாலும்தான்

நமக்கு நன்மை கிடைக்கும் என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். சுயநலமாயிரு என்றே மூச்சுக்கு மூச்சு நமது இதயம் துடிக்கிறது. அதேவேளையில் நம்மை மீறிய சக்தி ஒன்று, சுயநலமின்மை மட்டுமே நன்மை தரும் என்பதை எமக்குக் கூறிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் இன்பநோக்குடன்தான் பிறக்கிறது. பொற்கனவுகளையே காண்கிறது. வாலிபத்தில் அவன் மேலும் இன்பநோக்குக் கொண்டவனாகிறான். மரணம் என்ற ஒன்று உள்ளது என்பதை ஒரு வாலிபன் நம்புவதே இல்லை. தோல்வி, தாழ்வு போன்ற சொற்களுக்கு இளைஞனின் அகராதியில் இடமில்லை. வயதாகும்போதே அவனது வாழ்வே நரகமாகி விடுகிறது. கனவுகள் எல்லாம் காற்றில் கரைந்து விடுகின்றன. அவன்துன்பநோக்குக்கொண்டவனாகி விடுகிறான். இதனை கருத்தில் கொண்டு முடிவெடுக்கப் பழகுங்கள்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சுபகாரியங்கள் கொண்டாட்டங்கள் இருக்கும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி கிடைக்கப்பெறுவீர்கள். பெரியோர் மூலம் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது.



**இடபம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல். வாங்கலில் கவனம் தேவை. புதிய நண்பர்கள் கிடைப் ÃVii˙. உத்தியோகத்தில் கூடுதல் பணிச் சுமையை ஏற்க வேண்டி இருக்கும்.



**மிதுனம்**: தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும்.



**கடகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளைச் செய்து மேல் அதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவார்கள்.



**சிங்கம்**: குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். குடும்பத்தில் நிலவிய மன வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். பிள்ளைகள் நீங்கள் கூறியதைக் கேட்டு அதன்படி நடப்பது ஆறுதலை தரும்.



**கன்னி**: வீண் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தைக் குறைத்து விவேகத்துடன் செயற்படுவது நன்மை தரும். பெரியோர்களிடம் பகைமை பாராட்டுவதைத் தவிர்ப்பது நல்லது.



**துலாம்**: எந்த ஒரு வேலையையும் அலைந்து செய்து முடிக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனத்துடன் பணியாற்றுவது நல்லது. புதிய வேலை வாய்ப்புக்குச் செய்யும் முயற்சிகளுக்கு பயன் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் சுமுகமான சூழ் நிலவும். விருந்தினர் வருகை இருக்கும். பெண்கள் எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒரு முறைக்குப் பலமுறை யோசிப்பது நல்லது. மற்றவர்களிடம் பகைமை பாராட்டுவதைத் தவிர்ப்பது நல்லது.



**தனுசு**: எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். மற்றவர்களுடன் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நன்மைதரும்.



**மகரம்**: தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். புதிய பொறுப்புகளை ஏற்க வேண்டி இருக்கும்.



**கும்பம்**: குடும்பத்தில் திடீர் பிரச்சினை தலை தூக்கும். மிகவும் கவனமாகக் கையாண்டால் அது தீரும். பிள்ளைகள் உங்கள் ஆலோசனையைக் கேட்காமல் தன்னிச்சையாக முடிவு எடுக்கலாம். உறவினர்கள். நண்பர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது.



**மீனம்**: காரியத்தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

## நாளை

**ஐப்பசி-29 சனிக்கிழமை | 15.11.2014**

திதி: அட்டமி மு.ப.10.45 வரை
நட்சத்திரம்: மகம்
பி.இ.04.27 வரை

சுபநேரம்:03.07-04.37 வரை
இராகுகாலம்:09.07-10.37 வரை

# சிங்கர் கிண்ண ஆட்டம்; ஸ்கந்தா அணி வெற்றி

வலி.வடக்கு, நவ.14

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்காக 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல் இனிங்ஸ் ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 40.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

தனுராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீசிய டான்சன் 14 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 4 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், டனுராஜ் 8.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 3 ஓட்ட மற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 10 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், திக்சிகன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் 2 உம் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 40.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

கஜதீபன் 27, பிருந்தன் 22, தனுசன் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்துவீசிய சிந்துஜன் 13.5 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்மற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும், தனுராஜ், பிருந்தா முறையே 16,26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 27 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

பிருந்தா 15 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 9 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீசிய டான்சன் 11 பந்துப்பரிமாற்றங்ககள் பந்து வீசி 8 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 9 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கஜதீபன் 2 ஓவர்கள் பந்து வீசி ஓட்டமற்ற 2 பந்துப்பரிமாற்றங்களுடன் ஒரு இலக்கையும், டிலக்சன் 14 ஓட்டங்க ளுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

## தீவக லீக் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 14

தீவக உதைபந்தாட்ட லீக்கின் ஆளுநர் கிண்ண ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மண்டை தீவு சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ஊர்காவற்துறை ஞானஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மெரிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

புங்குடுதீவு காந்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பிகை நகர் சிறிமகேஸ்வரி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23)

## வலிகாமம் லீக் ஆட்டங்கள் நாளை

யாழ்ப்பாணம், நவ. 14

மைலோ வெற்றிக் கிண்ண வலிகாமம் லீக் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. போட்டியில் யங்ஹென்றிஸ், றெட்றேஞ்சஸ் சென்.பீற்றஸ் ப்பிளான் விக்னேஸ்வரா குறிஞ்சிகுமரன் கல்வாய் விநாயக நாமகள் சென். யூட்ஸ் அண்ணா வட்டு ஜேம்ஸ் மகாத்மா ஆகிய 12 விளையாட்டுக்கழக அணிகள் மோதவுள்ளன. (உ-23)

## யாழ். அணியுடன் [அ]ரச திணைக்கள அணி மோதல்



யாழ்ப்பாணம், நவ.14

58 ஆவது சிரேஸ்ட் தேசிய மட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொழும்பு டொறிங்ரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் இன்று வெள்ளிக்கிழமை காலை [இடம்]பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட ஹொக்கி அணியை எதிர்த்து இலங்கை அரச திணைக்கள அணி ஹொக்கி மோதவுள்ளது. (த-23)



*காங்கேசன்துறையைச் சேர்ந்த வழக்கறிஞர் சேனாதிபதி குமரகுரு ஞாபகார்த்தமாக அவரது மகனான லண்டனில் வசிக்கும் குமரகுரு ரவீந்திரன் யாழ். சிறுவர் உதைபந்தாட்டத் திறன் விருத்திக்காக வழங்கிய உதைபந்தாட்ட உபகரணங்களை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ யாழ். உதைபந்தாட்ட இணைப்பாளரிடம் கையளிக்கிறார்.* (த-23)

## திருகோ…மலையில் இன்று உதைபந்தாட்டம் ஆரம்பம்

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆரம்ப நாள் நிகழ்வுக்கு திருகோணமலை கல்விப் பணிப்பாளர் விஜேந்திரன், கௌரவ விருந்தினராக திருகோணமலை நகரசபை தவிசாளர் கே.செல்வராஜா, கிழக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## பருத்தித்துறை லீக்: ஆதிசக்தி வெற்றி



யாழ்ப்பாணம், நவ. 14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்தாடிய ஆதிசக்தி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (உ-23)

# வடமராட்சி லீக் ஆட்டங்களில் பொம்மர்ஸ்,டயமன்ஸ் வெற்றி


யாழ்ப்பாணம், நவ.14

வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கில் நடத்தும் 'ஆளுநர் கிண்ணப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் நேற்று வியாழக்கிழமை டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதல் அரையிறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸை எதிர்த்து நவஜீவன்ஸ் மோதியது. ஆட்டம் முழுவதும் இரு அணியினராலுமே கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. பொம்மர்ஸ் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸை எதிர்த்து கலைமகள் மோதியது. இதில் டயமன்ஸ் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)

## நான் கிரிக்கெட்டின் கடவுளல்ல




சச்சின் டெண்டுல்கரை அவரது ரசிகர்கள் கிரிக்கெட்டின் கடவுளாக பாவித்தாலும், அவர் நான் கிரிக்கெட்டின் கடவுள் அல்ல; சாதாரணமானவன் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 'பிளேயிங் இட் மை வே' என்ற தனது சுயசரிதையை வெளியிட்ட சச்சின், பி.பி.ஸி. வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

நான் கிரிக்கெட்டின் கடவுள் அல்ல. களத்தில் பல தவறுகள் செய்துள்ளேன். கிரிக்கெட் விளையாடுவதை நேசித்தேன். நான் சாதாரணமானவன். அப்படியே இருக்க விரும்புகிறேன். ரசிகர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பைப் பார்க்கும் போது நான் அதிர்ஷ்டக்காரன் என நினைத்துக் கொள் வேன். கடவுள் என் மீது அதிக கருணை வைத்துள்ளார். எனக்குக் கிடைத்த எதையுமே நான் கேட்டுப் பெறவில்லை. ரசிகர்கள் என் மீது வைத்திருக்கும் அன்புக்கு நன்றி.

ஓய்வுக்குப் பின்னர் வேறு விதமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். 24 ஆண்டுகளாகக் கிரிக்கெட்டைத் தவிர வேறு எதன் மீதும் கவனம் செலுத்தவில்லை. என் வாழ்க்கையின் முதல் அத்தியாயம் முழுவதும் கிரிக்கெட் விளையாட வேண்டும், கனவை நனவாக்க வேண்டும், உலகக் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதிலேயே கழிந்து விட்டது. ஓய்வுக்குப் பிந்திய வாழ்வு, என் நலம் விரும்பிகளுக்கு எதாவது திருப்பி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

மும்பையில் 2008 இல் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின் சென்னையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில், அடித்த சதம் அர்த்தமுள்ளதாக இருந்தது. உலகில் உள்ள அனைத்து இந்தியர்களுக்கும் அது மோசமான தருணம், அந்த சமயத்தில் சிறிது நேரம் வேறு பக்கம் மக்களின் நினைவுகளை திசை திருப்பியது மகிழ்ச்சி என சச்சின் தெரிவித்தார். (த)

# 153 ஓட்டங்களால் இந்தியா இமாலய வெற்றி




சர்வதேச ஒரு நாள் போட்டியின் நடப்புச் சம்பியனாக இந்திய அணியும் சர்வதேச 20/20 போட்டியின் நடப்புச் சம்பியனாக இலங்கை அணியும் இருக்கின்ற நிலையில் சம்பியன்களுக்கிடையிலான தொடர் என வர்ணிக்கப்படும் இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி படுதோல்வி கண்டது. இந்தப் போட்டி நேற்றைய தினம் கொல்கத்தாவில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியஅணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய றகானே மற்றும் றொகிட் சர்மா இந்திய அணிக்கு சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். அணியின் ஓட்டம் 40 ஆக இருந்த வேளையில் இந்திய அணியின் முதல் இலக்காக றகானே 28(24) ஓட்டங்களுடன் மத்தியூசின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராயுடு 8(19) ஓட்டங்களுடன் வெளியேற அதிரடியாக துடுப்பெடுத்தாடிய றோகித் சர்மாவுடன் கோஹ்லி ஜோடி சேர்ந்து இணைப்பாட்டமாக 202 ஓட்டங்களைப் பகிர அணி 261 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கோஹ்லி 66(64) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிப் பந்துவரை களத்தில் நின்ற றோகித் சர்மா அதிரடியாக ஆடி 33 நான்குகளுடனும் 9 ஆறுகளுடனும் 264 (173) ஓட்டங்களைக் குவிக்க இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 404 ஓட்டங்களைப் பெற்றது

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக மத்தியூஸ் 2 விக்கெட்டுக்களையும் எரங்க, குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

405 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இமாலய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களான குசல் பெரேரா-0, டில்சான்-34, சந்திமால்-9, மஹேல-2 எனச் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறச் சற்று நிதானமாக ஆடிய மத்தியூஸ் 75 ஓட்டங்களையும், திரிமன்னே 59 ஓட்டங்களையும் பெற்று இலங்கை அணியை கௌரவ நிலைக்கு அழைத்துச் சென்றனர். அணியின் பின்வரிசை வீரர்களும் நிலைக்கத் தவற இலங்கை அணி 43.1 ஓவர்களில் சகல இலக்குளையும் இழந்து 251 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக குல்கர்னி 4இலக்குகளையும், யாதவ், பின்னி, பட்டேல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் 4:0 என இந்தியா முன்னிலை பெற்றுள்ளது. (து-ரி)

போட்டியின் ஆட்ட நாயகனாக சர்வதேச ஒரு நாள் போட்டி களில் அதி கூடிய ஓட்டம் (264) பெற்றவர், ஒரு நாள் போட்டி யில் இரு முறை இரட்டைச்சதம் விளாசியவர் என்ற சாதனையை நிலைநாட்டிய றோகித் சர்மா தெரிவுசெய் யப்பட்டார்.

## சமநிலை நோக்கி நகரும் போட்டி

பங்களாதேஷ்- சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் சிறப்பான ஆரம்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்போது சிட்டகொங்கில் இடம்பெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரமீம் (109), கயிஸ்(130) இருவரும் சதமடித்து அணியைப் பலப்படுத்த பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ரசா 3 விக்கெட்டுக்களையும் பன்ஜன்கரா, டபிள்யு. மசகட்சா, எச். மசகட்சா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே அணிக்கு அதன் தொடக்க வீரரான சறி எந்தவிதமான ஓட்டத்தையும் பெறாது வெளியேறித் தடுமாற்றம் கொடுத்தா லும் தொடர்ந்து வந்த மசகட்சா றசாவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்த 2ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் சிம்பாப்வே ஒரு இலக்கு இழப்புக்கு 113 ஓட்டங்களை பெற்றுள்ளது. (து-ரி)

## ஜெயவர்த்தனவின் விருப்பம்

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ஜெயவர்த்தன மீண்டும் தொடக்க வீரராக ஆட விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகள் அடுத்த ஆண்டு தொடங்கவுள்ள நிலையில், இலங்கை அணியின் மூத்த வீரர் 37 வயதான ஜெய வர்த்தன உலகக் கிண்ணப் போட்டிகளோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் தொடக்க ஆட்டக்காரராக விளையாட விருப்பம் தெரிவித்துள்ள ஜெயவர்த்தனே இது பற்றி கூறுகையில்; என்னைத் தொடக்க ஆட்டக்காரராக விளையாட அனுமதிக்கும்படி தேர் வாளர்களிடம் மண்டியிட்டுக் கேட்க முடியாது. ஆனால் தொடக்க ஆட்டக்காரர் வரிசை எனக்கு பொருத்தமானது. உலகக் கிண்ணப் போட்டிகளில் அந்த வரிசையில் ஆட வேண்டும் என்று நினைக் கிறேன். அதே நேரத்தில், நடு வரிசையில் போதிய அனுபவம் வாய்ந்த துடுப்பாட்டக்காரர்கள் இல்லாததால், அந்த வரிசையில் நான் ஆட வேண்டும் என்று தேர்வாளர்கள் விரும்புகிறார்கள். உலகக் கிண்ணத்துக்கு இன்னும் 3 மாதங்கள் இருப்பதால் என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம் என்று கூறியுள்ளார். (த)




## 12 நிமிடங்களில் விற்றுத் தீர்ந்த இந்தியா— பாக். போட்டி ரிக்கெட்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே அடிலெய்டில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிக்கான ரிக்கெட்டுக்கள் 12 நிமிடங்களில் விற்றுத் தீர்ந்தன.

50 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய கொள்திறன் கொண்ட அடிலெய்ட் மைதானத்தில் 2015 பெப்ரவரி 15 ஆம் திகதி இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதற்கான ரிக்கெட் விற்பனை தொடங்கிய சில நிமிடங்களில் முடிவடைந்தன.

மேலும், இந்தப் போட்டியை காண இந்தியாவிலிருந்து 20 ஆயிரம் ரசிகர்கள் ஆஸ்திரேலியா வருகை தருவதாக அடிலெய்ட் மைதான நிர்வாகி தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 2ஆவது நாள் இந்தப் போட்டி நடைபெறுவதால், பெப்ரவரி 15 ஆம் திகதியன்று இந்தியா-பாகிஸ்தான் போட்டி, ரசிகர்களுடன் மைதானமே களைகட்டவுள்ளதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அடிலெய்ட் மைதானத்தில் மட்டும் மொத்தம் 4 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறுகின்றன. உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவை - பாகிஸ்தான் வீழ்த்தியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## பாகிஸ்தான் அபார வெற்றி.



பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து வலுவான ஆதிக்கம் செலுத்திய பாகிஸ்தான்அணி அபார வெற்றியை பதிவு செய்தது.

அபுதாபியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான்அணி முதலில் துடுப்பெடுத்தாடி 3 விக்கெட் இழப்புக்கு 566 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களை மாத்திரமே பெற்று பலோ ஒன் ஆனது. ஆனால் புதிய வியூ கம் வகுத்த பாகிஸ்தான் அணி பலோ ஒன் கொடுக்காமல் தொடர்ந்து தாமே துடுப்பெடுத்தாடு வதாக அறிவித்து 304 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்தது.

இதன்படி பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அந்த அணிக்கு வலுவான தொடக்கத்தை அமைத்துக் கொடுக்க அந்த அணி 2 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்களை பெற்றபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. 480 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட தமது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணி வீரர்கள் ஆரம்பம் முதலே தடுமாறி அடுத்தடுத்து வெளியேற 4ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் அந்த அணி 8 இலக்கு இழப்புக்கு 174 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டத்தின் இறுதி நாளான நேற்றையதினம் 16 ஓவர்கள் மட்டுமே வீசப்பட ஏனைய இரு இலக்குகளும் வீழ்த்தப்பட நியூசிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 248 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நியூசிலாந்து சார்பாக அதிக பட்சமாக 10ஆம் இலக்க வீரர் சொட்கி 63 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக றகற் அலி தெரிவானார். (து-ரி)


## விரக்தியில் சங்ககார

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தனக்கு ஓய்வளிக்கப்பட்டிருப்பது வருத்தமளிப்பதாக இருக்கிறது என்று இலங்கை வீரர் சங்ககார தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான முதல் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடிய இலங்கை அணியின் இலக்குக் காப்பாளர் சங்ககார கடைசி இரு ஒருநாள் போட்டிக்கு ஓய்வு என்ற பெயரில் கழற்றிவிடப்பட்டார்.



இதனால் அதிருப்தி அடைந்துள்ள சங்ககார இதுபற்றி கூறுகையில்; ஒரு தொடரின் பாதியில் இருந்து, குறிப்பாக அணி தோற்றுக் கொண்டிருக்கும்போது யாரும் விலக விரும்பமாட்டார்கள்.

அணி தோல்விகளைச் சந்திக்கும்போது, ஒன்றாக இணைந்து விளையாடி வெற்றியைப் பெறவேண்டும் என்று தான் எப்போதும் விரும்புகிறோம். அணி வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும்போது விலகுவது கண்டிப்பாக பிரச்சினையாக இருக்காது என்று தெரிவித்துள்ளார். (த)



## இலங்கையின் புதிய களத் தடுப்பு பயிற்சியாளராக ட்ரவர் பென்னி

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக ட்ரவர் பென்னி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளராக இருந்து நீக்கப்பட்ட ட்ரவர் பென்னி, இந்திய கிரிக்கெட் சபையின் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் கடமையாற்ற மறுத்திருந்தார். இதனையடுத்து, குறித்த பதவிக்கு இலங்கை கிரிக்கெட் அவரை நியமித்துள்ளது.

இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் எதிர்வரும் மார்ச் மாதம் வரை பதவியில் இருக்கும் படியாக அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுளளது. உலகக்கிண்ணத்தை கருத்திற்கொண்டு இந்த நியமனம் ட்ரவர் பென்னிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனோதத்துவ நிபுணர் ஜெரமி சினப் 17நாள்களுக்கு இலங்கை அணியுடன் இணைந்து செயற்படவுள்ளார் என இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது. இறுதிப் போட்டிகளில் இலங்கை அணி தோல்விகளைச் சந்தித்து வருகின்றமைக்கு தீர்வு காணும் நோக்குடன் இவர் இலங்கை அணியுடன் இணைந்து பணியாற்றவுள்ளார். (த)

## சாதனை படைத்த ரோஹித்

கொல்கத்தாவில் நடந்து வரும் இலங்கைக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியில் ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடி இரட்டை சதம் அடித்து அசத்தினார். ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையையும் ப்டைத்துள்ளார். இவர் இதற்கு முன்பு சச்சின், ஷேவாக் வரிசையில் இரட்டை சதம் அடித்து இருந்தார்.

தற்போது சர்வதேச அரங்கில் 2 முறை இரட்டை சதம் அடித்தவர் என்ற சாதனையை செய்துள்ளார். அது மட்டுமல்லாது இந்த போட்டியில் 264 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் 219 ஓட்டங்கள் எடுத்திருந்த ஷேவாக்கின் உலக சாதனையை தகர்த்துள்ளார்.



## வேலணை பிரதேச சபை
## 2015ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத்தரிப் பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரை குத்தகைக்கு வழங்கு வதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 14.11.2014 தொடக்கம் 01.12.2014 பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 03.12.2014 மதியம் 12.00 வரை
கேள்விதிறக்கும் திகதி : 03.12.2014 பிற்பகல் 12.30 மணி

| இல. | சந்தைபெயர் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VATதவிர்த்து) | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VATதவிர்த்து) |
|---|---|---|---|---|
| 01 | துறையூர் மீன்சந்தை - வேலணை | 1,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 02 | செட்டிபுலம் மீன்சந்தை - வேலணை | 500.00 | 5,000.00 | 39,748.50 |
| 03 | சரவணை மீன் சந்தை - வேலணை | 500.00 | 2,000.00 | 6,600.00 |
| 04 | அம்பிகைநகர் மீன் சந்தை - வேலணை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| 05 | அல்லைப்பிட்டி மீன்சந்தை - அல்லைப்பிட்டி | 500.00 | 5,000.00 | 58,300.00 |
| 06 | மடத்துவெளிமீன் சந்தை - புங்குடுதீவு | 1,000.00 | 10,000.00 | 229,658.00 |
| 07 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை - நயினாதீவு | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 08 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை - நயினாதீவு | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 09 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை - புங்குடுதீவு | 1,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 10 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத் தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 187,000.00 |
| 11 | சாட்டிசிற்றுண்டிச்சாலை - வேலணை | 500.00 | 2,000.00 | 6,000.00 |
| 12 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | 500.00 | 5000.00 | 13,311.00 |
| 13 | வேலணை துறையூர் கடை இல 04 கருவாட்டுக்கடை | 500.00 | 5000.00 | 34,760.00 |
| 14 | வேலணை துறையூர் கடை இல 05 கருவாட்டுக்கடை | 500.00 | 5000.00 | 34,760.00 |
| 15 | வேலணை துறையூர் கடை இல 06 கோழிக்கடை | 500.00 | 5000.00 | 33,715.00 |
| 16 | வேலணை துறையூர் கடை இல 07 ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 33,770.00 |
| 17 | வேலணை துறையூர் கடை இல 02 | 500.00 | 5000.00 | 31,600.00 |

| இல. | விவரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VATதவிர்த்து) | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VATதவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 01 | வேலணை துறையூர் கடை இல 03 சிற்றுண்டிச் சாலை | 1,500.00 | 1000.00 | 10,000.00 | 180,000.00 |

- கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர் வேலணை பிரதேச சபை, வேலணை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.
- ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டா.
- கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்கு 12% (VAT) பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்.
- கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விசபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2014.12.15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
- புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
- சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
- சந்தைக் கடைகளுக்கான மின்சாரக் கட்டணம் குத்தகைதாரர்களினால் மாதாந்தம் மின்சார சபையில் செலுத்தப்படல் வேண்டும்.
- வாகனத்தரிப்பிடங்களில் வேலணை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச் சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்து சபை. அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத்தரிப்பிட கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
- கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை, வேலணை.
2014.11.13

சி. சிவராசா - தவிசாளர்
வேலணை பிரதேச சபை.

(C/17709)(10.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குட்டிப்பிள்ளை
அரசேஸ்வரன்
(ஆசிரியர்)

திதி : 14.11.2014
வெள்ளிக்கிழமை

தோற்றம் 13.03.1960 மறைவு 10.11.2013

ஆண்டு ஒன்று அகன்றோடிப் போனாலும் ஆறுமோ நெஞ்சம்!
இன்று உமது நாள்... எம் நெஞ்சை வாட்டுகின்றதே!
நம் நினைவு நிறைவேறாது போயிற்றே... அப்பா...!
உங்களோடு நம் நிம்மதியும் முற்றாய் இழந்து நிற்கதியாய்...! நிற்போம்!
என்று கனவிலேனும் நினைத்துப் பார்க்கவில்லையே...!

மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
மனைவி, மகன், மகள்.

## மரண அறிவித்தல்



### முத்துச்சாமி சண்முக நாதன்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் உடையார் லேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி சண்முகநாதன் நேற்று (13.11.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துச்சாமி-செங்கோடம்மா தம்பதியரின் மகனும், சதாசிவம்-யோகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் அன்புக்கணவரும், ஸ்ரீசுபாங்கன், ஸ்ரீசர்மிளா, ஸ்ரீகதன், ஸ்ரீ சிந்துஜன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

இல. 05, உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்,

(54087) (10.6)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகம்மா இரத்தினசபாபதி



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா இரத்தினசபாபதி 10.11. 2014 மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பையா-அபிராமிப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லத்துரை, இராசம்மா, செல்லம்மா, இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப் பிள்ளை திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், கணேசதாஸ், கணேஸ்வரி (லண்டன்), தபோதரன் (கனடா), இரத்தினேஸ்வரி (சுமதி,கனடா), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம் (லண்டன்), தயாளினி, தர்மலஷ்சுமி (கனடா), கந்தவேள் (கனடா), யாழு (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சுசர்மன் (லண்டன்), விகர்ணான் (லண்டன்), காலஞ்சென்ற துருபதன், Dr. றங்கா நிரஞ்சன் (லண்டன்), கஸ்தூரி-காண்டீபன் (L.L.B,லண்டன்), கௌதமி (லண் டன்), தாரணி (கனடா), துவாரகன் (கனடா), ஹரிகரன் (கனடா) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், சிவஸ்ரா (லண்டன்), தருண் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருவேரகம்,
இணுவில் மேற்கு, இணுவில்.
078 914 9154, 021 320 7379

தகவல்:
குடும்பத்தினர்.

(54086)(10.6)

### ஆறுப்பிள்ளை செல்வரத்தினம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை செல்வரத்தினம் நேற்றுமுன்தினம் (12.11.2014) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியராணியின் ஆருயிர் கணவரும், சசிதரன்(சுவிஸ்), சசிச்செல்வி(சுவிஸ்), சசிகுமார் (ஆசிரியர், யா/ஊர்.கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தி(சுவிஸ்), ஜெயபவான் (சுவிஸ்), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சதுசினி (சுவிஸ்), சதுஸ் (சுவிஸ்), ஜெனிசா (சுவிஸ்), ஜானுசன் (சுவிஸ்), ஜெருசா (சுவிஸ்), மதுஷாஜினி, கம்சாயினி ஆகியோரின் பேரனும், மகேஸ்வரி, பரமேஸ்வரி (சுழிபுரம்), சிவனேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

# பூநகரிப் பிரதேசசபை
# கேள்வி அறிவித்தல் 2015

**பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2015**

கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள பொதுச்சந்தைகள் இறைச்சிக் கடைகள் என்பன 2015ஆம் ஆண்டிற்காக 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையான காலப் குதிக்கு குத் தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 14.11.2014 தொடக்கம் 25.11.2014 வரை
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 26.11.2014 மதியம் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 26.11.2014 பி.ப. 12.30 மணி

**கேள்வி நிபந்தனைகள்:**

01 கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர் பிரதேசசபை பூநகரி எனும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு 25.11.2014ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
02 கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
03 கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தையும் செலுத்த வேண்டும்.
04 உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.
05 கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06 கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கின்ற அதிகாரம் தலைவருக்கு உண்டு.
07 இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.
08 எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல் களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்பட வேண்டும்.
09 இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்ட திட்டங்களுக்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.
10 தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பங்கை 08.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள வேண்டும்.

**2015ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தை இறைச்சிக்கடைகளிற்கான கேள்வி கோரல்**

| தொ.இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக்கொள்ளப் படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | **பொதுச்சந்தைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5,000.00 | 35,000.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 3 | பள்ளிக்குடா | 500.00 | 5,000.00 | 20,000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5,000.00 | 60,000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 3 | 19ஆம் கட்டை | 500.00 | 3,000.00 | 25,000.00 |
| **இரணைதீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 8,500.00 | 150,000.00 |
| 2 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| | **மாட்டிறைச்சிக்கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8,000.00 | 80,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 8,500.00 | 130,000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8,000.00 | 50,000.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3,000.00 | 28,000.00 |
| 3 | 19ஆம் கட்டை | 1000.00 | 5,000.00 | 40,000.00 |
| 4 | வலைப்பாடு | 1000.00 | 5,000.00 | 60,000.00 |
| **இரணைதீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 10,500.00 | 500,000.00 |
| 2 | நாச்சிக்குடா கடற்கரை | 1000.00 | 10,500.00 | 200,000.00 |
| | **கோழியிறைச்சிக்கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 3,000.00 | 21,000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 10,000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| **இரணைதீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 3,000.00 | 40,000.00 |
| | **ஆட்டிறைச்சிக்கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| | **கருவாட்டுக் கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| **இரணைதீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2. | நாச்சிக்குடா சந்தி இல - 02 | 500.00 | 3,000.00 | 15,000.00 |

**பொ.சிறீஸ்கந்தராசா,**
**தலைவர்,**
**பிரதேசசபை,**
**பூநகரி.**

(C/17707)(10.6)

## இலவச மானிய உர விநியோகம்

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் 160,000 ஏக்கர் பெரும்போகச் செய்கைக்கான இலவச மானிய உர விநியோகம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சிவலிங்கம் தெரிவித்தார். மாவட்டத்தின் 16 கமநல கேந்திர நிலைய பிரிவுகளிலும் உர விநியோகம் இடம்பெறுகின்றது. இதுவரை 60 சதவீதமான விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்பட்டதாவும் அவர் கூறினார். இந்த நிலையில், கொக்கட்டிச்சோலை விவசாய கண்டத்திலுள்ள பெரும்போக விவசாயிகளுக்கு புதன்கிழமை உரம் விநியோகிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் 12,770 ஏக்கரில் பெரும்போகச் செய்கை பண்ணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)




## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்.மேல்நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (10.02.2015 -09.02.2016) கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01.யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
02.மல்லாகம் நீதிமன்ற வளாகம்
03.சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
04.ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
05.பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
06.யாழ்ப்பாணம் சிறுவர் நீதிவான் நீதிமன்றம்

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விவரங்களையும், யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப் பாக ரூ100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ25000/= ஐயும் செலுத்தி **28.11.2014 வெள்ளிக்கிழமை ந.ப. 12.00 மணிவரை** பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் **28.11.2014 பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்வ துடன், பிற்பகல் 2.30 மணிக்கு விலை மனுக்கள் தேள்விதாரர் முன்னி லையில் திறக்கப்படும்.**

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**அ.பிரேமசங்கர்,**
**மேல்நீதிமன்ற நீதிபதி/தவிசாளர்,**
**மேல்நீதிமன்ற பெறுகைக்குழு,**
**மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

(சி/17701)
(4.6.3)

## சபரிமலை மாலை அணியும் நிகழ்வு

ஐயப்ப பக்த அடியார்களே! சபரிமலை யாத்திரை செல்லும் திவ்ய அருட் காலமான கார்த்திகை மாதந்தனில் தாவடி தெற்கு, மானிப்பாயில் 32 வருடமாக யாத்திரை செல்லும் 'இந்துதாசன் யாத்திரைக் குழு' வின் ஊடாக சடகோபராமானுய ஐயப்ப பக்த சபையில் மாலை அணியும் சுவாமிமார்கள் கீழ்க் கண்டவாறு தொடர்பினை முன் கூட்டியே செய்து கொள்ளவும்.

(தரிசனம் ஜோதி தரிசனம் யாத்திரை)

இடம்: வட பத்திரகாளி கோயில் (தாவடி தெற்கு, தாவடி)
காலம்: திங்கட்கிழமை (17.11.2014)
நேரம் : காலை 8.00 மணி

தொடர்பு: குருசுவாமி
(இந்துதாசன் யாத்திரை குழு)
தாவடி தெற்கு, மானிப்பாய்.
(திருவாபரண குழு)

தொ.பே.: 077 260 1472
077 628 2671

(54076)(5.6.3)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

**வட்டாரம் - 13, அரசடி வீதி, ஆதன இலக்கம்: 55/5**

நல்லூர் பிரதேச சபைக்குட்டபட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 13, அரசடி வீதி, ஆதன இல: 55/5 என்ற இலக்கங்களைக் கொண்ட ஆதனம் கே.இராஜரத்தினம் உ.கோ எம்.திருச்செல்வமும் பெண் பஞ்சவர்ணமும் எனும் பெயரில் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதன்த்தை கோண்டாவில் வடக்கு, தெய்வேந்திரம் அரியரத்தினமும், தெய்வேந்திரம் குணமும், கணபதி செல்லத்துரை கைம் பெண் பூமலரும், தெய்வேந்திரம் சோதிலிங்கமும், தெய்வேந்திரம் செல்வத்துரையும், தெய்வேந்திரம் மகள் இராசமலரும் ஆகிய எல்லோரும் சேர்ந்து

நொத்தாரிசு சி.சிதம்பரநாதன் முகதாவில் 13014ஆம் இலக்க 30.06.1994 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் முருகன் திருச்செல்வம் பெண் பஞ்சவர்ணத்திற்கு வழங்கியுள்ளார். தற்போது இவ்வாதனத்தை முருகன் திருச்செல்வம் பெண் பஞ்சவர்ணம் என்பவர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே, இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது முருகன் திருச்செல்வம் பெண் பஞ்சவர்ணம் எனும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ப.வசந்தகுமார்,
தலைவர், நல்லூர் பிரதேச சபை.

(சி17702)
(12.3.6)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

**வட்டாரம் - 01, பத்தர்ஒழுங்கை, ஆதன இலக்கம்: 07**

நல்லூர் பிரதேச சபைக்குட்டபட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 01, பத்தர் ஒழுங்கை, ஆதன் இல: 07 என்ற இலக்கங்களைக் கொண்ட ஆதனம் வி.பொன்னம்பலம் சுப்பிரமணியமும் மறுபேரும் எனும் பெயரில் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு, பொன்னம்பலவாணர் சுப்பிரமணியம், பொன்னம்பலவாணர் முத்துலிங்கம், பொன்னம்பலவாணர் மகள் சரஸ்வதி, பொன்னம்பலவாணர் இரத்தினவேல் மகன் ஜோர்ஜ் ஆகியோர் வெளிப்படுத்தி எழுதியுள்ளனர். தற்போது இவ்வாதனத்தை நொத்தாரிசு ஞா.சிவஞானம் முகதாவில் 9200 ஆம் இலக்க 04.03.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் அருந்தவம் பெண் நிருபாவுக்கு வழங்கியுள்ளார்.

தற்போது இவ்வாதனத்தை அருந்தவம் பெண் நிருபா தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே, இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது அருந்தவம் பெண் நிருபா எனும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ப.வசந்தகுமார்,
தலைவர், நல்லூர் பிரதேச சபை.

(சி17703)
(12.3.6)

## தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் அறிவித்தலொன்றாகும்

எதிர்காலத்தில் நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படும் நாடளாவிய தேர்தல்களின் போது தனது ஆளடையாளத்தை உறுதிசெய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாட்டிற்காக தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் வாரம்.

**2014 நவம்பர் மாதம் 10-16ஆம் திகதி வரை**

★ ஏற்கனவே உங்கள் வசம் தேசிய அடையாள அட்டையொன்று இல்லையெனில்
★ உங்கள் வசமுள்ள தேசிய அடையாள அட்டையின் குறிப்புகள் தெளிவில்லையெனில்
★ உங்கள் தேசிய அடையாள அட்டையிலுள்ள புகைப்படம் இனங்காண முடியாதவாறு நிறம்மாறியிருப்பின்

தயவு செய்து உடனடியாகப் புதிய தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்ளவும்.

அதற்காக உங்கள் பிரிவின் கிராம அலுவலரை அல்லது தோட்ட அத்தியட்சகரைச் சந்திக் கவும். அவர் தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உங்க ளுக்கு உதவி செய்வார்.

* உங்கள் வசம் பிறப்புச் சான்றிதழ் அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் இருப்பின் அதனையும் மற் றும் பெயர் மாற்றம் செய்திருப்பின் அதற்குரிய ஆவணங்களையும், தேசிய அடையாள அட்டை யொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான புகைப்படத்துடன் கிராம அலுவலரிடம்/ தோட்ட அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
* பிறப்புச் சான்றிதழ் அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் இல்லையெனில் இராசி பலன், பாட சாலை விடுகைப் பத்திரம், திருமணச் சான்றிதழ், பிள்ளையொருவரின் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களூடாகவும் மற்றும் வேறு விடயங்களை விசாரிப்பதனூடாகவும் உங்கள் வயதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வழிமுறையொன்றை அறிமுகம் செய்தவற்கு உத்தேசிக்கப்பட் டுள்ளதால் அது தொடர்பாகக் கிராம அலுவலரிடம்/ தோட்ட அத்தியட்சகரிடம் விசாரிப்பது பொருத்தமாகும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை நீங்கள் வதிகின்ற மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அல்லது அண்மையில் அமையப் பெற்றுள்ள பிரதேச செயலகத்தில் அல்லது கிராம அலுவலர் அலுவலகத்தில் / தோட்ட அத்தியட்சகரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

ஆர்.எம்.எஸ். சரத்குமார.
ஆட்பதிவு ஆணையாளர் நாயகம்.

தேர்தலொன்றின் போது வாக்களிக்க முடிவது உரிய அங்கீகரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்கின்ற வாக்காளர்களுக்கு மாத்திரமேயாகும்.

தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்காக வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை ஆகிய அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு மேலதிகமாக தேர்தல் திணைக்களத் தினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பித்தும் வாக் களிக்க முடியுமென்பதால், உங்கள் வசம் மேற்படி செல்லுபடியான அடையாள அட்டையொன்று இல்லையெனில் தேர்தலொன்றை நடத்துவதற்கான அறிவித்தலொன்று வெளியிடப்பட்டால் கிராம அலுவலரூடாக / தோட்ட அத்தியட்சகரூடாகத் தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக் கப்படும் தற்காலிக அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுப்பது கட்டாயமென்பதைக்கருத்தில் கொள்ளவும்.

**தேர்தல்கள் செயலகம்,**
சரண மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி -(011) 2868441 / (011) 2868447,
தொலைநகல் - (011) 2868445 (011) 2868368
மின்னஞ்சல் - comelesl@sltnet.lk
இணையத்தளம் -www.slelections.gov.lk

**ஆட்கள் பதிவுத் திணைக்களம்**
C 45,கேப்பெட்டி போல வீதி, கொழும்பு -05
தொலைபேசி -(011) 2555616
தொலைநகல் - (011) 2593634 / (011) 2506458
மின்னஞ்சல் - info@drp.gov.lk
இணையத்தளம் -www.drp.gov.lk

## லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
### சுன்னாகம்

**2015 ஆம் ஆண்டுக்கான சித்த ஆயுள்வேத டிப்ளோமா (DAM) கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

அடிப்படைத் தகைமைகள்:

➢ வயதெல்லை 31.12.2014 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
➢ கல்வித் தகைமை க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
➢ தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவையில் விஞ்ஞானம், தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந் திருத்தல் வேண்டும்.
➢ சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையோ அல்லது லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி சுன்னாகத்தில் நேரடியாக விண்ணப்பப்படிவத்தினையோ பெற்று பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**2015 சித்த ஆயுள்வேத டிப்ளோமா கற்கைநெறி**" என்று குறிப்பிட்டு "**பதிவாளர்**", **லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, மின்சாரநிலைய வீதி, சுன்னாகம்**" என்ற முகவரிக்கு 2014.11.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

வட இலங்கை சுதேச மருத்துவசபை,
யாழ்ப்பாணம்.

(சி/17705)
(4.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தையா சுந்தரராஜா



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், லண்டனை வதிவிடமாகவும், தற்போது 16B 1/1 அலோய் அவனியு, கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரராஜா 12.11.2014 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி கந்தையா-மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வரும், ஜெயமதியின் அன்புக் கணவரும், மதுசூதனன், சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரேஸ்வரி, காலஞ்சென்ற நடராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.11.2014) சனிக்கிழமை (8Am - 5 Pm) ஜெயரட்ண மலர்ச்சாலை (பொரளை)இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, மதியம் 12.00 மணியளவில் கனத்தை (பொறளை) இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பெறாமகன் - நடராஜா - செந்தில்குமார்** - 071 411 8462

(சி17484)
(12.3.6)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்ட செயலரால் கீழ்குறிப்பிடப்படும் பொருள்களுக்கு/உபகரணங்களுக்கு தகைமையுடை யோரிடம் இருந்து சீல் இடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

01.தையல் மெசின்கள்
02.நீர் இறைக்கும் இயந்திரங்கள்- எரிபொருள்
03.நீர் இறைக்கும் இயந்திரங்கள்-மின்சாரம்
04.தெளிகருவிகள்-16 லீற்றர்
05.மீன்பிடி வலைகள்
06.துவிச்சக்கரவண்டிகள்-ஆண்கள்,
07.துவிச்சக்கரவண்டிகள்-பெண்

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும். இப் பொருள்களை/உபகரணங்களை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் வியாபார பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 14.11.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து 28.11.2014 ஆம் திகதி பிற்பகல் 1.00 வரை காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 1000/= கட்டணமாக செலுத்தி விலைக்கேள்வி ஆவணங் களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு** 01.12.2014 **ஆம் திகதியன்று பி.ப.** 2:00 **மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் திட்ட மிடல் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள் விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப் பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 01.12.2014 **ஆம் திகதி பி.ப.** 3.00 **மணிக்கு** திறக்கப்படும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/17708)
(4.6.3)

# 10 ஆண்டுகள் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட முடியாது

அண்ண திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் ஜெயலலிதா 10 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தமிழக சட்டப்பேரவைத் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, இந்த விடயம் தமிழக அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, முதல்வர் பதவியுடன் ஸ்ரீரங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவரது தகுதியிழப்பு குறித்து முறையான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 8ஆம் திகதி தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதாவிற்கு தண்டனை வழங்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி முதல், தமிழக சட்ட சபை உறுப்பினர் பதவியில் இருந்து தகுதியிழப்பு செய்யப்படுவதோடு தண்டனைக் காலம் முடிந்த பிறகு அடுத்து வரும் 6 வருடங்களுக்கும் அவர் தகுதியிழப்பு செய்யப்படுகிறார். என அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில், மேன்முறையீட்டு மனுக்களில் விடுதலை அல்லது தண்டனையில் மாற்றங்கள் ஏற்படாத விடத்து தற்போதைய உத்தர வின்படி ஜெயலலிதா 10 வருடங்களுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## தொடர்ச்சிகள்

### முன்னாள்

கள் மீண்டும் கைது செய்யப்படுகின்றனர். அவர்களது பாதுகாப்பு எந்தளவுக்கு உள்ளது? தேர்தல் இடம்பெறவுள்ளதால் புலிகள் மீண்டும் வந்திருக்கிறார்கள் என்று கூறுவதற்கான ஓர் உத்தியாக இருக்குமோ என்று நாம் சந்தேகம் கொள்கின்றோம் - என்றார். (த-5)

### போராளியின்

முடியும்-என்றார்.

**வடக்கில் பதற்றம் ஏற்படுத்த முயற்சி**

இந்த நாட்டில் நீதி இன்று தோற்றுப் போய்விட்டது. நீதிக்குப் புறம்பான செயல்கள்தான் தற்போதைய ஆட்சியில் நடைபெறுகின்றன. இந்த நிலையில், ஆயுததாரிகளும் தமது அராஜகங்களை சுதந்திரமாக அரங்கேற்றி வருகின்றனர். அவர்கள் வடக்கில் பதற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

எனவே, சர்வதேச சமூகம்தான் இந்த அராஜகங்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமிழருக்கு நீதியை - விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (த-5)

### மஹிந்தவின்

உடனடியாகவும், நிபந்தனையின்றியும் விடுவிக்கவே இந்திய அரசு எப்போதும் வலியுறுத்தி வருகின்றது. அதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். நீதிமன்றத்தில் மீனவர்கள் சார்பில் தொடரப்பட்டுள்ள மேன்முறையீடு விலக்கிக் கொள்ளப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளனர். (த-5)

### குடாநாட்டில்

வைத்துள்ளனர்.

தற்போது உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களினால் 60 ஹெக்டேயர் நிலத்தைப் பயன்படுத்தி உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆயினும் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய நில விஸ்தீரணமானது 100 ஹெக்டேயர்களுக்கு மேல் உள்ளது. விஸ்தீரண நிலத்தைப் பயன்படுத்தி உருளைக்கிழங்கு உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டும். உற்பத்திச் செலவு மற்றும் ஆரம்பச் செலவுகளை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உருளைக்கிழங்கு அறுவடை காலத்தைச் சரியான முறையில் தெரிவித்தால் அதனை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கு அரசின் ஊடாக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்-என்றார். (த-106)

### இந்த

பெற்றுள்ள நிலையில் 13 பேர் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். இவர்களுக்கான உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் நோயாளிகள் தொடர்ந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளாமல் நிறுத்தியதன் காரணமாக நோயின் தாக்கம் அதிகரித்து இறப்பைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

இந்த வருடம் இதுவரை 222 பேர் காசநோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இவர்களில் 93 பேருக்குச் சளிப்படலத்தில் கிருமித் தொற்றுள்ளமையும், 55 பேருக்கு சளிப் படலத்தில் கிருமி இல்லாது வேறு உறுப்புக்களில் கிருமித் தொற்று உள்ளமையும், 74 பேருக்கு நுரையீரல் அல்லாத ஏனைய உறுப்புக்களில் கிருமித்தொற்று உள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

### 2 கோயில்களில்

நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

2008 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. சீரணி நாகபூஷணி அம்மன் கோயிலில் வலுவுள்ள 163 ரவைகளை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் குறித்த கோயிலின் பூசகரான கு. சோமஸ்கந்த சர்மா, த.பரமஜோதி ஆகியோரும், பிள்ளையார் கோயிலில் ஆயுதங்கள் வைத்திருந்த் குற்றச்சாட்டில் ரேணுகா ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் கந்தர் செல்லையா ஆகியோர் வெடிபொருள்களைச் சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டில் அவசரகால ஒழுங்கு விதிகள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்து தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. அதன்படி குறித்த நான்கு பேரும் குற்றமற்றவர்கள் என இனங்கண்டு அவர்களை விடுதலை செய்தது மேல்நீதிமன்று. (த-4)

### குடும்பப்

மாதம் 24 ஆம் திகதி கலியுகமூர்த்து சுகந்தினி (வயது-34) என்ற குடும்பப் பெண் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். பருத்தித்துறையில் உள்ள தனது நண்பி வீட்டுக்கு வரும்போதே அடகு வைக்கும் நோக்குடன் கொண்டுவந்த 27 பவுண் நகைகளுடன் அவர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில் அவர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்திருந்தது.

ஆனால் குறித்த பெண் கொண்டு வந்ததாகக் கூறப்படும் 27 பவுண் நகைகள் மீட்கப்படவில்லை. இதனை அடுத்து நகைக்காகப் பெண் கொலை செய்யப்பட்டாரா என்ற கோணத்திலும் நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தியிருந்தனர். எனினும் தேவை குறித்து அந்த விசாரணைகள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தொலைபேசி அழைப்புப் பதிவுகளை அடிப்படையாக வைத்து முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே மேலும் இருவர் தேடப்பட்டு வருவதாகப் பொலிஸார் கூறினர்

இதேவேளை, குறித்த சந்தேக நபரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் இரத்தக் கறை படிந்த ஆடை பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் அதில் படிந்திருக்கும் இரத்தக் கறை பெண்ணுடையதா? என்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் குறித்த பெண்ணின் வீட்டில் கட்டட வேலையில் ஈடுபட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-109)

### வடக்கின்

நொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு 75 ஆயிரத்து 465 பேராக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 621 பேரால் அதிகரித்து 79 ஆயிரத்து 86 பேராக மாறியுள்ளது. வன்னித் தேர்தல் மாவட்டத்தில் உள்ளடங்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு 58 ஆயிரத்து 294 பேராக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 546 பேரால் அதிகரித்து 63 ஆயிரத்து 840 பேராக உள்ளது. மன்னார் மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு 78 ஆயிரத்து 493 பேராக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 734 பேரால் அதிகரித்து 79 ஆயிரத்து 232 ஆக உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 250 ஆக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 439 இனால் அதிகரித்து ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 689 பேராக உள்ளது.

வடக்கில் மொத்தமாக 7 லட்சத்து 81 ஆயிரத்து 979 பேர் 2014 ஆம் ஆண்டில் வாக்காளராகப் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வாக்காளர் பெயர்ப் பட்டியலே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்படவுள்ளது. (ற-5)

### 6 நியதி

பட்டுள்ளன. எனினும் வடக்கு மாகாணசபையின் ஒவ்வொரு அமைச்சுக்களாலும் பல்வேறு நியதிச் சட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

கல்வி அமைச்சால், முன்பள்ளிகளுக்கான நியதிச் சட்டம் உட்பட 4 நியதிச் சட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுகாதார அமைச்சாலும் ஒரு நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக போக்குவரத்து நியதிச் சட்டமும் பேரவைச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பேரவைச் செயலகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நியதிச் சட்டங்கள் யாவும், மாகாண நியதிச் சட்டக் குழுவின் முன் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்தக் குழுவே, இதில் எந்த நியதிச் சட்டம் நிதியுடன் தொடர்புடையது, எதனை ஆளுநரின் அனுமதிக்காக அனுப்புவது என்பது தொடர்பில் முடிவெடுக்கும்.

இன்னும் ஒரு மாதகாலத்தினுள் 6 நியதிச் சட்டங்களும் மாகாணசபையில் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### கால்நடைகளை

றுகளிலும் குடிதண்ணீர் வற்றிய நிலைமையே காணப்பட்டது. தீவகப் பிரதேசத்தில் அதன் பாதிப்பு அதிகமாக இருந்தது.

வறட்சி காரணமாக 22 மாடுகள் யாழ்.மாவட்டத்தில் உயிரிழந்துள்ளன என்று மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. தீவகப் பிரதேசத்திலேயே அதிகமான மாடுகள் உயிரிழந்துள்ளன. எனவே எதிர்காலத்தில் இவ்வாறான இடரின் போது மாடுகளின் உயிரிழப்பைத் தடுப்பதற்கு, இடர்முகாமைத்துவ அமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வறட்சி விசேட நிதியாக யாழ்.மாவட்டத்துக்கு 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிதியில் குடாநாடு முழுவதும் கால்நடைகளுக்கான குடிதண்ணீர் தொட்டி அமைப்பதற்கு 3.5 மில்லியன் ரூபா வரையில் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார்30 குடிதண்ணீர் தொட்டிகள் வரையில் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### காசநோயாளருக்கு

சைகள் வழங்கப்படுகின் றன. ஆயினும் நோயாளியின் அனுமதி இல்லாமல் அவர்களுக்கு எயிட்ஸ் நோய்க்கான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள முடியாது. நோயாளிகளே தங்களது ஆரோக்கியத்தை பேண முடியும். வைத்தியசாலைகளில் தங்களுக்கான மருத்துவப்பரிசோதனைகளை அவர் மேற்கொள்ள வேண்டும்"- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### குடும்பஸ்தர்

என்பவர் தலை, அடிவயிறு என்பன வற்றில் வெட்டுக் குத்துக்காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அந்தக் கொலை தொடர்பில் கொலை செய்யப்பட்டவரின் மனைவியான சுமதி மற்றும் 3 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறையைச் சேர்ந்த கமலநாதன் கெங்காதரன் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு சட்டமா அதிபரால் 2011 ஆம் ஆண்டு டிசம்பரில் யாழ்.மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வந்திருந்த நிலையில், வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த கொலை திட்டமிட்டதும், பாரதூரமானதுமான செயல் என்றும் மன்று கருதுகிறது. திருமண உறவில் ஈடுபட்டிருந்த இருவருக்கிடையே பிறிதொரு நபரின் தலையீடு ஏற்பட்டு - அதன் காரணமாகக் கோர எண்ணம் ஏற்பட்டு - அதன் விளைவாக ஒரு உயிர் சாதுரியமாகப் பறிக்கப்பட்டதான தன்மை காணப்படுகிறது - என்று கண்டு அதனடிப்படையில் குறித்த இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு - அவர்களுக்கு நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இத்தகைய செயற்பாடுகள் அனுமதிக்கப்படவோ, பொறுத்துக்கொள்ளவோ முடியாது என்று நீதிமன்று வெளிப்படுத்துகிறது. அவ்வாறான நடவடிக்கைகள் கடுமையாகக் கவனிக்கப்பட்டு தவறுகள் சீர்திருத்தப்படவேண்டும் என்று மன்று கருதுகிறது. மூன்று சட்ட ஏற்பாடுகளுக்களின் பிரகாரம் தண்டனை விதிப்பதற்குப் பின்நிற்க முடியாது எனக் குறிப்பிடப்படுகிறது - என்று நீதிமன்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

வழக்குத் தொடுநர் தரப்பு நம்பகமானதும் அழுத்தமானதுமான சாட்சியங்கள் மூலம் சாட்சிகளை நிரூபித்துள்ளது என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

### கட்டைக்காட்டில்

கரிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுவீகரிப்பதற்கு முன்னேற்பாடாக, அந்தக் காணிகளை அளவிடும் நடவடிக்கைகளுக்காக நேற்றுக் காலை 9.30 மணியளவில் அந்தப் பகுதிக்கு நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சென்றிருந்தனர். காணிகள் அளவிடப்படும் பகுதியில் பெருமளவிலான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தத் தகவலை அறிந்த பொதுமக்கள் அங்கு திரண்டனர். அவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினரான கஜதீபன், சுகிர்தன் ஆகியோரும் வல்வெட்டித்துறை நகர சபையின் உப தலைவர் சதீஸும் இணைந்திருந்தனர்.

திரண்டிருந்த மக்கள் காணிகளை அளவிடும் நடவடிக்கைக்குத் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அதனால் நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தமது பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. முற்பகல் 11 மணி வரை காத்திருந்த அவர்கள் பின்னர் தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினர்.

அதன்பின்னர் வடமராட்சி கிழக்கு முள்ளியான் பகுதியில் இராணுவத்தினருக்காகச் சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை அளவிடுவதற்கு நிலஅளவைத் திணைக்களத்தினர் சென்றனர். அங்கும் பொதுமக்கள் திரண்டு கடும் எதிர்ப்பை வெளிக்காட்டினர். அதையடுத்து அங்கும் தமது காணி அளக்கும் திட்டத்தைக் கைவிட்டுத் திரும்பினர் நில அளவைத் திணைக்களத்தினர்.

இந்தச்சம்பவங்கள் நடைபெறும் சமயம், குறித்த பகுதியில் சிவிலுடையில் இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் நடமாடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் அங்கு திரண்டிருந்த பொதுமக்களை படம் பிடித்தனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். அத்துடன் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களில் அச்சமூட்டும் விதத்தில் நடமாடித் திரிந்தனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற-109)

### கொலைக்கு

ழந்தார். இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின், காவல்துறையில் பணியாற்றியவராவார். பின்னர் அரசால் புனர்வாழ்வு வழங்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் இனந்தெரியா தோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நேற்று மோப்பநாய் சகிதம் குறித்த பகுதியில் தேடுதல் நடத்தியபோதே குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் மோப்பநாய் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்தக் கொலை தொடர்பில் இதுவரை 4 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் பதில் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குணசேகரவை 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்ட போது,

"இந்தச் சம்பவம் தனிப்பட்ட முரண்பாடு காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகம் காணப்படுகின்றது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு 4 பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன."- என்று தெரிவித்தார்.

கொல்லப்பட்டவரின் மனைவி ஓர் ஆசிரியையாவார். "கடந்த வாரம் வீட்டுக்கு வந்த இருவர் கடும் தொனியில் எனது கணவரின் பெயரைக் கூறி அழைத்து விட்டுச் சென்றனர். கணவர் வீடு திரும்பியவுடன் அவரிடம் அது குறித்துக் கூறினேன். ஆனாலும் அவர் எனக்கு எதிரிகள் என்று யாரும் இல்லை என்று கூறி அதைச் சாதாரணமாக விட்டுவிட்டார்"- என்று கூறினார்.

அதேவேளை, நேற்றுக் காலை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் சம்பவ இடத்துக்கு வந்து உயிரிழந்தவரின் உடலைப் பார்த்ததுடன், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். அதையடுத்து உடல் அனுராதபுரம் மருத்துமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

குறித்த பகுதியில் தற்போது பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும், இராணுத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5.4.56)

## குற்றங்களும் கைதுகளும்

தென்மராட்சி

### போதையில் மனைவி, பிள்ளைகளை தாக்கிய வரணி வாசி கைது

மது போதையில் தமது மனைவி, மற்றும் பிள்ளைகளைத் தாக்கிய வரணி குடமியன் வாசியொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
குறித்த நபரின் மனைவி செய்த முறைப்பாட்டை அடுத்து அந்த நபரைக் கைது செய்த பொலிஸார் செவ்வாய்க்கிழமை அவரை நீதிமன்றில் முற்படுத் தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
இதேவேளை– மிருசுவில் பகுதியில் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மூன்று கோழிகளைத் திருடிய மிருசுவில் வாசியொருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அந்த நபரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மனநல பிரிவில் பரிசோதித்து இன்று வெள்ளிக் கிழமை நீதிமன்றில் முற்படுத்து மாறு உத்தரவிட்டார். (வ–9)

தென்மராட்சி

### ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய மட்டுவில் வாசியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை 14ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸார் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போது நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்துச் சோதித்தபோது சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகனவரி ஆகிய ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியதைக் கண்டுபிடித்தனர்.
அந்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 14 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

தென்மராட்சி

### தேங்காய்த் திருடன் பிடிபட்டான்

கச்சாய்ப் பகுதி தென்னந் தோட்டமொன்றில் 60 தேங்காய்களைத் திருடிய நபரொருவரைக் கைது செய்தனர் பொலிஸார். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை முற்படுத்தியபோது அந் நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் நீதிவான். (வ–9)

வவுனியா

### வவுனியா பஸ் நிலையத்தில் கஞ்சாவுடன் சிக்கிய நபர்

வவுனியா, நவ.14
வவுனியா பஸ் நிலையத்தில் கஞ்சாவுடன் நபரொருவரை செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா பஸ் நிலையத்தில் வந்திறங்கிய குறித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவரது கையில் இருந்த பணப்பையை சோதனையிட்டனர். அப்போது அவர் வைத்திருந்த கருவாட்டுபைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 650 கிராம் நிறையுள்ள கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்டவர் குருநாகல் பிரதேசத்தில் வசிப்பவர் என்றும்– யாழ்ப்பாணத்தில் இருந்து குருநாகலுக்கு கஞ்சாவைக் கொண்டு சென்ற சமயமே வவுனியா பஸ்நிலையத்தில் இறங்கியிருந்தார் என்றும்– விசாரணையின் போது தெரியவந்ததாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ–402)



மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தின் களுவன்கேணி கடலில் நேற்று கி.கணபதி என்பவருக்குச் சொந்தமான இழுவை வலையில் சுமார் இருபது லட்சம் ரூபா மதிக்கத்தக்க பெரும் எண்ணிக்கையிலான பாரை மீன்கள் பிடிபட்டுள்ளதை இங்கு காணலாம். (வ)

# பெரும்போக நெற்செய்கை மழை இன்மையால் பாதிப்பு

## படுவான்கரை விவசாயிகள் கவலை

படுவான்கரை, நவ. 14
மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் மழைநீரை நம்பி மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக வேளாண்மை போதியளவான மழை பெய்யாமையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் விவசாயிகள் கூறுகையில்,
நெல் விதைத்து இரண்டு மாதங்களாகின்றன. மழை இன்மையால் உயரமான பகுதிகளிலுள்ள நெற்பயிர்கள் உஷ்ணத்தால் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதை விட நிலக்கடலை, கௌப்பி, சோளன், பயறு போன்ற மேட்டு நிலப் பயிர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.
இந்த நிலையில், படுவான்கரைப் பகுதியான பழுகாமம் கமநல கேந்திர நிலையத்துக் குட்பட்ட பகுதியில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் வெளியில் பெரும்போக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மாரி மழை போதியளவாக பெய்யாமையால் இப்பகுதி விவசாயம் பாதிக்கப்படுவதாக தெரிவித்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.வேளவேந்தன், பழுகாமம் கமநல கேந்திர நிலையத்திலிருந்து இதுவரையில் ஒரு உரமூடை 350 ரூபா படி 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட உரமூடைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். (கு-10)

# மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா உதவி



கொழும்பு, நவ.14
பதுளையில், ஹல்துமுல்ல பகுதியில் கடந்த 23 ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர நிதியுதவிகள், பொருளுதவிகள் இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு சுமார் 5 மில்லியன் ரூபாவாகும்.
அவற்றை இந்தியத் தூதர் சார்பாக பிரதித் தூதுவர் ஏ.நடராஜன் ஊவா மாகாண ஆளுநர் சி.நந்தமத்தியூவிடம் கையளித்தார். இந்த நிகழ்வு பதுளை ஆளுநர் செயலகத்தில் நடந்தது.
சிறிய, நடுத்தர மற்றும் பெரிய மின்பிறப்பாக்கிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள், சமையல் உபகரணங்கள் உட்படப்பலபொருள்கள் பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. (ற)

### ஈழ அகதிகளை நாடு திரும்ப கட்டாயப்படுத்த வேண்டாம்

ஜி.கே.வாசன் கூறுகிறார்



சென்னை, நவ.14
தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை நாடு திரும்புமாறு நிர்ப்பந்திக்கக்கூடாது என்று ஜி.கே.வாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;
"இலங்கையில் தமிழர்களுக்கு உரிமை மற்றும் பாதுகாப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டியதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
பாதுகாப்பு இல்லாத காரணத்தாலேயே இலங்கை அகதிகள் நாடு திரும்ப அச்சமடைகிறார்கள். இலங்கையில் மறுவாழ்வுத் திட்டங்களை விரைந்து செயற்படுத்த வேண்டியது அவசியம் என வாசன் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

### கொதி எண்ணெய் பறந்ததில் மாணவன் மருத்துவமனையில்

தென்மராட்சி, நவ.14
கொதி எண்ணெய் உடலில் பாய்ந்த நிலையில் பாடசாலை மாணவன் சாவகச்சேரி மருத்துவமனையில் திங்கட்கிழமை மாலை சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு கத்தாப்படி வீதியில் இடம்பெற்றது. மாணவனின் சகோதரனுடைய முதலாவது பிறந்த தினத்துக்காக பலகாரங்கள் தயாரித்து விட்டு வீட்டுக்குள் கொதி எண்ணெயுடன் கொண்டு சென்ற சட்டியுடன் ஓடிவந்து மோதியதில் கொதி எண்ணெய் மாணவனின் முகம், நெஞ்சு, வயிறு ஆகிய இடங்களில் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
அதேஇடத்தைச் சேர்ந்த தர்மசீலன் தனுசாந்த் (வயது-7) என்ற மாணவனே காயங்களுக்கு உள்ளானவராவார். (வ-9)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் அரசு, மாகாண சபைகளிடம் இல்லை

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெனார்தன் கூறுகிறார்

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பிரத்தியேக திட்டங்கள் எதுவும் அரசிடமோ மாகாண சபைகளிடமோ இல்லை என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தன் தெரிவித்தார்.
கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், 06 குடும்பங்களுக்கான ஆடுகளை கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கன்னியா மாங்காயூற்று கிராமத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இதன்போது அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;
"நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிகள் போதுமானதாக இல்லை. வடகிழக்கில் போருக்குப் பின்னரான இன்றைய சூழலில், பல்லாயிரக் கணக்கான பெண்கள் உழைப்பாளிகளான தமது கணவன்மார் மற்றும் சகோதரர்களை இழந்துள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் இன்று பெரும் கேள்விக்குறியாகவுள்ளது.
2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்திலும் கூட பெண் தலைமையிலான குடும்பங்களின் வாழ்வாதாரம் தொடர்பாக அரசால் விசேட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை' என்று தெரிவித்தார்.

14 NOV 2014



## சவூதி ராஜ்யத்தில் உடனடி வேலை வாய்ப்பு

சவூதி ராஜ்யத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Category | Salary |
|---|---|
| Baladiya Driver | 1000+200+OT (First time driver) |
| Cleaner | 800+OT |
| Electrician | 1600+OT |
| Meason | 1500+OT |
| Painter | 1500+OT |

| Category | Salary |
|---|---|
| Cook | 1485+Food+OT |
| Tailor | 1300+200+OT |

அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம். கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.
(வங்கிக் கடன் செய்து கொடுக்கப்படும்)

**Arabian Gulf Enterprises**
No: 72/26, Srisangaraja Mawatha, Colombo-10.
Licence No: SLBFE. Reg. 969

உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை இல.26/2, ஸ்ரேசன் வீதி, வவுனியா. லங்கா வொய்சில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C/17638) (10.6.3)

வவுனியாவில் தொடர்புகொள்ள:
**LANKA VOICE - 0777 929 475**

## மணமகள் தேவை

யாழ். இந்து 5'4". B.Sc பட்டதாரி U.K பிரஜாவுரிமை மணமகனுக்கு படித்த 35-40 வயதுடைய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை

T.P: 077 4389802

## பொருளியல்

NB.கஜீதரன்
B.A,HNDA,PGDE,M.A(Econ)

A/L 2015 வங்கியியல்

A/L 2016 நிரம்பல் கோட்பாடு

Paper Class

NEC
யாழ் நகர்

## போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்களும் வழிகாட்டி நூல்களும்

- [illegible] 21ஆம் 22ஆம் திகதி பரீட்சைகளுக்கும் [illegible] 30ஆம் திகதி பரீட்சைக்கும் உரிய விடயங்கள் சனி, ஞாயிறு காலை 9.00 - 4.00 மணி வரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) நடைபெறும்.
- இப்பரீட்சைகளுக்கான திரு. தவசேகரின் வழிகாட்டி நூலை வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெறலாம்.
- சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(54077) (7.6.3)

T.P. 075 416 4564

## மரண அறிவித்தல்



### திருஞானசம்பந்தமூர்த்தி கஜேந்திரராசா (ராசன்)

4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தி. கஜேந்திரராசா (ராசன்) நேற்று (13.11.2014) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தமூர்த்தி- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், மல்லிகா தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இளங்கோ (கோபு), மனோகரன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, சறோஜினிதேவி, சந்திராதேவி, புஸ்பராணி, காலஞ்சென்ற குணாளினி (றஞ்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகராசா, சிவராசா, நேசரத்தினம், காலஞ்சென்ற கந்தசாமி, அழகரத்தினம் (லண்டன்), தனபாலசிங்கம், நவமணிதேவி, பத்மநாதன் (லண்டன்), சன்முகலிங்கம், சாம்பசிவம் (பிரான்ஸ்), விமலாதேவி, செந்தில்நாதன் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/17715) (10.6)

தகவல்: குடும்பத்தினர்,

## விசேட கருத்தரங்கு

விரைவில் நடைபெறவுள்ள SLAS மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை
பிரதி சனி 9-12மணி

Dec. நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
பிரதி சனி 1-5மணி

Nov. 22,23 ம் திகதிகளில் நடைபெறவுள்ள சுங்க பரிசோதகர், சுங்க அத்தியட்சகர் போட்டிப் பரீட்சை
பிரதி சனி 10-5மணி


விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

**நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி,யாழ்நகர்.
077 4 696 695

## தேவை

K.K.S Railway Station இல் வேலை செய்யக்கூடிய மேசன்மார், சட்டறிங் பாஸ்மார், கம்பி வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. (சி/17619) (7.6.3)

தொடர்பு :
077 375 1803, 071 454 0731




## சரவணா ரெக்ஸ்

**SARAVANA TEX**

திருமண பட்டுச் சாறிகள், சல்வார் துணிகள் மற்றும் றெடிமேட் ஆடைகள் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள

| | விற்பனை விலை | தள்ளுபடி விலை |
|---|---|---|
| Office wear சொக்கோ ஜீன்ஸ் (Prova Slim fit) | 2800/- | 1950/- |
| Office Wear சில்க் ஜீன்ஸ் | 2200/- | 1350/- |
| Office Wear சில்க் சாறி | | 490/- |
| Office Wear கொட்டன் சாறி | | 490/- |
| Office Wear கொட்டன் சல்வார் துணி | | 690/- |

- வாடிக்கையாளர்களின் வசதி கருதி வாரத்தில் எல்லா நாட்களும் வியாபார நடவடிக்கை நடைபெறும்
- வங்கிக் கடன் அட்டைகள் மற்றும் ஏனைய வங்கி அட்டைகள் மூலமும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்

இல. 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), (சிவன் கோவிலுக்கு அருகாமை), யாழ்ப்பாணம்.

இல.770, 772 ,கே.கே.எஸ் வீதி, (தட்டாதெரு சந்தி) யாழ்ப்பாணம்.

## வழிகாட்டல் கருத்தரங்கு (EB)

(அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான (DO) முதலாம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014.

விரிவுரையாளர்கள் : Mr. Rizwan Salahudeen (SLAS).
Mr. P. Muthulingam (SLACS-1).

காலம் : 15.11.2014 மற்றும் 16.11.2014 நேரம் : மு.ப. 8.30-பி.ப 3.30
இடம் : யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடம்
குறிப்பு : குறைந்த கட்டணத்துடன் Passpaper & Model Paper வழங்கப்படும்.

(54082) (10.6)

**ராஜா** நவீன டிஜிட்டல் ஒலி, ஒளி அமைப்புடன் மெருகேற்றப்பட்ட கர்ணன் சினிமாஸ்கோப் திரைப்பட விசேட காட்சிகளாக 15.11.2014 சனிக்கிழமையும் 16.11.2014 ஞாயிற்றுக்கிழமையும் தினசரி மூன்று காட்சிகளாக 10.30, 2.30, 6.30 காண்பிக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கட்டணம் ரூபா. 100/= வில் அனுமதிக்கப்படுவார்கள். பிள்ளைகளுடன் வரும் பெரியவர்களுக்கு சலுகைக் கட்டண ரிக்கற் வழங்கப்படும். பாடசாலைகள் ராஜா திரையரங்கு முகாமையாளருடன் தொடர்புகொண்டு மாணவர் எண்ணிக்கை, காட்சி நேரங்களை ஒதுக்கிக் கொள்ளவும். (54080)(10.6)

தொலைபேசி : 021 222 7334, 021 222 7332

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

தமிழ்நாடு ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கூடான யாத்திரை.

ஆரம்பம்: 08.12.2014 யாத்திரீகர் 10 நாள்கள் : 15
நிறைவு: 22.12.2014

திரிசிக்கும் ஆலயங்கள் சில: உச்சிப்பிள்ளையார், ஆறுபடைவீடுகள், பஞ்சபூதத் திருத்தலங்கள், 9 நவக்கிரக ஆலயங்கள், திருப்பதி, பிரம்மா கோயில், மைசூர் அரண்மனை, மதுரை மீனாட்சி, கன்னியாகுமரி, தஞ்சை பெருங்கோயில் உட்பட 70 இற்கும் குறையாத ஆலயங்களை திரிசிப் பதுடன் சமண மகாமிஷம் ஆச்சிரமம் மணக்குழவினாயகர், சுசீந்திரம் ஆஞ்சினேயர் சரஸ்வதி ஆலயமும் தரிசிக்கலாம். பாண்டிச்சேரி, பீச், மரீனா பீச், பூம்புகாரும் காணலாம்.

நாம் உங்களுக்காக.. இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை உயர்தர சைவ உணவு, 4 மணி கோப்பி, ரீ, நாளொன்றுக்கு ஒரு லீற்றர் மினரல் வோட்டர், தங்குமிடங்கள், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறையுடன் கூடிய றூம்கள், யாத்திரை முடியும் வரை. A.C வாகன வசதி, கொழும்பிலிருந்து எயார்போட் போக, வர வாகன வசதி என்பவற்றை வழங்குகிறோம்.

எமது சொந்த சேவையாக ஆலயங்களில் எடுக்கும் 50 புகைப்படங்களும், யாத்திரை முடிந்து எயார்போட்டில் இருந்து யாழ். செல்ல வாகன வசதியும் செய்து தரப்படும். யாத்திரை தொடங்கி முடியும் வரை நாமே உங்களுடன் வருவோம். சகல ஆலயங்கள் உள்ளே அழைத்துச் செல்வதுடன் சகல ஆலய நுழைவுக் கட்டணங்களும் எமது பொறுப்பு. வேறு எவரிடமும் தங்களை ஒப்படைப்பதில்லை. விருப்பமுடையவர்கள் பதிவு செய்யவும்.

மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
59,3/த, செட்டியார் தெரு, கொழும்பு-11
T.P: 0777 680 102, 011 303 0806
web:www.sridevipilgrims.com

(C/17712) (10.6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.